பிரசல்ஸ் தாக்குதலுக்கு பொறுப்பேற்றது ஐ.எஸ்.



பக். 14 - 15

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

35°c - 25°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 119 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 11, வியாழக்கிழமை 24.03.2016

# பலாலி - தமிழகம் விமான சேவை ஓராண்டுக்குள்

## தரமுயர்த்திய பின் நடத்தலாம் என்று இந்திய அதிகாரிகள் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 24
பலாலி விமான நிலையத்தைத் தரமுயர்த்தி, இன்னும் ஓராண்டுக்குள் அங்கிருந்து இந்தியாவுக்கான சேவைகளை ஆரம்பிக்க முடியும் என்று இந்திய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது. அத்துடன் பலாலி ஓடு பாதையை விஸ்தரிக்காமல் விமானத் தளத்தைத் தர முயர்த்த முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பக். 23



கோப்புப் படம்



பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்ஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், பிரான்ஸில் ஈபிள் கோபுரம் நேற்று முன் தினம் இரவு பெல்ஜியத்தின் தேசியக் கொடி வர்ணங்களாகிய கறுப்பு, மஞ்சள்,சிவப்பு மின்குமிழ்களால் ஒளியூட்டப்பட்டது. (து-ரி4)

## பாலம் அமைப்பது குறித்து இந்தியாவுடன் பேசவில்லை

### நாடாளுமன்றில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24
இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் பாலமொன்றை நிர்மாணிப்பது தொடர்பில், இந்தியாவுடன் எந்தவித பேச்சும் நடத்தப்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, பொது எதிரணியைச் சேர்ந்த கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில,
'தமது (பிரதமர்) இந்தியப் பயணத்தின்போது, இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் ஒரு பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பில் பேச்சு எதுவும் இடம் பக். 23

## சம்பூர் அனல்மின் திட்டத்தை துரிதப்படுத்த அரசு முயற்சி

### மின்சக்தி அமைச்சர் சபையில் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 24
சம்பூர் அனல்மின் திட்டத்தைத் துரிதப்படுத்த அரசு முற்படும் என்று மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.
அண்மையில் நாடுமுழுவதும் ஏற்பட்ட மின்தடை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதன்போது மின்சக்தி அமைச்சர் மேலும் கூறியதாவது:-
எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மோசமான மின்சார நெருக்கடியைத் தவிர்க்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே, சம்பூர் அனல்மின் திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். பக். 23

## சீனாவிடம் 1 பில்லியன் டொலர் கடன் வாங்குகின்றது இலங்கை

கொழும்பு, மார்ச் 24
ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான நாணயக் கைமாற்று உடன்பாடு ஒன்றை சீனாவுடன் அரசு ஏற்படுத்திக் கொள்ளவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதன்போது பிரதமர் தனது உரையில்,
வெளிநாட்டு நாணயக் கையிருப்பு தொடர்பாக, நாம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.
நாம் ஏற்கனவே இந்தியாவிடம் இருந்து நாணயக் கைமாற்றைப் பெற்றிருக்கின்றோம். இப்போது மேலும் ஒரு பில்லியன் டொலர் நாணயக் கைமாற்று உடன்பாட்டைச் சீன மத்திய வங்கியுடன் செய்து கொள்ளவிருக்கிறோம் - என்றார்.
இதேவேளை, அரசு, இந்த மாதம் இந்தி பக். 23

## மாணவி மீது துஷ்பிரயோக முயற்சி; நேற்றுக் கைதானார் பாடசாலை அதிபர்

யாழ்ப்பாணம், மார்ச் 24
கிளிநொச்சியில் உள்ள பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவி ஒருவரை, அந்தப் பாடசாலையின் அதிபர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது. இதையடுத்துக் குறித்த பாடசாலை அதிபர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த அதிபர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி, மாணவியின் உறவினர்கள் பாடசாலைக்கு முன்பாக நேற்று ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேளிடம் இது தொடர்பில் கேட்டபோது:-
இந்த விடயம் தொடர்பில் தமக்கு முறையிடப்பட்டுள்ளதால், சட்ட ரீதியில் அணுகுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதனால் அதிபரின் சம்மதத்துடன் ஒத்துழைப்பு வழங்கினோம் - என்றார்.

(விரிவான செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## அதிகாரம் பரவலாக்கப்படின் நாடு பிரியும் என்பது மாயை

### லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 24
அதிகாரத்தைப் பரவலாக்குவதால், நாடு பிரியும் என்ற வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. உலகின் பல நாடுகளில் அதிகாரம் பரவலாக்கப்பட்டதால் அவை பொருளாதார, சமூக, அரசியல் ரீதியில் முன்னேற்றங்களைக் கண்டுள்ளன. அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி, அதனைப் புதிய அரசமைப்பில் உள்ளடக்குவோம்.



இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரும் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல.
உலகின் மாற்றங்களுக்கேற்ப நாமும் மாறவேண்டும். சர்வதேசத்தை வெற்றி கொள்ளவேண்டும். நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து இன்று தேசிய அரசொன்றை ஏற்படுத்தி, அதன் முன்னுதாரணத்தை நாட்டுக்கும் வெளிநாடுகளுக்கும் காட்டியுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(விரிவான செய்தி 11 ஆம் பக்கத்தில்)

முச்சந்தி முரளி



விமானம் ஓடுறதிலதான் விடாப்பிடியா இருக்கினம் பாருங்கோ...

## கூகுள் வீதிப் படங்களில் வலி. வடக்கை காணோம்

கொழும்பு, மார்ச் 24
கூகுள் நிறுவனம் இலங்கையில் கூகுள் வீதிப் படங்களை நேற்று வெளியிட்டுள்ள நிலையில், அதில் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளைப் பார்வையிட பக். 23

## ஏப்ரல் 15 வரை கடுமையான வெப்பநிலை

யாழ்ப்பாணம், மார்ச் 24
தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலை, அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரைக்கும் நீடிக்கும் என்று, திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.
கடந்த இரண்டு தினங்களாக வடபகுதி உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவிமீது துஷ்பிரயோக முயற்சி; பாடசாலை அதிபர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 24
கிளிநொச்சியில் உள்ள பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவி ஒருவரை அந்தப் பாடசாலையின் அதிபர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. அதையடுத்து குறித்த பாடசாலை அதிபர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று அதிபர் மீது குற்றஞ்சாட்டியோர் குறித்த அதிபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி பாடசாலை முன்பாகப் போராட்டத்திலும் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர், குறித்த மாணவியின் பேரன் என்று கூறப்படும் ஒருவருக்கு அலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி, குறித்த மாணவியின் கல்விநிலை தொடர்பில் ஆராயும் நோக்கில் மாணவியின் மூத்த சகோதரர்களில் எவரையாவது பாடசாலைக்கு வருமாறு கூறியுள்ளார் என்று பாதிக்கப்பட்டவர் தரப்பில் கூறப்படுகிறது.

குறித்த நேரம் மூத்த சகோதரர்கள் வீட்டில் இல்லாததால், அவர்கள் இல்லை என்ற தகவலை அதிபருக்குத் தெரியப்படுத்துமாறு மாணவி பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அங்கு மாணவி சென்றபோதே அதிபர் மாணவியைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்றும் மாணவியின் தரப்பினரால் குற்றஞ்சாட்டப்படுகிறது.

குறித்த அதிபர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி மாணவியின் உறவினர்கள் பாடசாலைமுன்பாக நேற்று ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் குற்றஞ்சாட்டப்படும் அதிபரின் கருத்தை அறியமுடியவில்லை.

குறித்த பிரச்சினை காரணமாக சம்பவ இடத்திற்குச் சென்ற கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேளிடம் இது தொடர்பில் கேட்டபோது–

சம்பவம் தொடர்பில் நேற்று அறிந்து உடனடியாகப் பாடசாலைக்குச் சென்றேன். சம்பவம் தொடர்பில் ஆராய முனைந்த போது சிறிது நேரத்திற்குள் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வந்துவிட்டனர். இந்த விடயம் தொடர்பில் தமக்கு முறையிடப்பட்டுள்ளதால், சட்ட ரீதியில் அனுகுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதனால் அதிபரின் சம்மதத்துடன் ஒத்துழைப்பு வழங்கினோம் – என்று தெரிவித்தார்.

ஆயினும் குறித்த அதிபரோ மாணவியோ நேற்று மாலைவரை நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற-4,10)

# கிராமத்தவரின் வாழ்வைச் சிதைக்கும் மதுக்கடைகளை இழுத்து மூடுங்கள்

## வவுனியா நகரில் சுவரொட்டிகள்

கிராமப்புற மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையங்களை இழுத்து மூடுமாறு, மத்திய, மாகாண அரசுகளுக்கு கோரிக்கை விடுக்கும் சுவரொட்டிகள் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பால் ஒட்டப்பட்டுள்ளன.




வவுனியாநகர் மற்றும் கிராமப் புறங்களில் நேற்றுப் புதன்கிழமை ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகள் தொடர்பில் கருத்து தெரிவித்த அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் எஸ்.சதீஸ்குமார்–

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் எமது பிரதேசத்தில் நடைபெறும் குற்றச் செயல்கள் மேலும் அதிகரித்துள்ளன. அவற்றில் முக்கியமாக இடம்பெறும் சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள், கொலை, கொள்ளை மற்றும் விபத்துக் கொலைகள் போன்ற அனைத்து குற்றச்செயல்களுக்கும் மூல காரணமாக போதைப் பொருள் பாவனையே அமைந்துள்ளது.

தொழிலாளர் வர்க்கத்தை இலக்கு வைத்து கிராமப் புறங்களை நோக்கி மதுக்கடைகள் உருவாகி வருகின்றன. எமது மக்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களைச் சிதைக்கும் நோக்கோடு இவை நடைபெற்றுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி கிராமப் புறங்களிலுள்ள மதுச்சாலைகளை மூடுமாறும், புதிய மதுபான நிலையங்களுக்கு அனு மதி வழங்கக் கூடாது எனவும் மத்திய, மாகாண அரசுகளுக்கு கோரிக்கை விடுக்கின்றோம்.

இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு நிறைவேற்றும் வரை மக்களை அணி திரட்டி, மதுபான நிலையங்களுக்கு எதிராகப் போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுப்போம் என்றார். (ற-ரி5)




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசாவின் தாயார் சோமசுந்தரம் தையற்பிள்ளையின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. அதில் அரசியல் தலைவர்கள், சமூக அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற)



லொறியில் உமி மூடைகளுக்கு இடையே 40 முதிரைக் குற்றிகளை மறைத்து வைத்துக் கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். லொறியுடன் முதிரைக் குற்றிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். மல்லாவியில் இருந்து அவை கடத்திச் செல்லப்பட்டபோது தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவை மீட்கப்பட்டன என்றும், கைது செய்யப்பட்ட 4 பேரையும் இன்று நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,ரி3)

# மூன்று தினங்கள் பரமேஸ்வரா வீதி மூடப்படவுள்ளது

வீதிப் புனரமைப்பு வேலைகளுக்காக யாழ். பல்கலைக் கழக வளாக வீதி (பரமேஸ்வரா வீதி) எதிர்வரும் 25 ஆம், 26 ஆம், 27 ஆம் திகதிகளில் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்று நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த தினங்களில் கொங்கிறீட் கலவையிடும் வேலைகள் இடம்பெறவுள்ளதால், மேலும் 7 தினங்கள் வரையில் கனரக வாகனங்கள் எவையும் இவ் வீதியூடாகச் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது எனவும் இந்தக் காலப் பகுதியில் மாற்று வீதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் அவர் பொது மக்களையும் வாகன சாரதிகளையும் கேட்டுக் கொண்டுள்ளார். (ற-ரி2)

# தென்மராட்சியைச் சேர்ந்தவர் கனடாவில் நீதிபதியாக நியமனம்

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சட்டத்தரணி கனடா நாட்டில் உள்ள நீதிமன்றில் நீதிபதியாக நியமிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

சாவகச்சேரி–சரசாலை வடக்கைச் சேர்ந்த சட்டத்தரணி க.கதிர்காமசேகரரின் மகளான திருமதி தெய்வநாயகி ஜெகன் மோகன் என்பவரே கனடா ஒன்ராரியோ நீதிமன்றில் நேற்றுமுன்தினம் நீதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. கனடா நாட்டில் முதன்முறையாக தமிழ் பெண்ணொருவர் நீதித்துறையில் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-9)

# உருளைக் கிழங்குச் செய்கையில் நட்டம்

## இறக்குமதி வரி அதிகரிப்புக்குக் காலதாமதமானதால்

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்.குடாநாட்டில் இந்தமுறை உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளில் ஐம்பது வீதமானோர் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உருளைக்கிழங்கு இறக்குமதிக்கான வரி அதிகரிப்புக்கு கால தாமதம் ஏற்பட்டதன் காரணத்தால், ஏற்கனவே அறுவடை செய்த விவசாயிகள் போதிய சந்தை வாய்ப்பின்றிப் பாதிக்கப்பட்டனர். இதன் காரணத்தால் குறைந்தது ஐம்பது வீதமான விவசாயிகள் இந்தச் செய்கை மூலம் நஷ்டப்பட்டனர் என்று யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

உருளைக்கிழங்குச் செய்கையின் அறுவடை இன்னும் ஒரு சில நாள்களில் நிறைவடைந்து விடும். கடந்த போகங்களை விட, இந்தமுறை அதிகமான விவசாயிகள் எதிர்பார்த்த விளைச் சலைப் பெற்றிருக்கவில்லை. தற்போதைய கடும் வறட்சியும் காலம் பிந்தி நடுகை செய்தமை யும் மற்றும் காலநிலை மாற் றம் என்பவற்றாலும் எதிர்பார்த்த பயனை விவசாயிகள் பெறவில்லை.

அறுவடை ஆரம்பத்தின்போது இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு போதியளவு சந்தைகளில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

இதன் காரணத்தால் உள்ளூர் உருளைக் கிழங்கைச் சந்தைப்படுத்த முடியாது விவசாயிகள் சிரமப்பட்டனர். உருளைக்கிழங்கு இறக்குமதிக்கான வரியை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. விவசாயிகள் தரப்பில் இருந்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டும் அரசு காலம் தாழ்த்தியே இறக்குமதி வரியை அதிகரித்தது.

இதன் காரணத்தால் ஆரம்பத்தில் கிழங்கை அறுவடை செய்த ஐம்பது வீதமான விவசாயிகள் பெரும் நஷ்டப்பட்டனர். இந்தச் செய்கை மூலம் எதிர்பார்த்த பயனை அவர்கள் பெற்றிருக்கவில்லை என்றார். (ற-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதானார் பசிலின் மைத்துனர்



கொழும்பு, மார்ச் 24

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் மைத்துனர் திஸ்ஸ குணதிலகவை, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

காணி ஒன்றை வாங்கப் பயன்படுத்திய 50 மில்லியன் ரூபாவை, எவ்வாறு பெற்றார் என்பதை வெளிப்படுத்தத் தவறிய குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறையில், திஸ்ஸ குணதிலக வாங்கிய 50 மில்லியன் ரூபா காணி தொடர்பாக, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள திஸ்ஸ குணதிலகவை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(த-வ-5)

# ஈழ அகதியின் உணவு தவிர்ப்பு நேற்று நிறைவு

சென்னை, மார்ச் 24

தமிழக அகதி முகாமில் தங்கியுள்ள ஈழ அகதி ஒருவர், கணவனுடன் தன்னைச் சேர்த்து வைக்குமாறு கோரி, கடந்த மூன்று தினங்களாக மேற்கொண்டு வந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்று நிறைவு செய்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர் தயா புஷ்பராஜ் (வயது-32). இவரது மனைவி உதயகலா (வயது-30). இவர்களிருவரும் தங்களது இரு பெண் மற்றும் ஓர் ஆண் குழந்தைகளுடன் கடந்த 2011 ஆம் ஆண்டு இராமேஸ்வரத்துக்குப் படகில் சென்றனர். இவர்களை இராமநாதபுரம் கியூ பிரிவு பொலிஸார் கைது செய்து இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

நீதிமன்ற உத்தரவுப்படி உதயகலா மண்டபம் அகதிகள் முகாமிலும், கணவர் புஷ்பராஜ் திருச்சி அகதிகள் முகாமிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், உதயகலா மண்டபம் அகதிகள் முகாமில் கடந்த திங்கட்கிழமை இரவு முதல் தனது 3 குழந்தைகளுடன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். கணவனைத் தன்னுடன் இணைத்து வைக்குமாறு கோரியே, அவர் இந்தப்போராட்டத்தைத்தொடங்கியிருந்தார். மூத்த அதிகாரிகள் வாக்குறுதி கொடுத்தன் அடிப்படையிலும், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் அனுப்பிய சட்டத்தரணி கொடுத்த உறுதி மொழியாலும், உதயகலா தனது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடித்துக் கொண்டார். (த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இந்திராதேவி வேலாயுதம்

பிறப்பு: 1945.10.07 இறப்பு: 2016.03.23



மூளாயைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி வேலாயுதம் நேற்று (23.03.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-சிவக்கொழுந்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி-சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதத்தின் அன்பு மனைவியும், காங்கேயனின் அருமைத் தாயும், யமுனாவின் மாமியும், மதுஷா, கிருசாந், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராஜேந்திரா, கமலாதேவி, மகேந்திரா, விமலாதேவி, தெய்வேந்திரா, காலஞ்சென்ற ரவிந்திரா ஆகியோரின் சகோதரியும், கைலாசபிள்ளை பத்மஜோதியின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2016) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

தகவல்:
காங்கேயன் (மகன்)
T.P: 077 6030545

(70204) (10,17)

### திருமதி கனகம்மா சிவசுப்பிரமணியம்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சிவசுப்பிரமணியம் நேற்று (23.03.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் மகாலக்சுமி, ஜெயலட்சுமி, ரஞ்சன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கந்தையா, கனகேஸ்வரி, இராசம்மா காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னலட்சுமி, காசிநாதன், ரேவதி, கருணாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சதீஸ்கண்ணா மற்றும் சுமரஞ்சினி, டினேஸ்குமார், சுபராஜ், சுஜித்தா, சுகன்யா, கோபிராஜ், நிதிலா, பார்த்தீபன், பிரதீபன், சுகதீபன், துளசிகா, சுகிர்தா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலவனார் றோட்,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்.

Galaxy Star
வெற்றி வாரம் 045 திகதி 23.03.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
10 01 20 31 49
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 22,80,780/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2753 திகதி 23.03.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
03 07 50 70 L
போனஸ் இல. 11
சனிக்கிழமை ஜக்பொட் ரூ.1,11,84,375/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
2016.03.26 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

## மரண அறிவித்தல்

### குருசுமுத்து ஜஸ்ரின்

(இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்)



குளமங்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குருசுமுத்து ஜஸ்ரின் நேற்று (23.03.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து - எலிசபேத் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின், செபமாலைமுத்து, அல்பிறட், பேரின்பநாயகம், கொண்ஸ்சன்ரைன் குணரட்ணம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் றிச்சாட் (பிரான்ஸ்), றிச்மன் (டென்மார்க்), ஜெனனி, சாளினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேக்கா, விமலினி (டென்மார்க்), றியூறின், றஞ்சித், மோகன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் கோசிகன், பபிஷிகன், பிரிந்திக்கா, பரத், அஜந், றிஷானி, மெபின்ஷா, ஷாறா, ஷறோனி, ஷனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிநல்லடக்க ஆராதனை இன்று (24.03.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நவாலி தேவர்கட்டு திரு இருதய நாதர் ஆலயத்தில் இடம்பெற்று ஆரியம்பிட்டி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி வடக்கு, மானிப்பாய்.
021 225 5341

தகவல்:
குடும்பத்தினர்.

## யஜ்ஞோபவீத தாரண பிர்ம்மோபதேச அழைப்பு

விநாயக பெருமான் கிருபையை முன்னிட்டு ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான மன்மத வருஷம் பங்குனி மாதம் 11 ஆம் நாள் (24.03.2016) வியாழக்கிழமை சித்த யோகமும், அத்த நக்ஷத்திரமும் பிரதமை திதியும் கூடிய காலை 9.15 மணிமுதல் 11.05 மணிவரை உள்ள இடப லக்கின சுபமுஹூர்த்தத்தில்

| | |
|---|---|
| புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தா ஹரித்த கோத்திரம் பிரம்ம ஸ்ரீ சோ.பாலகிருஷ்ண சர்மா - புவனேஸ்வரி அம்மா தம்பதிகளின் பௌத்திரனும் | நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் தேவஸ்தான ஆதீனகர்த்தா கௌசிக கோத்திரம் பிரம்ம ஸ்ரீ கு.குமாரசாமி குருக்கள் சாவித்திரி அம்மா தம்பதிகளின் தௌஹித்திரனும் |

நல்லூர் கைலாச பிள்ளையார் ஆதீனகர்த்தா ஸ்வர்க்க ஸ்ரீ.கு.மணிக்குருக்களின் பேரனும்

எமது கனிஷ்ட புத்திரனுமாகிய

### சு.வார்ஷேயன் சர்மாவிற்கு

சௌள உபநயன, பிரம்மோபதேசம் செய்ய ஸ்ரீ சித்தி விநாயக பெருமானினதும், ஸ்ரீ கைலாச விநாயக பெருமானினதும் அனுக்கிரஹத்துடன் விப்ரசிரேஷ்டர்களின் ஆசியுடனும், மேற்படி சுபமுஹூர்த்தம் நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையாரின் சந்நிதியில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளதால், அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து உப வீதனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதீனகர்த்தா, ஆயாக்கடவை
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்,
புன்னாலைக்கட்டுவன்.
021 300 7361

தங்களின் நல்வரவை நாடும்
பிரம்மஸ்ரீ பா.சுந்தரராஜ சர்மா
ஜெய்லக்ஷ்மி தம்பதிகள்

## திருமண வாழ்த்து



இன்று 24.03.2016 வியாழக்கிழமை தொண்டமனாறு செல்வச்சந்தி முருகன் ஆலயத்தில் திருமணப்பந்தத்தில் இணையும் செல்வன் பூதன் பாலசுதன் செல்வி ஜெயசுதா ஜெயவீரசிங்கம் ஆகியோர் சீரும் சிறப்புடனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

தட்டுதட்சம்பாதி
துன்னாலை மேற்கு.
கரவெட்டி.

வாழ்த்துபவர்கள்
சித்தப்பா கு.இரத்தினசிங்கம் (குணம்)
குடும்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியம் பெறுவோரை ஏமாற்றி பணம் பறிக்கின்றது ஒரு கும்பல்

## அவதானமாகச் செயற்படுமாறு ஓய்வூதியத் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 24

ஓய்வூதியப்பணம்பெறுபவர்களை ஏமாற்றி பணம் பறிக்கும் கும்பல் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

செலுத்தப்படவுள்ள நிலுவைப் பணத்தைத் தாம் செலுத்துவதாகக் கூறி இந்தக் கும்பல் பொது மக்களை ஏமாற்றி வருகின்றது என்றும், நாட்டின் பல பிரதேசங்களிலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்றும் ஓய்வூதியத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பிரதேச செயலகங்களிலுள்ள கணக்காளர்கள் அல்லது ஓய்வூதிய திணைக்கள அதிகாரிகள் எனக் கூறி மக்களின் இல்லங்களுக்குச் சென்று இவ்வாறு மோசடிகளில் ஈடுபடுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பணத்தை வசூலிப்பதற்கு தமது திணைக்களமோ அல்லது பிரதேச செயலக காரியாலய அதிகாரிகளோ நியமிக்கப்படவில்லை என்று ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொதுமக்கள் தாம்மால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைப் பணம் தொடர்பில் பிரதேச செயலகங்கள், ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகள் அல்லது 1970 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாகத் தொடர்புக் கொண்டு ஓய்வூதியம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மோசடிகளில் ஈடுபடும் கும்பல்கள் குறித்து 119 என்ற பொலிஸ் அவசரப் பிரிவுக்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையங்கள் மற்றும் ஓய்வூதிய திணைக்களத்தின் 1970 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும் அறிவிக்குமாறு ஓய்வூதியத் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (ற-5)

# பொதுக் கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 24

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சிப் பிரிவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக கணக்காளர் திருமதி வ.மனோகரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், சனச அபிவிருத்தி வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் எஸ்.சபேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-9)

வாடகைக்கு

யாழ்ப்பாணம்.பருத்தித்துறை வீதிக்கு அண்மையாக பணிபுரியும். படிக்கும் பெண்கள் இருவர் தங்கக் கூடிய அறை,சமையலறை வசதியுடன் வாடகைக்குண்டு (86533)(2.19.20)

075 554 9402

அறிவித்தல்

வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமை யாளர் கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டம் 22.03.2016 மதியம் 01.30 மணி அளவில் அல்வாய் முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இவ்வாண்டிற்கான புதிய நிர்வாக அங் கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் : செல்வராசா பரமேஸ்வரராசன்
செயலாளர் : சீனியன் சிவசேகரன்
உப தலைவர் : கவிலாய சிங்கம் திருச்செல்வம்
உபசெயலாளர் : கந்தசாமி முகுந்தன்
பொருளாளர் : மிக்கல்பிள்ளை அன்ரன் பெனிக்றொபின்சன்
நிர்வாக உறுப்பினர் (i) சுப்பிரமணியம் சந்திரகுமார்
(ii) அப்புக்குட்டி குலசேகரன்
(iii) சிதம்பரம்பிள்ளை பார்தீபன்
(iv) சிவபாதம் இராஜேஸ்வரன்
(v) ஜெயராசா ஜெயகுமார்
(vi) இராசகுணம் தமிழ்அழகன்

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செயலாளர்:
வடமராட்சி மணல்
ஏற்றும் வாகன உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம். (சி.22220) (13.17.19)

VACANCY IN UK BASED COMPANY

Leading Whole sale Company based in United kingdom require below mentioned post for their newly started back office in Sri Lanka.

Salary
1. Tele-Marketing Operator: 25000 - 40000
(Minimum 2 years experience in marketing)
2. Accounting Clerk: 25000 - 40000
(Part qualification in CIMA or ACCA or CA will be expected with experience)

Note: - All the candidates should be Proficiency in English and with computer knowledge.

Working hours is merged with UK working hours
→From 1pm to 10pm (Sri Lankan time)

Send your CV to gsnn.slk@gmail.com by mentioning the post that you are interested to apply on the subject of the E-mail application.
Contact for further details: 021 221 6656, 077 806 5319

# அமைச்சர்கள் சிலர் கட்சி தாவத் தயார்!

## தகவல்கள் வெளியாகின்றன

கொழும்பு, மார்ச் 24

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் ஐவர் மற்றும் பிரதி அமைச்சர்கள் மூவர் உட்பட சிலர், மகிந்த தரப்பு கூட்டு எதிர்க் கட்சியைச் சேர்ந்த இருவருடன் இரகசிய கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது அமைச்சுப் பதவிகளைக் கைவிட்டுச்செல்வதற்கு, குறித்த உறுப்பினர்கள் ஆயத்தமாக உள்ளனர் என்று கூட்டு எதிர்க் கட்சிப் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அதற்கமைய எதிர்வரும் நாள்களில் அரசியல் ரீதியில் தீர்மானமிக்க தினத்தில் இந்தக் கட்சித் தாவல் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை- இதற்கு முன்னர் முன்னணி மற்றும் சுதந்திரக் கட்சியில் பதவி வகித்த தற்போதைய அமைச்சர்கள் இருவர், தங்கள் பதவிகளிலிருந்து விலகி அரசியலில் இருந்து ஓய்வுபெறவுள்ளமையும் இதன் ஊடாக இடம்பெறவுள்ளது.

குறித்த இருவரும் கொழும்பு மற்றும் குருநாகல் மாவட்ட உறுப்பினர்களாவர் என்று அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற-5)

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்வி அலகால் நடத்தப்படும் கேக் ஐசிங் வடிவமைப்பு, அடிப்படை எழுத்தறிவூட்டல், நவீன ஆடை வடிவமைப்பும் தயாரிப்பும், முக ஒப்பனையும் தலையலங்காரமும், வெல்டிங் (மின்வெட்டுதல் தொழில்நுட்பம்), கணினிப் பயிற்சி நெறிகளுக்கு, போதனாசிரியர் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜா தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அபிவிருத்திப் பிரிவில் பெற்று, எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக மீள ஒப்படைக்குமாறும், மேலதிக விவரங்களை அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ரி)

# தாஜுதீனின் விசாரணைகளை விரைவுபடுத்துமாறு உத்தரவு

## கொழும்பு மேலதிக நீதிவான் பிறப்பித்தார்

கொழும்பு, மார்ச் 24

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இலங்கையின் பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் உயிரிழப்பு சம்பந்தமான விசாரணை நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸ் இரகசியப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, அரசதரப்பு சட்டத்தரணி டிலான் ரத்னாயக்க, இந்த விசாரணை நடவடிக்கைகளை இறுதி செய்வதற்காக மேலும் இரண்டு மாத கால அவகாசம் வழங்குமாறு நீதிமன்றைக் கோரியிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சிசிரீவி காட்சிகள் பரிசோதனை செய்யப்படுகின்றபோதும், அந்தப் பரிசோதனை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றங்கள் கிடைக்கவில்லை என்றும் அரச தரப்புச் சட்டத்தரணி கூறினார்.

நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கவனத்தில் எடுத்த மேலதிக நீதிவான், குறித்த வழக்கை மே மாதம் 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்டார்.

அன்று இந்தப் பரிசோதனைகளின் முன்னேற்றங்களை வெளிக்காட்டும் அறிக்கை ஒன்றை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டார். (ற-5)

முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்களுக்கான செயலமர்வும், நூலகத் திறப்பு விழாவும்

இடம்: திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி வளாகம்.
காலம்: 26.03.2016 சனிக்கிழமை, மாலை 3.00 மணி
தலைவர்: கலாநிதி பா.தனபாலன்(நிபுணத்துவ ஆலோசகர், கல்வியமைச்சு)

பிரதமவிருந்தினர்
திரு. T.K. ஆனந்தராசா
(முகாமையாளர் பீப்பிள் லீசிங் பைனாஸ் பி.எல்.சி.யாழ்ப்பாணம்)

பிரதம வளவாளர்
திரு. K.கௌதமன்
(தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பொறுப்பதிகாரி)

சிறப்பு விருந்தினர்
திரு. க.கமலகரன்
(முகாமையாளர் பீப்பிள் லீசிங் பைனாஸ் பி.எல்.சி.சுன்னாகம்)

அனுசரணை: People's Leasing Finance PLC
Chunakam Branch.

# நீர்வேலியில் வாழைக்குலைகள் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 24

நீர்வேலி மேற்கு, மாலை வைரவர் கோயிலடிப் பகுதியில் உள்ள வாழைத்தோட்டத்தில் இருந்து பத்துக்கும் மேற்பட்ட வாழைக்குலைகள் திருடர்களால் வெட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாழைக்குலை திருட்டுச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. கடந்த ஜனவரி மாதத்திலும் இந்தப் பகுதியிலுள்ள தோட்டங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வாழைக் குலைகள் திருடர்களால் களவாடப்பட்டிருந்தன.

இந்தத் திருட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து வாழைச் செய்கையாளர்கள் தங்கள் தோட்டங்களில் இரவில் காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். (ற-17)

# விற்பனைப் பிரிவு திறப்பு இன்று

கொடிகாமம் - தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கண்டி வீதியில் உள்ள கூட்டுறவு நகர் வியாபார நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டடத் தொகுதியில் விவசாய உள்ளீடுகள் விற்பனைப் பிரிவு ஒன்று இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத் திறப்பு விழாவில் சங்கத்தின் கிளைத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரைக் கலந்து சிறப்பிக்குமாறு பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ற-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 24

புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியின் சாலியவெல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

பௌர்ணமி தினமான நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் சமய வழிபாடுகளுக்காக வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மூவர் மீது லொறி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

பீ.ஏ.ஹேமலதா (வயது - 62), கே.ஏ.யசோஹாமி (வயது - 83) மற்றும் இமல்கா ஹேசான் (வயது - 12) ஆகிய மூவருமே உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த சிறுவ்னும், சிறுவனின் அம்மம்மா மற்றும் அப்பம்மா ஆகிய மூவரும் வீட்டிலிருந்து அந்தப் பிரதேசத்தில் உள்ள பௌத்த விகாரையை நோக்கி வீதியில் நடந்து சென்று கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது புத்தளம் திசையிலிருந்து அந்த வீதியில் வேகமாக வந்த லொறி வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தவர்கள் மீது மோதிவிட்டுத் தலைமறைவாகியுள்ளது.

இரு பெண்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், சிறுவன் பலத்த காயங்களுடன் புத்தளம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த சிறுவனை விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியே லொறியில் ஏற்றிக்கொண்டு புத்தளம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சேர்த்துள்ளார் என்றும், மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் சிறுவன் காயமடைந்துள்ளான் என்று தெரிவித்து வைத்தியசாலையில் சிறுவனை சேர்த்துவிட்டு அங்கிருந்து லொறியுடன் தப்பிச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், வைத்தியசாலைப் பணியாளர் ஒருவர் குறித்தலொறியின் இலக்கத்தைக் குறித்துக் கொண்டுள்ளார் என்றும் அந்த இலக்கத்தை வைத்து குறித்த லொறியை அடையாளம் காண்பதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)

## நிர்வாக சபைத் தெரிவு

வரணி, மார்ச் 24

கரம்பைக் குறிச்சி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த வாரம் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் இ.சுதாகர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சதீஸ்வரன், பிரதேச கிராம அலுவலர் ந.இராசலிங்கம் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அதில் தலைவராக கி.சிவானந்தராஜா, செயலாளராக இ.சுதாகரன், பொருளாளராக ந.ஜெகன், உபதலைவராக க.ஜெயக்குமார், உபசெயலாளராக க.கந்தையா ஆகியோரும் 8 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-122)

# 6,102 மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றனர்

### க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில்

கொழும்பு, மார்ச் 24

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 6 ஆயிரத்து 102 மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றுள்ளனர் என்றுபரீட்சைகள் ஆணையாளர் ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய 2 லட்சத்து 74 ஆயிரத்து 324 பாடசாலைப் பரீட்சார்த்திகளில்ஒருலட்சத்து89ஆயிரத்து 428 பரீட்சார்த்திகள் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 69.33 வீதமான மாணவ மாணவியர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன், 84 ஆயிரத்து 796 மாணவ,மாணவியர் பரீட்சையில் சித்தியடையவில்லை எனப் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

## உழைக்கும் ஊடகவியலாளர் சங்க அங்கத்தவர்களுக்கு காப்புறுதித் திட்டம்

கொழும்பு, மார்ச் 24

ஊடகவியலாளர்களின் நலன் கருதி இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிமுகம் செய்யும் புதிய காப்புறுதித்திட்டம் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காப்புறுதியில் வைத்தியசாலை அனுமதி, சத்திர சிகிச்சைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய செலவினங்களுக்கான காப்பீடும்உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் 5 லட்சம் ரூபா பெறுமதியான பிரத்தியேக விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படவுள்ளது.இதற்கான தனி நபருக்கான கட்டணம் 13 ஆயிரத்து 469 ரூபாவும், குடும்பமொன்றுக்கு 16 ஆயிரத்து 879 ரூபாவும் தவணைக் கட்டணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-ரி5)

## ஜீவசுதனுக்கு விரைவில் பாராட்டு விழா

மலேசியா அரச அறிவியல் பல்கலைக் கழக புலமைப் பரிசிலைப் பெற்று சமூகவியல் துறையில் கலாநிதிப் பட்டத்தையும், யாழ்.பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளர் நியமனத்தையும், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் முன்னோடித் தலைவரும்,புனர்வாழ்வு கல்வி அபிவிருத்திச் சமாசத்தின் பிரதம ஆலோசகருமான சு.ஜீவசுதன் பெற்றுக் கொண்டுள்ளார். இவருக்கு விரைவில் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)

## கலாசார அதிகார சபை அமைப்பு

வடமராட்சி, மார்ச் 24

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலை இலக்கியத்துறையை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச கலாசார அதிகார சபை, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அமைக்கப்படவுள்ளது. பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.கலை இலக்கியத்துறையைச் சேர்ந்தவர் களும், ஆர்வலர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-173)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

எமது நிறுவனத்தில் பணிபுரியும் திரு.
ஞானசேகரம் கணேசலிங்கம் அவர்கள்
யாழ்.பல்கலைக் கழகத்தின் கலைமாணி (BA)



பட்டத்தை 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை பெற்றுக் கொண்டார். இவரை மேலும் பல பட்டங்கள் பெற மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
AIA காப்புறுதி நிறுவனம், யாழ்ப்பாணம்.

சேவைநலன் பாராட்டு

ஆசிரியர்
சிதம்பரநாதக் குருக்கள் சண்முகானந்த சர்மா
(B.Sc., PGDE SLTS I)



யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பதினேழு வருடங்கள் கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாட ஆசிரியராக அரும்பணியாற்றி

இன்று (24.03.2016) சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் இவரின் அளப்பரும் சேவையை போற்றுவதோடு இவரின் ஓய்வுகாலம் சிறக்கவும் இறையாசி நிறைவாகப் பொழியவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரிய சகோதரத்துவம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

85 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

24.03.2016




சின்னத்தம்பி நாகராசா
(யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள், கைதடி மார்க்கண்டு சுவாமிகள், (கந்தசுவாமிகள் சோல்பரிப் பிரபுவின் மகன் ஆகியோரின் அணுக்கைத்தொண்டர்)

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாக கொண்டவரும் யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளின் சொற்படி லண்டன் மாநகரத்திற்கு சென்று யோகர் சுவாமிகளின் ஆச்சிரமத்தை அமைத்து நீண்டகாலமாக வாழ்ந்துவருகிறார். அவரும் அவரது குடும்பமும் எல்லா நலன்களும் பெற்று நீடூழிவாழ வேண்டுமென எல்லாம் வல்ல கைதடி வீரகத்திப்பிள்ளையாரை அன்பாக வேண்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
தம்பி சி.சுப்பிரமணியமும்
அவரது மனைவியும்,
பிள்ளைகளின் குடும்பங்களும்.
கைதடி கிழக்கு, கைதடி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி தர்சிகா கங்கநாதன்



யா/ வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி மாணவியான செல்வி தர்சிகா கங்கநாதன் கடந்த வருடம் (2015) நடைபெற்ற க.பொ.த சாதாரண பரீட்சையில் (ஆங்கில மொழி மூலம்) 8A,C பெற்று சித்தியடைந்தமையை பாராட்டி வாழ்த்துவதுடன் மென் மேலும் கல்வியில் சிறப்புற நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மனைப் பிரார்த்திகின்றோம்.

வாழ்த்துவோர்
பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் மாணவனும்
சிவ ஸ்ரீ சுப்பிரமணிய கௌரிபாலக் குருக்கள் மஞ்சுஸ்ரீ தம்பதியரின் கனிஷ்ட புதல்வன்
கௌ. பாரத்வாஜசர்மா அவர்கள்



நடந்து முடிந்த க.பொ.த. சாதாரண பரீட்சையில் 9A அதிசித்தியடைந்மையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மென்மேலும் வளர எல்லாம் வல்ல கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானையும் அல்லையம்பதி முருகனையும் வேண்டிக்கொள்வதோடு மேலும் அவருக்கு கற்பித்த ஆசிரியர் பெருந்தகைகளுக்கும் எங்களது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
கெ.மயூகரசர்மா - அத்தான்,
கௌசல்யா - அக்கா மற்றும்
மயில்மாமா - குடும்பத்தினர் சாரதாபீடம்
லண்டன்
(70195)
(13.19.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

கடந்த சனிக்கிழமை வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் எமக்குக் கிடைத்த பாடசாலை ரீதியான முடிவுகள்.

**வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

9 ஏ (ஆங்கிலமொழி மூலம்)
க.அபிராமி, அ.அபிலாசா, ம.மிலேனி கிருசாந்தி, கோ.தீபனா, க.வைஷ்ணவி,
(தமிழ்மொழி மூலம்)
ச.சங்கவி, க.அபர்ணா, போ.கோபிசாலினி, அ.கேசவி, க.கர்சிகா, நே.கிஷாந்திகா, ஸ்ரீ.பிரசன்யா, ச.சாரங்கா, செ.ஹம்சிகா, ர.ஜசிந்தா, க.ஜிவித்தனா, து.நுர்மிலா, க.சங்கவி, வி.தர்சனா, க.வர்த்தினி, வி.விமலினி, ச.அபினயா, ஸ்ரீ.நிரூபிகா, ச.தினுஜா
8 ஏபி (ஆங்கிலமொழி மூலம்)
இ.ஹம்சிகா, பு.கஜனி, யு.கமீலியா, ப.கஸ்தூரி, தே.மதுராங்கி, க.தேவந்தி, சி.தேவசாயினி, தே.துவாரகா, ர.ஜதுஷா, ஜ.தாருகா
(தமிழ் மொழி மூலம்)
ஞா.மதுஷா, சி.வேணுகா, அ.ஜொஸ்லின் ஜனு, பீ.லூட்ஸ் கிளாரா, ஞா.அபிஷாயினி, ஜெ.மீனா, சி.சாதுரிகா, ம.தேன்நிலா, கு.கஜேந்தினி, ரா.தக்ஷாயினி, சு.ஆர்த்திகா, சி.தயானி, ப.ஜீவலக்சி, பா.சாதனா, ஐ.அஜந்தா, ஸ்ரீ.சந்தியா, அ.சுவேந்திரா.
8ஏசி
(ஆங்கில மொழி மூலம்)
சி.அபிராமி, பா.கஜானி, க.லதாங்கினி, இ.பவித்திரா, கு.சகானா, ஸ்ரீ.சதுர்த்திகா, சி. சிவப்பிரியா, க.தர்சிகா,
(தமிழ் மொழி மூலம்)
மா.ஷாரு, க.வருண்யா, த.அனோயா, ம.ஆதித்தியா, சீ.ஜீவிதா, த.ஈழநிலா, பா.ரிஷ்மிலெஸ்லீ, ச.அபிராமி, ஜெ.அபிராமி, ஸ்.தர்மிலா, ஸ்ரீ.லாவன்யா, செ.துவேதிகா, வீ.அக்சயா, த.மிதுஸ்டா,
8ஏஎஸ் –
(ஆங்கிலமொழி மூலம்)
த.சுரபிகா,
(தமிழ்மொழி மூலம்)
அ.அனற்அபிஷா, ஆ.அருந்தா
(தமிழ் மொழி மூலம்)
7ஏ2பி
செ.தமிழினி, தி.அபிராமி, சௌ.தர்சிகா, வி.ஜெனோஷா, து.கஜலக்ஷ்மி, ஜெ.சுபினயா, சி.துளசினி, ஜெ.துஷாயினி, சி.யதுர்னா, பு.கஜானா, த.சுபானா, பு.துஷானி, உ.விவேகா
7ஏபிசி
சி.ஜெரோமி, ஸ்ரீ.குகாயினி, ஜெ.சாரங்கி, இ.லதாங்கி, த.தர்மிகா, சி.லக்சியா, செ. சிந்துஜா, நே.வினுஷா, கு.விதுர்னா,
7ஏபிஎஸ்
இ.யூடினி
(ஆங்கில மொழி மூலம்)
7ஏ2பி
இ.அஞ்சனா, வி.தனூா, சி.திருவிழி,
7ஏபிசி
வி.கோபிகா, சி.சுபாங்கி, கி.தேனுகா
7ஏபிஎஸ்
சி.சுஜிதா

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

எஸ்.துவாரகி 9ஏ, ஆர்.வர் சிகா 9ஏ, ஏ.மதுசன் 8ஏ,சி, ஜே.நிதர்சன் 8ஏ,சி, ஆர்.வித்ய பிரகாஷ் 8ஏ,பி, வை.மாதுரி 8ஏ,சி, யு.சாம்பவி 8ஏ,பி, வி.கௌசிகன் 7ஏ,பி,சி, ஜே.லதுர்சனன் 7ஏ,பி,எஸ், வி.பிரிந்தன் 7ஏ,பி, ஆர்.எஸ்.மரீன்ராஜ் 7ஏ,பி,சி, எஸ்.பிரகாஸ் 7ஏ,2பி, என்.சங்கீர்த்தனன் 7ஏ,2பி, வி.சசிதரன் 7ஏ,2பி, வி.நிறோசிகா 7ஏ,பி,சி, ரி.பிரணவி 7ஏ, 2பி, கே.யதுர்சிகா 7ஏ,பி,எஸ், ஆர்.அஜந்தா 7ஏ,பி,சி, எம்.கீதப்பிரியா 7ஏ,பி,சி, எஸ்.பிரவீனா 7ஏ,2பி, ஆர்.துளசிகா 7ஏ,2பி, யு.குருபரன் 7ஏ,பி,எஸ், கே.தனுராஜ் 6ஏ,2பி,எஸ், எஸ்.கஜானன் 6ஏ,3பி, ஈ.மதிலயானன் 6ஏ,2பி,சி, ஜே.கோபிராஜ் 6ஏ,2பி,சி, கே.விதுன் 6ஏ,பி,சி,எஸ், எஸ்.கஜானா 6ஏ,பி,2சி, ஜே.நிலக்சனா 6ஏ,2பி,சி, கே.தட்சாயணி 6ஏ,3பி, கே.தன்மிலிசாய் 6ஏ,2பி, எல்.மதுமிலா 6ஏ,3பி, எஸ்.தட்சா 6ஏ,2பி,சி, வி.பிரணவன் 6ஏ,2பி,எஸ், கே.திலக்சனா 6ஏ,3பி, ஆர்.ஆதித்தன் 5ஏ,3பி,சி, கே.கஜானன் 5ஏ,2பி,சி,எஸ், வை.துளசியன் 5ஏ,3பி,எஸ், வை.சியாமளவாசுதேவ 5ஏ,2பி,2சி, ஆர்.ஸ்ரீராஜதீபன் 5ஏ,3பி,எஸ், ரி.ரதீபன் 5ஏ,3பி,சி, ஏ.வினோஜன் 5ஏ,3பி,எஸ், கே.தங்கேஸ்வரி 5ஏ,2பி,2சி, ஏ.மதியங்கா 5ஏ,பி,2சி,எஸ், எஸ்.சர்வாணனி 5ஏ,3பி,எஸ், என்.டனீனா 5ஏ,3பி,சி, ஆர்.பிருந்தா 5ஏ,2பி,சி.

**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

அ.அன்ரன் சிந்துஜன் 9ஏ (தமிழ்மொழி மூலம்), அ.கஸ்ரோ டிறோன் 9ஏ (ஆங்கில மொழி மூலம்), ப.நிலுக்சன் 8ஏ,பி, த.சஞ்ஜீவன் 8ஏ,பி (ஆங்கில மொழிமூலம்), பி.யூட் கனிஸ்ரன் 6ஏ,பி,சி, அ.டெஸ் மன் 6ஏ,3பி, பி.தொம்சன் 6ஏ,3பி, அ.அன்ரனி றொபின் ஸ்ரன் 6ஏ,பி,சி, சு.சபேன் 5ஏ, 4பி, த.திலக்சன் 5ஏ,3பி,சி, ரா.றொசான் 5ஏ, 2பி,2சி, அ.சார்ளஸ் அனோஜன் 5ஏ, 2பி,சி, எஸ், ர.ராஜ்குமார் 5ஏ, 2பி,சி, எஸ், த.டுகேசன் 5ஏ, 2பி,சி, எஸ், தே.வானுசன் 5ஏ, 3பி, அ.மொரின்ஸ்ரன் 5ஏ,பி, சி,எஸ்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

தமிழ் மொழி மூலம்
ஆர்.சாந்தரூபன் 9ஏ, ஆர்.பெஞ்சமின் 8ஏ,பி, எம்.யோநாதன் 7ஏ,பி,சி, எஸ்.சிவரதன் 7ஏ,பி,சி, வி.தேனுஜன் 7ஏ,2சி, கே.ஜெயராமன் 7ஏ,2சி, கே.சஜீதன் 6ஏ,3பி, பி.அஜீத் 6ஏ, 2பி,சி, என்.நிவேதன் 6ஏ,பி, 2எஸ், ஜி.நவநீதன் 5ஏ,3பி,சி, எஸ்.கோகுல்ராஜ் 5ஏ,3பி,சி, ஏ.கஜீவன் 4ஏ,2பி,3சி, ஆர்.விதுசன் 4ஏ,2பி,சி,2எஸ், எம்.சிவப்பிரியன் 3ஏ,5பி,சி, எஸ்.தர்சன் 3ஏ,4பி,2சி, ஆர்.சனுஜன் 3ஏ,4பி,சி,எஸ், எஸ்.துவாரகன் 3ஏ,4பி,சி,எஸ், கே.ஜேம்ஸ்போல் 3ஏ,3பி, 2சி,எஸ், பி.மதுசன் 3ஏ,2பி, 2சி,எஸ், எஸ்.சரண்ராஜ் 3ஏ, பி,5சி, எல்.லோமிகன் 3ஏ,பி, 2சி,3எஸ், பி.ஜங்கரன் 3ஏ,3சி, 2எஸ்.
ஆங்கிலமொழி மூலம்
அயல்ஸ்பெல்மன் 9ஏ, ரி.சண்முகப்பிரியன் 4ஏ,2பி, 2சி,எஸ்.

**மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

(ஆங்கில மொழி மூலம்)
1.கி.வினோஜான்8ஏபி
(தமிழ் மொழி மூலம்)
ச.லிங்கேஸ்வரன் 8ஏபி, ஐ.சிவாம்சன் 8ஏசி, பி.தாரணி 7ஏ2பி, வி.சேசகி 7ஏ2பி, சு.திலக்சனா 7ஏபிசி, சி.ஜெயதரன் 7ஏபிசி, த.சஜீவன் 7ஏபிசி, உ.கவியங்கா 6ஏ3பி, தெ.கிரிஜெந்தி 6ஏ2பிஎஸ், சி.சுஜீவன் 6ஏபிசிஎஸ், க.லோகிதாஸ் 6ஏபிசிஎஸ், து.கேசிகா 5ஏ3பிசி, சி.சங்கவி 5ஏ3பிஎஸ், ஞா.கஜிந்தன் 5ஏ2பிசிஎஸ், ச.சனாத்தனா 5ஏ2பிசிஎஸ், செ.டிலோஜன் 5ஏபி2சிஎஸ், ந.யஸ்மிலா 4ஏ4பிசி, கு.பிரதீஸ் 4ஏ4பிசி, ரா.பகீர்ராஜ் 4ஏ4பிஎஸ், அ.தர்சிகா 4ஏ4பிஎஸ், சி.யேனுகா 4ஏ3பி2சி, அ.கஜந்தினி 4ஏ3பி2சி, ர.தேனுகா 4ஏ3பிசிஎஸ், பா.யுவராஜ் 4ஏ3பிசி, ம.சுஜி பன் 4ஏ3பிசிஎஸ், வ.மகிழினி 4ஏ2பி 3சி, ர.லோகிகா 4ஏ2பி 2சிஎஸ், ஸ்ரீ.திசாணன் 4ஏ2பிசி2எஸ்,

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

ஏ.கௌசிகா 9ஏ (ஆங்கில மொழி மூலம்), பி.மகிழ்ரசி 9ஏ (ஆங்கிலமொழி மூலம்), ஆர்.நிவேதா 9ஏ, ஆர்.அபிராமி 8ஏ,பி, கே.கம்ாயினி 8ஏ,பி, ரி.பானுப்பிரியா 8ஏ,எஸ், பி.லவனியா 7ஏ,2பி (ஆங்கிலமொழி மூலம்), எம்.ஆதிரை 7ஏ,2பி, டி.டொறின் மேசி 7ஏ, பி,சி, கே.ருபிஷா 7ஏ,பி,சி, ஆர்.தர்சிகா 6ஏ,2பி,சி (ஆங்கிலமொழி மூலம்), என்.தரணியா 6ஏ,3பி, ஜே.ஜனனி 6ஏ,2பி,சி, கே.லக்சி 6ஏ,பி,2சி, பி.பவதாரணி 5ஏ,4பி, ஆர்.சுமித்தா 5ஏ,4பி, ஜே.பினுசியா 5ஏ,3பி,சி, எஸ்.பிரியங்கா 5ஏ,3பி,சி, எஸ்.சர்ப்பவதி 5ஏ,2பி,2சி, பி.விதுனா 5ஏ,2பி,2சி, ஆர். கீர்த்திகா 5ஏ,2பி,2சி, என்.இலக்ஸ் சியா 4ஏ,4பி, எஸ், ஜே.சுஜிபா 4ஏ, 3பி,2சி, ஜே. டிசானி 4ஏ,3பி, சி,எஸ், எஸ்.தர் சிகா 4ஏ,3பி,சி, எஸ், எஸ்.வர்சிகா 4ஏ,2பி, 3சி, யு. சுஜா 4ஏ, 2பி,3சி, எஸ். சோமிகா 4ஏ, 2பி, 2சி,எஸ், எஸ்.சஜஸ்ரினா 4ஏ,2பி,சி, 2எஸ், ஜே.டிலுக்சி 4ஏ,2பி, சி,எஸ்.

**கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி**

பி.பிருந்தாபன் 9ஏ, எஸ்.கஜலக்சன் 8ஏ,பி, வை.சஜந்தனா 7ஏ,2பி, பி.விதுாயினி 6ஏ, 2பி,சி, எஸ்.நிரூபராஜ் 6ஏ, 2பி,எஸ், பி.செறின் நிவேதா 6ஏ,2பி,சி, எஸ்.சாரங்கன் 5ஏ,4பி, ஆர்.கனிரதன் 5ஏ,2பி,சி,எஸ், எம்.அனோஜா 4ஏ,4பி,சி, என்.நிதுசனா 4ஏ,3பி,சி,எஸ்.

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

யோ.சுஜீவன் 8ஏ,சி, மு.டர்சிகன் 8ஏ,எஸ், ர.பகீ 7ஏ,பி, யோ.அபிராமன் 5ஏ,2பி,சி, எஸ், பா.மோகனப் பிரியன் 3ஏ,2பி,3சி, ரூ.ஏஞ்சல்சருயினி 3ஏ,பி,2சி,3எஸ், சோ.மதுசன் 2ஏ,3பி,2சி,எஸ், ம.ரஜனுஜா 2ஏ,2பி,4சி,எஸ், செ.பானுக்குமரன் 2ஏ,2பி,3சி, 2எஸ், ச.கயல்விழி 2ஏ,பி,4சி, 2எஸ், ம.கஜந்தன் 2ஏ,பி,2சி, எஸ், உ.யூட்விதூா 2ஏ,2சி, 4எஸ், ஜெ.மீனுஜா ஏ,4பி,4சி, யோ.துாந் ஏ,2பி,4சி,எஸ், த.பானுா ஏ,3பி, 4எஸ், பி.பிருத்திகா ஏ,2பி,4சி, எஸ், க.ஜெனுா ஏ,2பி,2சி, 4எஸ், சுகிர்தா ஏ,3சி, 3எஸ், அ.லக்சி ஏ,3சி, 3எஸ், கு.இலக்கியா 5பி,3சி, எஸ், நிறோச் 3பி,4சி, 2எஸ், யோ.நிலக்சனா 3பி,4சி,எஸ், வ.எஸ்தர் 3பி, 4சி,எஸ், வி.மேசிஜெயரூபி 3பி, 2சி,4எஸ்.

31 ஆம நாள் நினைவஞ்சலி



அமரர்
சபாபதி பசுபதி
(ஓய்வு நிலை உதவிப் பதிவாளர் திணைக்களம் அரச மொழி பெயர்ப்பாளர்)
மலர்வு
15.02.1930
உதிர்வு
23.02.2016

அன்புத் தெய்வமே அழகான எங்கள் குடும்பத்து ஆலமரமே
அப்பா பாசம் எனும் பாலை ஊட்டி நேசத்தால் எமைச் சீராட்டி
துன்பத்தில் எமக்கு ஊக்கமூட்டி நல்லதாய் நமக்கு நல்வழிகாட்டி வாழ்ந்த எம்
குடும்ப விளக்கே நாம் உள்ள மட்டும் உம்
நினைவிருக்கும் எம் உள்மனதில் எம் தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றோம்.

"பவானி பவனம்"
டச்றோட், உடுவில்.
021 2242501, 077 624 2839

நினைவலைகளுடன்
குடும்பத்தினர்.

நினைவின் நிஜங்கள்

8 ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு





மண்ணில் 1937.01.18
விண்ணில் 2008.03.12

மண்ணில் 1954.01.13
விண்ணில் 2015.04.05

திருமதி
பூபதி குமாரசாமி
(மாசிமாத வளர்பிறைப்பஞ்சமி)

செல்வி
பஞ்சகல்யாணி குமாரசாமி
(பங்குனிமாத தேய்பிறைப்பிரதமை)

அன்பு அன்னையையும் அன்னையின் மறுவடிவினையும்
இழந்த எம் நினைவுக்கனல்கள் நீறு பூத்த நெஞ்சுடன் எம்மிடம்......

"பூபதி"
ஐயனார் வீதி, கல்வயல்,
சாவகச்சேரி.

அனபகலா பிரியங்களுடன்
குடும்பத்தினர்.

வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.02.2016 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்
அமரர் மயில்வாகனம் சிவசுப்பிரமணியம்
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 25.03.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பஜனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"சிவவாசம்"
தேவலாய வீதி, மூளாய், சுளிபுரம்

மகன்மார்
சி. சிவமோகன்.
சி. சிவஞானவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோருக்குச் சான்றிதழை பெறுவதே பொருத்தமானதாக இருக்கும்

## உறவினர்களுக்கு ஆலோசனை கூறுகின்றார் பரணகம

கொழும்பு, மார்ச் 24
உறவினர்களைத் தொலைத்து விட்டு இருக்கின்றவர்கள், காணாமற் போனோர் தொடர்பான சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன். – இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

நாங்கள் கடந்த இரண்டு வருடங்களாக காணாமற் போனோர் குறித்து விசாரணைகளை நடத்தி வந்தோம். அந்த வகையில் இன்னமும் சிறிது காலத்தில் எமது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் நிறைவுக்கு வரவுள்ளன. அதன்படி விரைவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பரிந்துரைகளுடன் கூடிய எமது அறிக்கையைச் சமர்ப்பிப்போம் – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஜனாதிபதி ஆணைக்குழு, காணாமற்போனோர் பிரச்சினை தொடர்பில் பரிந்துரைகளையும் அறிக்கைகளையும் மட்டுமே வழங்குவதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மாறாக பிரச்சினைகளை நேரடியாகத் தீர்ப்பதற்கு அதிகாரமும் வளமும் எம்மிடம் இல்லை. ஆனால் நாங்கள் சில விடயங்களில் விசாரணைக் குழுக்களை அமைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்.

> ஜனாதிபதி ஆணைக்குழு காணாமற் போனோர் பிரச்சினை தொடர்பில் பரிந்துரைகளையும் அறிக்கைகளையும் மட்டுமே வழங்குவதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மாறாக, பிரச்சினைகளை நேரடியாக தீர்ப் பதற்கு அதிகாரமும் வளமும் எம்மிடம் இல்லை. ஆனால் நாங்கள் சில விடயங்களில் விசாரணைக் குழுக்களை அமைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்

ஒருசிலர் ஒன்றுக்கு மேற் பட்ட தடவைகள் எமது ஆணைக் குழுவிடம் காணாமற்போனோர் குறித்து முறைப்பாடுகள் செய்துள்ளமையை எமது விசாரணைக்குழு கண்டுபிடித்துள்ளது. அதாவது உறவினர்கள் பல தடவைகள் இவ்வாறு முறைப் பாடுகளைச் செய்துள்ளனர். எனவே மொத்தமாக காணாமற் போனோர் தொடர்பாக கூறப் படும் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படலாம்.

அத்துடன் உறவினர்களைத் தொலைத்துவிட்டு இருக்கின்றவர்கள், காணாமற்போனோர் தொடர்பான சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன். எனவே காணாமற் போனோரின் உறவினர்கள் அரசு வழங்கும் காணாமற் போனோர் குறித்த சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றார். (ற-5)

## மட்டுவில் தெற்கு அ.மி.த.கவுக்கு சிறந்த செயற்பாட்டுக்கான விருது



சாவகச்சேரி, மார்ச் 24
தென்மராட்சி கல்வி வலயத்தின் மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயத்துக்கு கல்வியினூடாக மாணவர்களுக்கு ஒழுக்க விழுமியங்களை வழங்குவதில் அக்கறை காட்டியமைக்கான சிறந்த செயற்பாட்டு விருது கிடைத்துள்ளது.

கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட விருதை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரவீந்திரன் வித்தியாலய அதிபரிடம் அண்மையில் வழங்கியுள்ளார்.

மாணவர்களிடையே அருகி வரும் ஒழுக்க விழுமியப் பண்புகளை வளர்ப்பதன் ஊடாக கல்விப் பெறுபேற்றை அதிகரித்தல் தொடர்பான ஆய்வுகளின் பிரகாரம் கல்வி அமைச்சால் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட மூன்று பாடசாலைகளில் மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலயமும் ஒன்றாகும்.

வித்தியாலயத்தின் செயற்பாடுகள் வலயக் கல்வி அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்டு உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டு தெரிவு செய்யப்பட்டது. உயர்கல்வி அமைச் சால் வலய ரீதியில் பாடசாலை களின் அதிபர்கள் கல்வி அமைச்சுக்கு வரவழைக்கப்பட்டு அங்கு அவர்களது நேரடிப் பார்வையில் மீளளிக்கை செய் யப்பட்டதன் பின்னர் சிறந்த செயற்பாட்டுக் கான விருதுக்குப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## சூடு பிடித்துள்ள பதநீர் விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச் 24
பனை அபிவிருத்திச் சபையின் சகல கற்பகம் விற்பனை நிலையங்களிலும் பதநீர் விற்பனை தற்போது சூடு பிடித்துள்ளது.

அதையடுத்து சகல கற்பகம் விற்பனை நிலையங்களுக்கும் போதியளவு பதநீர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று சபையின் அதிகாரி ஒருவர் கூறி னார்.

இந்தப் பதநீர், போத்தலில் பாதுகாப்பாக அடைக்கப்பட்டு நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுகின்றது. உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக இந்தப் பதநீர் விற்பனையை மேலும் அதிகரிக்கவும் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போதைய வெப்பம் மற்றும் வறட்சியான காலப்பகுதியில், இந்தப் பதநீர் விற்பனை சற்று சூடு பிடித்துள்ளது. தென்பகுதியில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் பதநீரை விருப்பத்துடன் வாங்கிப் பருகிச் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)

## மருதங்கேணி வீதியின் புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
வடமராட்சி கிழக்கில் பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதியைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் தற்போது தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. கடந்த வருட இறுதியில் பெய்த மாரி மழையால் இந்த வீதி சேதமடைந்தது. அதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதற்குச் சிரமப்பட்டனர்.

இந்தப் பிரதான வீதியை விரைவில் காப்பெற் வீதியாக மாற்றியமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-17)

## வங்காலை கிராமத்தில் புதிய பொலிஸ் நிலையம் திறப்பு




மன்னார், மார்ச் 24
நாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையை 600 வரையில் மேலதிகமாக உருவாக்கும் தீர்மானத்துக்கு அமைவாக மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வங்காலை கிராமத்தில் நேற்றுக் காலை "வங்காலை பொலிஸ் நிலையம்" வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்துக்கு அமைவாக, நாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையை 600 வரையில் மேலதிகமாக உருவாக்கும் தீர்மானத்துக்கு ஏற்பவே இந்த பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் பிள்யு.எப்.யு.பர்ணாந்தின் வழி நடத்தலின் கீழ் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் யட்டவரவால் குறித்த பொலிஸ் நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல், நானாட்டான் பிரதேச செயலர் என். பரமதாசன், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜந்த றொற்றிகோ, மற்றும் வைத்தியர்கள், உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-56)

## பொலிஸ் நெத் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 24
பொலிஸ் நெத் ஒளிப்படக் கண்காட்சி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் குற்றப் பதிவுப் பிரிவின் ஒளிப்படக் கூடத்தால் மூன்றாவது முறையாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள குறித்த கண்காட்சி, எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் மு.ப 9 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

மாலை 6 மணி வரை பொதுமக்கள் பார்வைக்கு திறந்திருக்கும் இந்தக் கண்காட்சியில் நீண்ட வரலாற்றுப் பாதையில் இடம் பெற்ற குற்றங்கள், அரசியல் வரலாற்றின் சிறப்புமிக்க தருணங்கள், பொலிஸ் வர லாறு, பொலிஸ் ஒளிப்படக் கலைஞர்களின் கலைக் கண்ணோட்டம் என்பவற்றைப் பதிவு செய்யும் வகையிலான ஒளிப்படங்கள் பார்வைக்கு வைக்கப்பட உள்ளன என்று யாழ்.பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

## கருத்துரை

யாழ்ப்பாணம் மார்ச் 24
பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் அமைந்துள்ள ஞானாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரோக்கிய வாழ்வும் கொழுப்பு உணவும் என்னும் தலைப்பில் கருந்துரையும் ஆலோசனையும் இடம்பெறவுள்ளன. இந்தக் கருத்துரையையும் ஆலோசனையையும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்தியர் வல்லிபுரநாதன் முரளி நிகழ்த்தவுள்ளார்.

அனைவரையும் இதில் பங்குபற்றி பயன் பெறுமாறு ஞானாலயத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ற-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்துக்கு கருங்கல் பொருத்தும் பணி ஆரம்பம்

மன்னார் அருள் மிகு திருக்கேதீச்சர ஆலய திருத்தலத்துக்கு இந்திய அரசின் நிதி உதவியுடன் இடம்பெற்று வரும் ஆலயத்தின் உட்பிரகார மண்டபத் திருத்தப் பணியின் ஒரு பகுதியான கருங்கல் பொருத்தும் வேலைகள் நேற்றுப் புதன்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.



வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், யாழ் இந்திய துணைத்தூதுவராலயத்தின் துணை உயர்ஸ்தானிகர் ஏ.நடராஜன் ஆகியோர் இணைந்து அடிக்கல்நட்டுதிருத்தப்பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

இந்து சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.ஞானசோதி, திருக்கேதீச்சரத்து ஆலய சபையினர்,ஆலய அறங்காவலர் சபையின் தலைவர் மா.தவயோகராஜா, திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் தலைவர் கந்தையா நீலகண்டன், இணைச் செயலாளர்களான எஸ்.இராகவன்,ஏ.திருநாவுக்கரசு ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

திருக்கேதீச்சரத் திருத்தல ஆலயத்தின் உட்பிரகார மண்டபத்திருத்தப் பணியின் ஒரு பகுதியான கருங்கல் பொருத்துவதற்காக இந்திய அரசு வழங்கிய 336 மில்லியன் ரூபா நிதியின் கீழ் குறித்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ற-56)

## மருத்துவ முகாம்

சாவகச்சேரி, மார்ச் 24

தென்மராட்சி பகிரங்க ஓய்வூதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேசஓய்வூதியர்களுக்கான இலவச மருத்துவ முகாம் இன்று காலை 8 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை சங்கத்தானை சாரதா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.மருத்துவ முகாமில் நீரிழிவு, இரத்த அமுக்கம் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் களைக் கலந்து கொண்டு பயன்பெறுமாறு சங்கப்பிரதிநிதி செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ற-9)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். அமெரிக்க தகவல் கூடத்துடன் உடன் இணைந்து பதுமை இளம் தலைவர்களை வலுவூட்டுவதற்கான தொடர் பயிற்சி பட்டறை நிகழ்வுகள் அடுத்த மாதம் நடத்தப்படவுள்ளன.

காலநிலை மாற்றத்தின் பின்னணியில் உள்ள அறிவியல், காலநிலை மாற்றத்தைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள், ஆரோக்கியமான உணவு மற்றும் நுகர்வுப் பழக்கம், இயற்கை முறையிலான பயிர்செய்கை மற்றும் சாத்தியமான பாவனை முறை, பொது விழிப்புணர்வை வடிவமைத்து செயற்படுத்துவதற்கான முறைகள் போன்ற சுற்றுச் சூழலுடன் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக இந்தப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும், ஏப்ரல் 7 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் இடம்பெறவுள்ளன என்றும், ஏப்ரல் 2 ஆம் திகதிக்கு முன்பாக முன் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.மேலதிக தொடர்புகளுக்கு இலக்கம் 23, அத்தியடி வீதி நல்லூரில் அமைந்துள்ள யாழ். அமெரிக்க தகவல் கூடத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி2)

# பற்றைக்காடாக மாறிப்போயுள்ள தபால் நிலையத்துக்கான காணி

## கொள்வனவு செய்து கொடுத்த அச்சுவேலி மக்கள் விசனம்; நிதி கிடைக்கவில்லை என்கிறார் பிரதம தபாலதிபர்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அச்சுவேலி தபால் நிலையக் கட்டடம் கட்டுவதற்கு பொதுமக்களின் நிதி உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட காணி, பத்து வருடங்கள் கடந்த நிலையிலும் எந்தவிதமான கட்டுமாணங்களும் இன்றி பற்றைகள், புதர்கள் மூடிய நிலையில் உள்ளது என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆயினும் கட்டடம் அமைப்பதற்கானநிதிஒதுக்கீடுஇன்னமும் கிடைக்கவில்லை என்று வடமாகாண பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலியில் தபால் நிலையம் கட்டுவதற்கு காணி இல்லை என தபால் திணைக்கள உயர் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, அச்சுவேலி தபால் நிலைய அபிவிருத்திக்குழு பொதுமக்களிடம் நிதி சேகரித்து ஐந்து பரப்புக் காணியை கொள்வனவு செய்து அஞ்சல் திணைக்களத்துக்கு கையளித்தது.

2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பல லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் இதுவரையில் எந்த விதமான கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

அச்சுவேலி எரிபொருள் நிலையத்துக்கு அருகில் உள்ள ஐந்து பரப்புக் காணி, பத்து வருடங்களுக்கு மேலாக தபால் நிலைய கட்டுமாணங்கள் செய்யப்படாது கொள்வனவுக்கு நிதி வழங்கிய பொதுமக்களை விசனம் அடையச் செய்துள்ளது.

அத்துடன் கொள்முதல் செய்யப்பட்ட காணி இதுவரை காலத்தில் துப்புரவு செய்யப்படவோ அல்லது இது தபால் நிலையத்துக்குச் சொந்தமான காணி என்பதை அடையாளப்படுத்தும் பலகைகளோ நடப்படாமல் பற்றைகள் மூடிய நிலையில் காணப்படுகின்றது.

தபால் நிலையத்துக்கான கட்டுமானத்தை மேற்கொள்ளுமாறு பொது அமைப்புகள் மற்றும் அச்சுவேலி தபால் நிலைய அபிவிருத்திக் குழு என்பவை காலத்துக்குக் காலம் வலியுறுத்தி வந்தபோதிலும் இதுவரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டது.

இந்தவிடயம் தொடர்பாக வடமாகாண பிரதம தபால் அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது;

காணி பெறப்பட்டதன் பின்னர் கட்டடம்அமைப்பதற்கானநிதியை மேலிடத்தில் கோரியுள் ளோம். எனினும் இதற்கான ஒதுக்கீடுகள் கிடைக்கவில்லை. அதனாலேயே தபால் நிலையத்தை அமைக்க முடியவில்லை. எதிர்வரும் காலத்தில் உரிய ஒதுக்கீடுகள் கிடைக்கும்போது அச்சுவேலிப் பகுதிக்கான தபால் நிலையம் அமைக்கப்படும்- என்றார்.

(ற-ரி5,11)

# சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு கேள்வி அறிவித்தல் தொடர்பில் குழப்பம்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளில் நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் தொடர்பாக அவற்றை நடத்துவோர் மற்றும்நடத்த விரும்புவோர் இடையே குழப்பநிலை காணப்படுகிறது.

அண்மையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் வைத்தியசாலைகளில் இயங்கும் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை நடத்துவதற்காக திறந்த கேள்விகள் மூலம் வழங்க கேள்வி அறிவித்தல் தினசரியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

மறுநாள் அதற்கு மாறாக மாகாண சுகாதார அமைச்சரால் வைத்தியசாலைகளில் இயங்கும் நலன்புரிச் சங்கங்களே சிற்றுண்டி நிலையங்களையும் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களையும் நடத்த வேண்டும் என்று வடக்குமாகாண சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் தினசரிகளில் பிரசுரித்த விளம்பரங்களில் ஏப்ரல் மாதம் நான்காம் திகதி முடிவுத் திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு மாறாக மாகாண சுகாதார அமைச்சரின் கூற்று பிரசுரமாகியுள்ளது.

இந்த நிலையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 500 ரூபாவைச் செலுத்தி படிவத்தைப் பெற்று விண்ணப்பிப்பதா? இல்லையா ? என விண்ணப்பிப்போரிடையே குழப்ப நிலை காணப்படுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டது.(ற-9)

# கல்லுண்டாய் வெளியில் பற்றியது தீ

யாழ்ப்பாணம், மார்ச் 24

கல்லுண்டாய் வெளியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படும் இடத்தில் ஏற்பட்ட திடீர்த் தீ மாநகர தீயணைக்கும் பிரிவினரால் அணைக்கப்பட்டது.

யாழ்.மாநகரசபைப் பகுதியினரால் அகற்றப்படும் கழிவுகள் கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படுகின்றன. இந்தக் கழிவுப் பொருள்களில் இருந்து திடீரெனத் தீ பரவியதால் அங்கே தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. இந்தப் பகுதி புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

மாநகரசபைத் தீயணைக்கும் படையினரின் கடின முயற்சியின் பின்னர் தீ ஒருவாறு அணைக்கப்பட்டது. இது குறித்து மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது :-

இந்தக் கழிவுப் பொருள்களில் இருந்து திடீர்த் தீ மூண்டதற்கான காரணம் பற்றி விரிவாக ஆராயப்பட்டு வருகின்றது.

தற்போதைய வெப்பமான காலநிலையால் இயற்கையாகவே கழிவுப் பொருள்களில் உள்ள பக்ரீரியாக்களில் இருந்து உயிர் வாயு ஏற்பட்டு தீ மூண்டதா என்பது குறித்துஆராயப்பட்டு வருகின்றது.

அங்குள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் இருந்தும் விளக்க அறிக்கை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது - என்றார். (ற-17)

## கடை உடைத்துப் பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 24

கரணவாய் குருக்கள் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு சுமார் ஒரு லட்சம் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வர்த்தக நிலையத்தின் கூரையூடாக உள்நுழைந்த திருடர்கள் கடையில் விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்த பால்மா பைக்கற்றுக்கள், சிகரட், சோடா வகைகள், சவர்க்காரங்கள் உட்பட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றதுடன் குறித்த தொகைப் பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 52 லட்சம் கிலோ நெல் வடக்கில் கொள்வனவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடக்கு மாகாணத்தில் கடந்த காலபோகத்தில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொண்ட 2 ஆயிரத்து 758 விவசாயிகளிடமிருந்து நெல் சந்தைப்படுத்தும் சபையால் 52 லட்சத்து 947 கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற் செய்கை மூலமான நெல்லின் ஒரு பகுதியை நெல் சந்தைப்படுத்தும் சபையினர் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து வருகின்றனர். கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலிருந்தும் இந்த மாதம் நடுப்பகுதிவரை, ஒருதொகை நெல், அதற்கென ஒதுக்கப்பட்ட கமநல சேவை நிலையங்கள் ஊடாக நெல் சந்தைப்படுத்தும் சபையால் கொள்வனவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 598 நெற் செய்கையாளர்களிடமிருந்து 11 லட்சத்து 23 ஆயிரத்து 790 கிலோவும், யாழ். மாவட்டத்தில் 402 நெற்செய்கையாளர்களிடமிருந்து 7 லட்சத்து 14 ஆயிரத்து 391 கிலோவும், வவுனியா மாவட்டதில் 556 நெற் செய்கையாளர்களிடமிருந்து 10 லட்சத்து 70 ஆயிரத்து 506 கிலோவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 793 நெற் செய்கையாளர்களிடமிருந்து 15 லட்சத்து 30 ஆயிரத்து 650 கிலோவும், மன்னார் மாவட்டத்தில் 409 நெற் செய்கையாளர்களிடமிருந்து 7 லட்சத்து 61 ஆயிரத்து 610 கிலோ நெல்லும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

> "கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலிருந்தும் இந்த மாதம் நடுப்பகுதி வரை ஒருதொகை நெல், அதற்கென ஒதுக்கப்பட்ட கமநல சேவை நிலையங்கள் ஊடாக நெல் சந்தைப்படுத்தும் சபையால் கொள்வனவு செய்யப்பட்டது."

வடக்கு மாகாணத்தில் அதிகமாக விளைச்சல் கிடைத்திருந்ததை அடுத்து தொடர்ந்தும் நெல் கொள்வனவு இடம்பெற்று வருகின்றது. பல இடங் களில் கூட்டுறவு மற்றும் தனியார் நெற் களஞ்சியங்களை வாடகைக்குப் பெற்று களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. நெற் சந்தைப்படுத்தல் சபையினால் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட நெல் களஞ்சியசாலைகளில் இருப்பில் இருந்தன் காரணமாக நெல் கொள்வனவில் நெருக்கடி ஏற்பட்டது என்றும், ஆனால் அவை சீர் செய்யப்பட்டு தொடர்ச்சியாக வடக்கில் நெல் கொள்வனவு அரசின் நியாயமான விலையில் இடம்பெற்று வருகின்றது எனவும் நெல் சந்தைப்படுத்தும் சபையினர் தெரிவித்துள்ளனர். (ற-5-21)

## கம்பன் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 24

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கொழும்புக் கம்பன் கழக விழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 4 நாள்கள் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் தினமும் காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன.

முதல் நாளான இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இல. 11 இல் அமைந்துள்ள இராமகிருஷ்ண தோட்ட ஸ்ரீ ஐஸ்வர்ய லக்சுமி கோயிலிலிருந்து கம்பன் திருவுருவப் பட ஊர்வலத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்த முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக மலேசியா இளைஞர் விளையாட்டுத்துறை துணை அமைச்சர் டத்தோ எம். சரவணன் கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து நடைபெறும் மூன்று நாள் நிகழ்வுகளில் காலைநிகழ்வுகள் 9.30 மணிக்கும் மாலை நிகழ்வுகள் 5.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

இறுதிநாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், சிறப்பு விருந்தினராக சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம், இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும், கௌரவ விருந்தினராக மேல் மாகாண சபை ஆளுநர் கே.சி. லோகேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ரி)

## குளிர்த்தி அபிசேகம்

யாழ்ப்பாணம் மார்ச் 24

பருத்தித்துறை அருள்மிகு கோட்டுவாசல் ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானத்தின் குளிர்த்தி அபிசேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு அபிசேக கிரியைகள் ஆரம்பமாகி மு.ப11 மணிக்கு விசேட பூசை இடம்பெறவுள்ளது. (ற-78)

# வியாபாரிகளின் பாராமுகத்தால் செயலிழந்துள்ள மிருசுவில் சந்தை

சாவகச்சேரி, மார்ச் 24

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொதுச் சந்தை பொது மக்களின் பாவனைக்கு மீள விடப்பட வேண்டும் என்று தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தையை மீள இயங்க வைக்க பிரதேச சபை முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதிலும், வியாபாரிகள் அங்கு வியாபாரம் செய்ய முன்வராததால் சந்தையைச் செயற்படுத்தமுடியாத நிலை காணப் படுகின்றது என்று பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

மிருசுவில் பொதுச் சந்தை கொடிகாமம் சந்தையிலிருந்து மூன்று கிலோ மீற்றருக்கு அப்பால் காணப்படுகின்றது. தென்மராட்சி கிழக்கு பிரதேசத்தின் உசன், விடத்தற்பளை, பாலாவி, கெற்பேலி, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, தவசிகுளம் உள்ளிட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்கு மிருசுவில் பொதுச் சந்தையே பயன் படுத்தி வந்தனர். அந்தப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் விளை பொருள்களுடன் தேங்காய், கடல் உணவுகள் போன்றவை தினமும் பொது மக்களால் கொண்டுவரப்பட்டு வியாபார நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டன. இவற்றுடன் இறைச்சிக் கடைகளும் காணப்பட்டன.

2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் உற்பத்தியாளர்கள் இந்தச் சந்தைக்கு தமது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு வராமல் கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய சந்தைகளுக்குக் கொண்டு செல்கின்றனர். இறைச்சிக் கடைகளும் சில வருடங்களாக மூடப்பட்டுள்ளன. அத்துடன் சந்தை வளாகம் போதிய பராமரிப்பின்றி பற்றைக்காடாக பாம்புகளின் வதிவிடமாக மாறியுள்ளது.

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்ற போதும், மிருசுவில் சந்தை செயற்படாததால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை வேறு சந்தைகளுக்குக் கொண்டு செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தவிடயம் தொடர்பாக பிரதேச சபையினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது-

பிரதேச சபைக்கு வருமானம் தரக்கூடிய சந்தைகளில் ஒன்றாக மிருசுவில் சந்தை காணப்பட்டது. கடந்த சில வருடங்களாக வியாபாரிகள் இல்லாததால் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு வருவதில்லை. அதனால் சந்தையை தொடர்ந்து செயற்படுத்த முடியவில்லை.

பிரதேச சபை இயங்கிய காலத்தில் சந்தையை மீள இயங்க வைக்க பல்வேறு செயற்றிட்டங்கள் மேற் கொள்ளப்பட்ட போதிலும் வியாபாரிகள் அங்கு வியாபார நடவடிக்கைகளை மேற் கொள்ளவில்லை. மிருசுவில் சந்தையை மீள இயக்க வருடா வருடம் பிர தேச சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் வியாபாரிகளின் பங்களிப்பு இல்லாததால் இயங்க வைக்க முடியவில்லை.- என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# வீதியோரங்களில் பானங்கள் விற்பனை செய்வதற்குத் தடை

சாவகச்சேரி, மார்ச் 24

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதியோரங்களில் நிறமூட்டப்படும் பானங்கள், சர்பத் மற்றும் தேசிக்காய் கரைசல் போன்றவற்றை விற்பனை செய்வது சாவகச்சேரி சுகாதார திணைக் களத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

உரிய அனுமதியின்றி அவ்வாறான பானங்களை விற்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளதுடன், வீதியோரங்களில் விற்கப்படும் பானங்களைப் பருகுவதைத் தவிர்க்குமாறும் பொது மக்களைக் கேட்டுள்ளனர்.

தற்போது நிலவும் வெப்ப காலத்தைப் பயன்படுத்தி வீதியோரங்களில் வைத்து சுகாதாரத்துக்குக் கேடான வகையில் தயாரிக்கப்பட்ட பானங்கள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் அதிகமாகச் செல்லும் வீதியோரங்களில் வைத்து இவ்வாறான பானங்களை வியாபாரம் செய்வது கண்டுபிடிக்கப்பட்டு விற்பனை செய்வோர் எச்சரிக்கை செய்யப்பட்டு வருகின்றனர். தற்போது நீரால் பரவும் வயிற்றோட்டம், செங்கண்மாரி, நெருப்புக் காய்ச்சல் போன்றவை பரவி வரும் நிலையில், சுகாதாரத்துக்குக் கேடான, பரிசோதனை செய்யப்படாத நீரைப் பயன்படுத்தி இவ்வாறான பானங்களைத் தயாரித்து விற்பனை செய்வது சட்ட விரோதமாக கணிக்கப்படுகிறது.

பான வகைகள் விற்பனை செய்வோர் தத்தமது பகுதிகளில் உள்ளூராட்சி சபைக்கு விண்ணப்பித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் பரிந்துரை செய்யப்பட்ட கிணற்று நீரை வடிகட்டி பாதுகாப்பான அறையில் வைத்து பானங்களைத் தயாரிக்கவேண்டும். அவ்வாறான அனுமதியின்றி பானங்களை வீதிகளில் வைத்து விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-9)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்.வட்டு இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் என்.தனபாலசிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார் (ற-ரி5)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 24

வலி.தெற்கு பிரதேச வணிகர் கழகப் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வலி.தெற்கு பிரதேச வணிகர் கழகத் தலைவர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் வலி.தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரும் வலி.தெற்கு வணிகர் கழக போசகருமாகிய தி.பிரகாஸும், வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் தி.சுதர்சனும், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏச்.எல்.டுஸ்மந்தவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும் என்ற தொனிப்பொருளில் வர்த்தகர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படவுள்ளன. (ற-ரி)

## தியான வகுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் அமைந்துள்ள ஞானாலயத்தில் வாழும் கலை அமைப்பின் தியான வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இந்த தியான வகுப்புக்கள் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6 மணிக்கு நடைபெற்று வருகின்றன என்று ஞானாலயத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்கள் பகிரப்படுவதை எதிர்க்கின்றோம்

## ஜே.வி.பி கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 24
ஒற்றையாட்சிக்குள் அதிகாரத்தைப் பகிர்வதில் மக்கள் விடுதலை முன்னணிக்கு ஒரு போதும் உடன்பாடில்லை. ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு வழங்க முற்படும் நல்லாட்சி அரசின் செயற்பாடுகளை எதிர்க்கின்றோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.



எமது நாட்டில் 1987 ஆம் ஆண்டிலும் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டது. இதனால் வடக்கு மாகாண மக்களுக்கு மட்டுமல்லாது வேறு எந்தவொரு மாகாண மக்களுக்கும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை. எனவே அதிகாரப் பகிர்வினால் பயனில்லை என்ற படிப்பினை எமது நாட்டு அரசியல் தலைமைகளுக்கு இருக்க வேண்டியது அவசியம்.

வடக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வால் பெரும்பயன் கிடைக்குமென எதிர்பார்ப்பதும் வேடிக்கையான விடயமாகும். அதிகாரப் பகிர்வை விடவும் வடக்கு மக்கள் சுதந்திரமாக அரசியல் பிரச்சினைகள் இல்லாமல் வாழும் சூழலை உருவாக்கிக்கொடுக்க வேண்டும் என்பதே காலத்தின் தேவையாகும்.

வடக்கு தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி எமது நாட்டில் சகல பகுதிகளிலும் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கான நியாயமான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். சகலரும் சமம் என மதித்து வாழும் சூழலை ஏற்படுத்தவே அரசு முற்பட வேண்டும்.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் தற்போது மக்கள் அவசரம் காட்டுவதாகத் தெரியவில்லை. அரசியல் தலைமைகளுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்ற தேவை உள்ளது. வடக்கில் அரசியல் செய்பவர்கள் முதலில் மக்கள் தேவைகளைக் கவனிக்க வேண்டும்.

இவ்வாறிருக்க அரசு தற்போது நாட்டில் சமஷ்டி ஆட்சிக்கு இடமில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளது. ஆனால் அதற்கு மாறாக ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரங்கள் பகிரப்படும் என்று கூறுவதையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

உலக நாடுகள் பலவும் அதிகாரப்பகிர்வால் உள்நாட்டுச் சிக்கல்களைத் தீர்க்க முடியும் என்ற நிலைப்பாட்டில் இருந்த போதிலும், மக்கள் விடுதலை முன்னணி ஒரு போதும் இதனை ஏற்காது. எவ்வாறாயினும் எமது நாட்டுக்கு அதிகாரப் பரவலாக்கம் வேண்டாம். மாறாக மக்களிடையே சக வாழ்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்றார். (ந-5)

> " வடக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வால் பெரும்பயன் கிடைக்குமென எதிர்பார்ப்பதும் வேடிக்கையான விடயமாகும். அதிகாரப் பகிர்வை விடவும் வடக்கு மக்கள் சுதந்திரமாக அரசியல் பிரச்சினைகள் இல்லாமல் வாழும் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதே காலத்தின் தேவையாகும். "

## மூவர் கொலை

கொழும்பு, மார்ச் 24
கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இருவரும், கழுத்து நெரிக்கப்பட்டு ஒருவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த இரண்டு சம்பவங்களும் அநுராதபுரம் மற்றும் காலிப் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

அநுராதபுரம் எப்பாவல கோன்வெளி பிரதேசத்தில் இருவர் கொலை செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 60 மற்றும் 65 வயது மதிக்கத்தக்க இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதில் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டும் மற்றொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - காலிப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இருவருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடே இந்தக் கொலைக்குக் காரணம் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

கஜூகஸ்துவ பகுதியைச் சேர்ந்த 67 வயதான ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எல்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-5)

# நண்பர்களுடன் சேர்ந்து மகள் மீது துஷ்பிரயோகம்

## கைது செய்யப்பட்டார் தந்தை

கொழும்பு, மார்ச் 24
போதைப் - பாவனையுடைய தந்தை ஒருவர், தான் பெற்ற மகளை தனது நண்பர்களுடன் சேர்ந்து பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து வெளியே கூறாதிருந்த குற்றச்சாட்டில் குறித்த சிறுமியும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித் தனர்.

இந்தச் சம்பவம் கந்தானை பொலிஸ் பிரிவில் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயாரே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். தனது கணவன் போதைக்கு அடிமையானவர் என்றும் அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பதின்மவயதுச் சிறுமி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைக்கு அடிமையான அவர் தன்னையும், பிள்ளைகளையும் பல தடவைகள் அடித்துத் துன்புறுத்தியுள்ளார் என்று மனைவி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

குறித்த தந்தை, சிறுமியைப் பல தடவைகள் இவ்வாறு துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்றும், அது குறித்து வீட்டுக்குத் தெரிவிக்கா வண்ணம் சிறுமியை அச்சுறுத்தி வைத்திருந்துள்ளார் என்றும் விசாரணையில் தெரிய வந்துள் ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-ஐ-4)

## பதவியிலிருந்து விலக அத்துரலிய தேரர் தீர்மானம்

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உப தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள தீர்மானித்துள்ளேன் என்று அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

என்னைக் கட்சியின் உபதலைவர் என்று அழைக்க வேண்டாம் என்று கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற சல குண அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எனக்கும், கட்சியிலுள்ளவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்தியல் ரீதியான சிறிய முரண்பாடே இதற்குக் காரணம். எனது இந்த அறிவிப்பை எதிர்வரும் சில நாள்களில் நடைபெறவுள்ள கட்சியின் உயர் பீடக் கூட்டத்தின் போது தெரியப்படுத்தவுள்ளேன் - என்றார். (ந-ஐ-5)

# விசேட நீதிமன்றில் கோத்தாவை முன்னிலையாகுமாறு உத்தரவு

கொழும்பு, மார்ச் 24
தமிழ் அரசியல் கைதிகளின் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தில் மே மாதம் 3 ஆம் திகதி முன்னிலையாகுமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விசேட நீதிமன்றத்தின் ஆணையாளர் ஐராங்கனி பெரேராவால் இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரை இலக்கு வைத்து கடந்த 2006 ஆம் ஆண்டு கொழும்பு கொள்ளுப்பிட்டி, பித்தல சந்தியில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் அவர் நூலிழையில் உயிர் தப்பியிருந்தார்.

இந்தத் தற்கொலைத் தாக்குதலுக்கு உதவி வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 5 தமிழ் அரசியல் கைதிகள் மீதான வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையில் கோத்தபாயவின் சாட்சியங்களைப் பதிவுசெய்து கொள்ளும் பொருட்டு அவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது. (ந-5)

# கட்டுநாயக்கா விமான நிலைய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

## பிரசல்ஸ் தாக்குதலை அடுத்து

கொழும்பு, மார்ச் 24
பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸ் விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய விமானப்படை, இராணுவம், சிவில் பாதுகாப்பு பிரிவு உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகள் அதிகளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெளிவரும், உட்செல்லும் பயணிகள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் விமான நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

முன்னெச்சரிக்கையாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையப் பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், விமான நிலைய தொலைபேசி அழைப்புக்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்று குறித்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் பரவலாக்கப்படின் நாடு பிரியும் என்பது மாயை

## அதிகாரப் பரவலாக்கல் குறித்து சகல கட்சிகளுடனும் பேசி புதிய அரசமைப்பில் உள்ளடக்குவோம் என்கிறார் கிரியெல்ல

கொழும்பு, மார்ச் 24

ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளு டனும் பேச்சு நடத்தி அதனை புதிய அரசமைப்பில் உள்ளடக்குவோம். அதிகாரத்தைப் பரவலாக்குவதால் நாடு பிரியும் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு அமைச்சரும் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.



ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் பலப்படுத்தப்படும். மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முதலமைச்சர்கள் மாநாட்டில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அதிகாரத்தை பரவலாக்கி நாட்டையும் மக்களையும் ஐக்கியப்படுத்தவே மக்கள் ஆணை வழங்கினர். இந்த மக்கள் ஆணையை உதாசீனம் செய்து அரசின் பயணத்தை தொடர முடியாது. மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்றுவது ஜனாதிபதியினதும் அரசினதும் பொறுப்பாகும்.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும். தற் போது நாம் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். இதற்காக நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றியுள்ளோம். எனவே, அதிகாரப் பரவலாக்கல் தொடர் பாக அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி அதனை புதிய அரசமைப்பில் உள்ளடக்குவோம். அதிகாரத்தை பரவலாக்குவதால் நாடு பிரியும் என்ற வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

> கிணற்றுத் தவளைகளைப் போன்று பழைமை வாதத்தில் சிக்கிக் கொண்டிருக்கக் கூடாது. இந்த உலகமயமாக்கலில் நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். சர்வதேசத்தை வெற்றி கொள்ள வேண்டும். நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து இன்று தேசிய அரசை ஏற்படுத்தி முன்னுதாரணத்தை நாட்டுக்கும் வெளிநாடுகளுக்கும் காட்டியுள்ளோம்.

உலகின் பல நாடுகளில் அதிகாரம் பரவலாக்கப்பட்டதால் பொருளாதார, சமூக, அரசியல் ரீதியில் அவை முன்னேற்றங்களைக் கண்டுள்ளன.

இதற்குச் சிறந்த உதாரணம் எமது அயல் நாடான இந்தியாவாகும். எனவே நாடு பிரியும் என்பது வெறும் மாயையாகும். இதன் மூலம் நாட்டையும் மக்களையும் ஐக்கியப்படுத்த முடியும்.

உலகின் மாற்றங்களுக்கேற்ப நாமும் மாற வேண்டும். அதை விடுத்து கிணற்றுத் தவளைகளைப் போன்று பழைமை வாதத்தில் சிக்கிக் கொண்டிருக்கக் கூடாது. இந்த உலகமயமாக்கலில் நாமும் முன்னோக்கிச் செல்லவேண்டும். சர்வதேசத்தை வெற்றி கொள்ள வேண்டும். நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து இன்று தேசிய அரசை ஏற்படுத்தி முன்னுதாரணத்தை நாட்டுக்கும் வெளிநாடுகளுக்கும் காட்டியுள்ளோம்.

வெளிநாடுகள் இதனை வரவேற்கின்றன. அத்தோடு நாட்டு மக்கள் இந்த அரசுக்கு ஆணை வழங்கியுள்ளனர். எனவே, மக்கள் ஆணையை மீறிச் செயற்பட முடியாது. அதிகாரத்தை பரவலாக்கி நாட்டையும் மக்களையும் ஐக்கியப்படுத்த மக்கள் வழங்கிய ஆணையை உதாசீனப்படுத்த மாட்டோம். இதனை புதிய அரசமைப்பில் உள்ளீர்த்து பலப்படுத்துவோம் என்று தெரிவித்துள்ளார். (5)

## பகிடி வதையால் பாதிக்கப்பட்டு மாணவிகள் வைத்தியசாலையில்

கொழும்பு, மார்ச் 24

பொலனறுவை மிகிந்தலையில் உள்ள தாவரவியல் நிறுவகத்தில் பயிற்சி பெறும் இரண்டு மாணவிகள், பகிடிவதையால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நிறுவகத்தில் கற்கும் சிரேஷ்ட மாணவர்களால் இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரண்டு மாணவிகளும் உடல்ரீதியாக பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மாணவிகள் தங்கியுள்ள அறைகளுக்கு இரவில் சென்ற மாணவர்கள் பகிடிவதையில் ஈடுபட்டனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இரண்டு மாணவிகளும் அச்சம் காரணமாக தம்மைப் பகிடிவதைக்கு உட்படுத்தியவர்கள் குறித்த தகவல்களை வெளியிட மறுத்துள்ளனர். (ற-ஐ-5)

## இளம் பெண் சட்டத்தரணி சடலமாக மீட்பு

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றைச் சேர்ந்த இளம் பெண் சட்டத்தரணி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த திங்கட்கிழமை இரவு 10 மணியளவில்சடலம்அவரதுவீட்டிலிருந்து மீட்கப்பட்டது என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-5)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லாட்சியில் பலம் பெற்றுள்ளது

### கெஹலிய ரம்புக்வெல கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 24

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சமஷ்டி தொடர்பில் எந்தக் கருத்தையும் வெளியிடாதிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 2015 ஆம் ஆண்டிலிருந்து சமஷ்டி தொடர்பில் பேசுவதற்கு ஆரம்பித்துள்ளது. பலவீனமான அரசு பதவியில் இருப்பதே இதற்கு காரணமாகும். – இவ்வாறு கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு ஒரு தெளிவற்ற நிலைமையில் இருப்பதை எம்மால் உணர முடிகின்றது. ஆரம்பத்திலிருந்தே இந்த நிலைமை நீடிக்கின்றது. குறிப்பாக அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அடுத்ததாக 20 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்படும் என உறுதியளித்தனர்.

ஆனால், அதனைக் கொண்டு வரவில்லை. தற்போது 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எவரும் பேசுவதுமில்லை. அவ்வாறான தேவை இருப்பதாகக் காட்டிக்கொள்ளாமல் இருக்கின்றனர்.

அதேபோன்று, தற்போது சமஷ்டி முறைமையில் தீர்வு வேண்டுமென்றும் வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர். ஆனால், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் இவ்வாறு எந்தவிதமான கோரிக்கையும் வலுவான முறையில் விடுக்கப்படவில்லை. 2015 ஆம் ஆண்டின் பின்னரே இந்தக் கோரிக்கைகள் வலுவடைய ஆரம்பித்தன.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை பலப்படுத்த வேண்டும் என்று மட்டுமே கோரினர். ஆனால், இன்று சமஷ்டி முறைமையில் தீர்வு வேண்டுமெனக் கோருகின்றனர். பலவீனமான அரசு பதவியிலிருக்கின்றமையே இதற்கான காரணமாகும்.– என்றார். (ற-5)

## திரவ எரிவாயு மின் உற்பத்திக்கு உதவி வழங்குகின்றது கனடா

கொழும்பு, மார்ச் 24

திரவ எரிவாயு மின் உற்பத்தி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு, உதவிகளை வழங்குவதற்கு கனடா முன்வந்துள்ளது.

மின்சார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை நாடாளுமன்றத்தில் சந்தித்த கனேடியத் தூதுவர் ஜல்லி வைற்றிங் அம்மையார் இது குறித்துக் கலந்துரையாடியுள்ளார்.

திரவ எரிவாயு மின் உற்பத்தித் திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளையும், ஏனைய தேவையான வசதிகளையும் கனடா வழங்கத் தயாராக இருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச கவனத்தை இலங்கை பெற்றிருப்பதாகவும், எதிர்காலத்தில் மேலும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான உதவிகளைப் பெற முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் கல்கரி பல்கலைக்கழகத்தின் கிளை ஒன்றை இலங்கையில் ஆரம்பிப்பது தொடர்பாகவும், கனேடியத் தூதுவர் கலந்துரையாடியுள்ளார். (ற-ஐ-5)

## சிறைக் கைதிகளுக்கு இனி மெத்தைகள்

பாய்களுக்குப் பதிலாக, சிறைக் கைதிகளுக்கு மெத்தைகள் வழங்குவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இலகுவாக உபயோகப்படுத்தும் வகையில் இந்த மெத்தைகள் கைதிகளுக்கு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த மெத்தைகளை சிறைச்சாலைகள் திணைக்களமே தயாரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டம் கொழும்பு, வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதே வேளை- கொழும்பில் மட்டுமன்றி, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துச் சிறைச்சாலைகளிலும் கைதிகளுக்கு இந்த மெத்தைகள் வழங்கப்படவுள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சி அரசில் மேலுயரும் தந்திரங்கள் எங்கே போய் முடியும்...?

இந்த நாட்டின் முந்திய அரசினால், போர்க் குற்றங்கள் குறித்து நம்பத் தகுந்த, பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட்டனவா என்பதில், ஐக்கிய நாடுகள் சபையின் மேலாளர்களுக்கு சந்தேகம் உண்டு என்பது மீண்டும் வெளிப்பட்டுள்ளது.

ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூனின் பிரதிச் செயலாளர் பர்ஹான் ஹக், வெளியிட்டுள்ள ஆகப் பிந்திய தகவல், அதனையே அழுத்தித் தொட்டுக் காட்டுகிறது.

இலங்கையில் நடைபெற்ற போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில், ஐ.நாவின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, நம்பகமான விசாரணைகள் நடத்தப்பட்டாக வேண்டும்.

இலங்கை அரசு நடத்தும் விசாரணைகள் எவ்வாறு நடைபெறுகின்றன' என்பதை மனித உரிமைகள் சபையால் மதிப்பீடு செய்ய இயலும். அதேவேளை, நியாயமான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டன என்பதை உறுதி செய்ய வேண்டிய முழுப் பொறுப்பு ஐ.நா. சபைக்கே--ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கே--உண்டு என்றும் ஐ.நாவின் பொதுச் செயலாளரின் பிரதிச் செயலாளர் அழுத்திக் கூறியுள்ளார். அதனை, இலங்கை அரசு எந்த வகையிலும் தட்டிக்கழித்து விட்டேத்தியாகச் செயற்பட இயலாது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா.மனித உரிமைகள் சபை மதிப்பீடு செய்ய இயலும்; ஆனால் நம்பத்தகுந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்குடனேயே அந்த முறை தவிர்க்கப்பட்டது என்பதையும் பர்ஹான் ஹக் அழுத்திக் கூறியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையினால், போரின் போதான சம்பவங்கள் குறித்து விசாரணை செய்யப்படுவதை ஆட்சேபித்து எந்தத் தரப்பாலும் கேள்வி எழுப்ப முடியாது என்றும் ஊன்றித் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுகள் நீண்ட நெடுங்காலமாக, உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதில், அதீத வல்லமை கொண்டவையாகச் செயற்படுவதை, அனைத்துலக நாடுகள் நன்கறியும்.

அப்பட்டமாகச் சொல்வதானால், ஒரு விடயம் குறித்து அதிகாரத்தில் உள்ளவர்களில் ஒருவர் அல்லது சிலர் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதும்-

அதே பாணியில் கூறியதை மறுத்து உரைப்பதும்-பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு அத்துப்படி!

உள்நாட்டில் ஒன்றையும், அனைத்துலக நாடுகளுக்கு மற்றொன்றையும் புரட்டிப் பேசும் கெட்டித்தனம், அவர்களுக்குத் தண்ணீர் பட்டபாடு!

இத்தகைய ஒரு சூழமைவில், மனித உரிமைகளை தமிழ் மக்களுக்குப் பிசகின்றி பிசிறின்றி வழங்குவதற்கு, ஆட்சி பீடத்தில் அமரும் சிங்கள அரசுகள் உள்ளார்ந்து சாதாரண மனித நேய அடிப்படையில் தானும் செயற்படமாட்டா என்பது மிகத் துலக்கமாக வெளிச்சம்.

மொத்தத்தில்-முழுமையில்--

உள்நாட்டு விசாரணையின் மூலம் தீர்வு என்பது, அதன் மறுபெயர், கால இழுத்தடிப்பும், அதனூடு கண்துடைப்பு, மழுப்பல்கள் என்றும் முற்றுப்பெறும். தமிழ் மக்கள் அம்போ என்று நட்டாற்றுக்குள் தூக்கி வீசப்படுவர்.

தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய வாழ்வியல், அரசியல் உரிமைகள் எல்லாவற்றையும் நசுக்கி, இரண்டாம் தரப் பிரசைகளாக்கி, நாசம் பண்ணும் படலமே விரியப்போகிறதா?

அனைத்துலக நாடுகளை' தகிடு தத்தம் பண்ணி', மகிந்த அரசை விடவும், தமிழ் மக்களை பாழ் கிணற்றுக்குள் தள்ளும் தந்திரமும் சூழ்ச்சியுமே இப்போதைய நல்லாட்சி அரசில் மேலுயரும் காட்சியே மேலுயருகிறது...!!!

# புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு வடக்கு-கிழக்கு மக்களின் பங்களிப்பின் அவசியம்

கந்தப்பு பரமேஸ்வரன்

இலங்கையில் இனங்கள் எனக் கருதும் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலாயர் ஆகிய நான்கு இனங்கள் இந்த நாட்டில் குடிமக்களாக வாழ்ந்து வருகின்றனர். இதில் சிங்களவர்கள் பெரும்பான்மையினமாகவும் ஏனையோர் சிறுபான்மையினங்களாகவும் காணப்படுகின்றனர். இலங்கை சுதந்திரம் அடைந்து அரை நூற்றாண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் சிறுபான்மை இனங்கள் சமூகப் பொருளாதார அரசியல் ரீதியான சுதந்திரத்தை முழுமையாக அனுபவிப்பதற்கு அரசுகளும், அரசியல் யாப்புக்களும் இடமளிக்காத நிலையில், இனப் பிரச்சினையானது தேசிய ரீதியில் அனைத்து இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்திருந்தது. குறிப்பாகத் தமிழர்கள் செறிந்து வாழும்வடக்கு-கிழக்குப்பிரதேசங்கள் என்றுமில்லாத அளவுக்குப் போர்க்களங்களாக மாறியிருந்தன. காலத்துக்குக் காலம் அரசியல்வாதிகள் தமக்கே உரித்தான முறையில் தீர்வொன்றை வழங்க இயலாமையின் பின்னணியில் ஜனநாயக வழியிலும் ஆயுதப் போராட்டத்தின் மூலமும் தமிழர்கள் தம் உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இந்த இரு வழிகளும் தமக்கு நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையில் முப்பது வருடப் போராட்டத்தால் லட்சக் கணக்கான உயிர்கள், உடைமைகள், சொத்துக்களின் இழப்பு, இடப்பெயர்வு அகதிகள் ஆக்கப்படல் என சொல்லொணாத் துன்ப, துயரங்களை அனுபவித்து வந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு ஆயுத ரீதியான போராட்டம் முள்ளிவாய்க்காலுடன் ஓய்வுக்கு வந்திருந்தது. இதன் பின்னணியில் ஜனநாயக வழிப் போராட்டமும், ஆயுதப் போராட்டமும் என இருந்து வந்த பாதைகள், சர்வதேச இராஜ தந்திர ரீதியாக வெளிநாட்டவர்கள் உள் நாட்டுப் பிரச்சினையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

சனல்-4 எனும் சர்வதேசத் தொலைக்காட்சி நிறுவனம் தயாரித்து வெளியிட்ட முள்ளிவாய்க்கால் போர் தொடர்பான ஆவணத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையால் இலங்கை தொடர்பான நிலைப்பாடுகளில் கூட்ட அமர்வுகளின்போது பல்வேறு நாடுகளும், மனித உரிமை அமைப்புக்களும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நிற்கும் அதேவேளை, அனைத்து இனங்களையும் திருப்திப் படுத்தக்கவகையிலான தீர்வொன்றைக் காணும் வகையில் இலங்கை அரசை வலியுறுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைந்து முன்னெடுக்குமாறு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர்.

உலக வரலாற்றில் உரிமைக்காகப் போராடிய எந்தவொரு நாடும் சர்வதேசத்தின் அனுசரணை மற்றும் ஆதரவுகளின்றி தீர்வொன்றைப் பெற்றுக்கொண்டதாக இல்லை. இந்த விடயம் இன்றும்கூட பொய்ப்பிக்கப்படாமல் சான்று பகர்கின்றது. தற்போது சர்வதேசத்தின் பார்வை இலங்கை மீது பதிந்துள்ள நாடுகளின் தலைவர்கள், வெளிவிவகார அமைச்சர்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சார்ந்த அதிகாரிகள் எனப் பல்வேறுபட்டவர்களின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இதன் பின்னணியில் தற்போது ஆட்சியிலிருக்கும் தேசிய அரசுக்கு கடும் அழுத்தங்களை இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு பிரயோகிக்கப்பட்டு வருவதையும் காணமுடிகிறது. இந்த நிலையில் சிறுபான்மை இனங்களின் பௌதிக மற்றும் ஆன்மிக நல்லிருப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையிலான அரசியல் தீர்வு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைப்பதற்கான காலம் கனிந்துள்ளது. இந்தக் காலத்தைப் பயனுள்ள வகையில் சிறுபான்மை இனங்கள் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

> அரசியல்வாதிகள் தமக்கே உரித்தான முறையில் தீர்வொன்றை வழங்க இயலாமையின் பின்னணியில் ஜனநாயக வழியிலும் ஆயுதப் போராட்டத்தின் மூலமும் தமிழர்கள் தம் உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்

மக்கள் தாம் ஆளப்படும் முறைமை பற்றி அறிந்திருத்தல் வேண்டும் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகவுள்ளது.

அரசியல் போக்கு முறைமையானது அந்தந்த சமூகங்களின் சமூக பொருளாதார அரசியல் ஒருங்கிசைவுடன் இணைந்து செல்ல வேண்டும். இதன் மூலமே அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு அரசியல் யாப்பும் அந்த நாட்டினது பொருளாதார வழிவரும் உற்பத்தி உறவுகளினதும் சமூகப் பரிமாணங்களுடன் நெருங்கியதாக இருத்தல் சிறப்பானதாகக் கொள்ளப்படுகின்றது. இந்த வகையில் இலங்கையின் அரசியல் யாப்பு வரலாறு என்பது உண்மையில் அதிகார வைப்பு முறையிலான வரலாறாகவே உள்ளதே தவிர, நாட்டினது மேன்மைக்கும் கௌரவத்துக்கும் உரியதாக அமையவில்லை. இதன் காரணமாகவே அரசுகள் மாறுகின்ற போதெல்லாம் அரசியல் யாப்புக்களும் மாற்றமடைகின்றன.

நாட்டினது அரசியல் யாப்பின் பலாபலன்கள் அதன் பிரயோக அனுபவத்திலேயே தங்கியுள்ளது. பிரயோக அனுபவம் என்பது இலங்கையைப் பொறுத்த மட்டில்வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழுகின்ற தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் மலையகத் தமிழர்கள் ஆகிய சிறுபான்மை இனங்களை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றது. மக்கள் தமது அரசியல் அபிலாசைகள், விருப்பங்கள், தேவைகளைத் தனியாக அன்றி நிறுவன ரீதியாகவே தெரியப்படுத்த முடியும். ஜனநாயக நாட்டில் மக்கள் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் அந்தக் கருத்துக்கள், பரிந்துரை கள் தொடர்பாக அரசு முடிவுகளை மேற்கொள்ள முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேரலாதன்

# எல்லையை மீறிச்செல்லும் மகிந்த தரப்பு

திவுலப்பிட்டிய பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதால் ஆளும் தரப்பினர் ஏற்பாடு செய்த கூட்டமொன்றை நடத்த முடியாததொரு பரிதாப நிலைமை ஏற்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் சிலர் உட்பட சுதந்திரக் கட்சியினர் கலந்து கொண்டனர். இன்னொரு முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதாக இருந்தபோதிலும் பாதுகாப்புக் காரணங்களால் அவர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. மகிந்த தரப்பினர் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்கின்ற நடவடிக்கைகளின் ஓர் அம்சமாகவே கூட்டம் குழப்பப்பட்டமையைக் கூறமுடியும்.

கடந்த 17 ஆம் திகதி மகிந்த ஆதரவாளர்கள் கொழும்பில் நடத்திய அரசுக்கு எதிரான பேரணியை அரசு நினைத்திருந்தால் குழப்பியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. ஆனால் மகிந்த ஆதரவாளர்கள் நடந்து கொள்கின்ற விதம் நாட்டை ஏதோ அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லப் போவதாகவே தெரிகின்றது.



### இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிர்ப்பு

அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கென எடுத்துவரும் நடவடிக்கைகளை மகிந்த தரப்பினர் ஒருபோதுமே ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. பெரும்பான்மையின மக்களிடம் இனவாதப் பரப்புரைகளை மேற்கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டு வரும் மகிந்த தரப்பு, சிறுபான்மை மக்களின் விடயத்தில் அக்கறை காட்டுமென ஒருபோதுமே எதிர்பார்க்க முடியாது. இந்த நிலையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான சிந்தனை ஜனாதிபதியின் மனதில் தோன்றியுள்ளதை அறிய முடிகின்றது. ஹிக்கடுவையில் இடம்பெற்ற மாகாண முதலமைச்சர்களின் செயலமர்வில் உரையாற்றும் போது அவர் இதைச் சூசகமாகத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தான் ஜனாதிபதியாகப் பதவியேற்றது அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருப்பதற்காக அல்லவெனத் தெரிவித்ததுடன், உலக அரசியலில் அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பாகவே சிந்திக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் மாகாணங்களுக்குரிய அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அவ்வாறெனில் காணி, பொலிஸ் அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். தமிழர்களின் நீண்டநாள் கோரிக்கையும் இதுதான். ஆனால் அரசுக்கு எதிரான மகிந்த தரப்பு இனவாதிகள் இதை அனுமதிப்பார்களா என்பதுதான் மிகப்பெரிய கேள்வியாக உள்ளது.

### திசை திருப்புகின்ற செயற்பாடுகள்

மகிந்த ராஜபக்ச, தமது ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த ஊழல் மோசடிகளைத் திசை திருப்புகின்ற செயற்பாடுகளிலேயே தற்போது முழுவீச்சில் ஈடுபட்டுள்ளார். அவர், அவரது குடும்ப உறுப்பினர்கள், நெருங்கியவர்கள் எனப் பலரும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பான செய்திகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதால், இவை மக்களைச் சென்றடையாத வகையில் வியூகங்கள் வகுக்கப்பட்டு அதன் பிரகாரம் மகிந்தவும் அவரைச் சேர்ந்தவர்களும் செயற்படுகின்றனர். தமது மோசடிகளை மறைப்பதற்கு அரசைக் குறைகூறுவதே ஒரேவழியென்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணி அமைத்து அரசொன்றை அமைத்துக் கொண்டதன் காரணமாகவே பிரதமர் பதவி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்துள்ளது. இதைப் போன்றுதான் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன்தான் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதிப் பதவிக்குரிய கதிரையில் அமர்ந்துகொள்ள முடிந்துள்ளது. ஆனால் ஜனாதிபதியை ஐக்கிய தேசியக் கட்சியினர் ஏற்றுக்கொண்ட அளவுக்குப் பிரதமரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், அமைச்சரவைக்கூட்டத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்குவதையும் விரும்புவதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் பிளவுபட்டு நிற்கும் சுதந்திரக் கட்சியினரை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகளும் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன. இதைவிட ஜனாதிபதியையும், மகிந்தவையும் ஒன்றுசேர்க்கும் நடவடிக்கைகளிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியை அரசிலிருந்து ஓரம் கட்டிவிட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியை ஏற்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். இதன் பின்னணியில் வேறொரு சதித்திட்டமும் அடங்கியுள்ளது. மகிந்தவை ஆட்சியில் இடம்பெறச் செய்வதுதான் அது.

### போரைச் சமாளிப்பதில் முழுக்கவனம்

முன்னைய ஆட்சியாளர்கள் போரைச் சமாளிப்பதில் தமது முழு நேரத்தையும் செலவிட்டனர். ஆனால் தற்போதைய ஜனாதிபதி அந்த நிலையில் இல்லை. ஆனால் போரைவிடச் சிக்கலான சவால்களை அவர் எதிர்கொண்டு நிற்கின்றார். அவரைச் சேர்ந்தவர்களே அவருக்குச் சவாலாகவும், தலையிடி கொடுப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். ஒரு கூட்டத்தை நடத்த முடியாத நிலையில் அரசு இருக்குமாயின் அதைவிடக் கேவலமான ஒரு விடயம் இருக்க முடியாது. இன்று கூட்டத்தை நடத்தவிடாமல் தடுப்பவர்கள் நாளை அரசையே முடக்கிவிட்டாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

## யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தரும் விளக்கம்

கடந்த 22ஆம் திகதி அன்று உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகம் பகுதியில் வெளியாகியிருந்த இ.இராஜேந்திரா சமாதான நீதவான் (தீவு முழுவதும்) என்ற அன்பரின் கடிதம் தொடர்பில் பதில் அளிக்க விரும்புகின்றேன்.

வாசகர் குறிப்பிட்டது போல் பல வருடங்களாக வர்ணம் பூசப்படாத பகுதிகள் யாவும் சீர்செய்யப்பட்டு வர்ணங்கள் பூசப்படுகின்றன.ஆனால் சாதாரணமாக வர்ணம் பூசுவதோடு நின்று விடாது வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும் வைத்தியசேவை பெறுபவர்களுக்குமிடையே புரிந்துணர்வையும் நல்லுறவையும் ஏற்படுத்த பல காரியங்கள் செய்யப்படுகின்றன.

குறிப்பாகத் தொடர்பாடலில் காணப்படும் குறைபாடுகள் பல சமயங்களில் சர்ச்சை ஏற்படக் காரணமாக அமைகின்றன. இவற்றைத் தீர்க்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தின் தலைசிறந்த யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் அனைத்து உத்தியோகத்தர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். குறிப்பாக போர் நிலவிய காலத்தில் இவ்வைத்தியசாலையில் பலர் மிகக் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் மதிக்கப்பட வேண்டியவர்கள்.

வாசகர் குறிப்பிட்டதுபோல் எனது காலத்திலேயே சகல வைத்தியசாலை ஊழியர்களும் நேரகாலம் பார்க்காது கடுமையாக உழைப்பதாக நான் என்றுமே கூறியதில்லை. அவ்வாறு கூற வேண்டிய தேவையும் எனக்கு இல்லை. மேலும் சிற்றூழியர்கள் பயத்தினால் வேலை செய்கிறார்கள் என்று கூறப்பட்டுள்ளமை தவறான கருத்தாகும்.

இந்தச் செய்தியை வாசிக்கின்ற ஊழியர்கள், நிர்வாகம் மீது பிழையான எண்ணம் கொள்ள முடியும். தற்போது வைத்தியசாலையில் வேலை செய்கின்ற சிற்றூழியர்கள் தொடக்கம் வைத்திய நிபுணர்கள் வரை மிகவும் சுமுகமான சூழலிலேயே சேவை செய்கின்றனர் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். குறிப்பாக சிற்றூழியர்களுக்குப் பல்வேறு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளதுடன்மேலும்வசதிகள்செய்துகொடுக்கப்படும்.

வைத்தியசாலை என்பது மிகவும் சிக்கலான, 24 மணிநேரமும் சேவைப் பரிமாற்றம் நடைபெறுகின்ற இடமாகும். வைத்தியசேவை பற்றிக் கூறப்படுகின்ற எழுந்தமானமான, உண்மைக்கு மாறான கருத்துக்கள் தப்பான அபிப்பிராயங்களை ஏற்படுத்தும்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வைத்திய நிர்வாகத் துறையில் கடமையாற்றிய அனுபவங்களைப் பெற்ற நான் இதற்கு முன்னரும் பல வைத்தியசாலைகளில் கடமையாற்றி இருக்கின்றேன். அத்துடன் போதியளவு கற்கை நெறிகளைப் பயின்று பயிற்சிகளையும் முடித்து இந்தப் பதவிக்கு வந்துள்ளேன்.

குறிப்பாக குழாமாகக் கடமையாற்றுவது பற்றியும் ஒற்றுமையுணர்வோடு கடமையாற்றுவது பற்றியும் எனக்குத் தெளிவாகத் தெரியும். அது முக்கியமானது என்பதையும் உணர்கின்றேன்.

கடந்த காலங்களில் சிறப்பாகப் பணியாற்றிய பணிப்பாளர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் பற்றியும் நன்கு அறிந்துள்ளேன். கடந்த காலங்களில் பல நெருக்கடியான காலகட்டத்திலும் என்னுடைய சேவையில் இருந்து நான் விலகிக் கொண்டதில்லை. வைத்தியசாலையில் தற்போது ஏற்படும் மாற்றங்களால் பலருக்கு நன்மை கிட்டும். ஒரு சிலர் அசௌகரியம் ஏற்படுவதாக உணரக்கூடும்.

ஒட்டு மொத்தத்தில் நோயாளருக்கு வழங்கப்படும் சேவையில் முன்னேற்றம் ஏற்படுத்தப்படும். தற்போதுள்ள கட்டடங்களின் பற்றாக்குறை, விடுதிகளில் உள்ள கட்டில்களின் பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை ஏனைய வளப்பற்றாக்குறை என்பவை நிவர்த்தி செய்யப்பட்டு எதிர்வரும் சில வருடங்களில் வைத்திய சேவை மேலும் முன்னேற்றம் அடையும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மருத்துவர் த.சத்தியமூர்த்தி
பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அல்-குவைதா பயிற்சி முகாமை ஏமனில் தாக்கியது அமெரிக்கா

சனா, மார்ச் 24
ஏமனில் இயங்கும் அல்-குவைதா பயிற்சி முகாம் மீது வான் வழித் தாக்குதல் நடத்தியுள்ளது அமெரிக்கா. இதனால் அல் -குவைதா போராளிகள் பலர் உயிரிழந்தனர் என அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் தெரிவித்துள்ளது. மேலும் அல்-குவைதா தோற்கடிக்கப்பட்டவுடன், ஏமனைத் தனது பாதுகாப்பான புகலிடமாக மாற்றியுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிவதாக பென்ரகன் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.
2009 ஆம் ஆண்டிலிருந்து ஏமனே அல் -குவைதாவின் பாதுகாப்பு அரண் என ஒசாமா பின்லேடன் பிரகடனப்படுத்தினார் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.
ஏமனில் இடம்பெறும் உள்நாட்டுப் போர் அல்- குவைதாப் போராளிகளின் ஆபத்தான ஆயதக் கடத்தலுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது என அவதானிகள் தெரிவித்தனர்.
தொடர்ச்சியான தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் அல் -குவைதா போராளிகளை அழிப்போம் என பென்ரகன் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த-ரி4)

## விஜயகாந்தை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொண்ட மக்கள் நலக் கூட்டணி

சென்னை, மார்ச் 24
தமிழகத்தில் வரும் சட்டமன்றத் தேர்தலில் தேமுதிக, மக்கள் நலக் கூட்டணியுடன் சேர்ந்து போட்டியிடுகிறது. இந்த அணியின் முதல்வர் வேட்பாளராக, தே.மு.தி.கவின் தலைவர் விஜயகாந்த் அறிவிக்கப்பட்டுள்ளார்.
தமிழக சட்டமன்றத் தேர்தலுக்காக மக்கள் நலக் கூட்டணியுடன் தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளதை உறுதி செய்யும் தே.மு.தி.கவின் அதிகாரபூர்வ செய்தி அறிக்கையில் இந்த தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளது.
மேலும் தே.மு.தி.க. மொத்தமாக 124 தொகுதிகளிலும், மக்கள் நலக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஏனைய கட்சிகள் 110 தொகுதிகளிலும் போட்டியிட ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
தே.மு.தி.க. கூட்டணிக்கு வரும் என்கிற நம்பிக்கையை இழக்கவில்லையென தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறிய இரண்டு நாள்களில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (த-ரி4)

## அரிய வகை நீலக்கல் வைரம் ஏலத்தில் சாதனை படைக்கும்

ஹொங்கொங், மார்ச் 24
அரியவகை நீலக்கல் வைரம் ஆசியாவில் இடம்பெறவுள்ள ஏலத்தில் சாதனைப் பதிவை ஏற்படுத்தும் என அனுமானிக்கப்பட்டுள்ளது.
டி பீர்ஸ் மில்லேனியம் எனும் 10.10 கரட்டில் உள்ள வைரம் உலகின் மிகப்பெரிய நீள்வட்ட வைரமாகும். பிரபல ஏல நிறுவனமான சோதபேயின் அறிமுகங்களில் இந்த வைரமும் சிறந்த சேகரிப்பு எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஏலத்தின்போது 30 தொடக்கம் 35 மில்லியன் டொலர் வரை இந்த வைரம் ஏலம் எடுக்கப்படும் என ஊகிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் மிகவும் அரிய வகை வைரம் என்பதால் இதன் பெறுமதி அதிகம் ஆகும். சமீபத்தில் இடம்பெற்ற புளூமூன் கல் ஏலத்தில், 48.4 மில்லியன் டொலருக்கு ஏலம் எடுக்கப்பட்டுச் சாதனைப் பதிவை ஏற்படுத்தியது. அந்த வரிசையில் இந்த வைரமும் சாதனைப் பதிவை எற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
குறித்த வைரத்தைத் தவிர வேறு பல வைரங்களும் ஏலத்தில் இடம்பெற இருக்கின்றன. கிட்டத்தட்ட 96 மில்லியன் பெறுமதியான வைரங்கள் எலமிடப்படவுள்ளன என ஏலநிறுவனம் அறிவித்துள்ளது. (த-ரி4)



# பிரசல்ஸ் தாக்

# பொறுப்பேற்ற

## 3 தற்கொலைக் குண்டுதாரிகளில்
## குண்டை வெடிக்க வைக்காது தப்



பிரசல்ஸ், மார்ச் 24
பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.
பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸ் நகரின் ஸவன்டெம் விமான நிலையத்தில் அடுத்தடுத்து நடந்த இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையக் குண்டுவெடிப்பு ஆகியவற்றில் 34 பேர் கொல்லப்பட்டனர். 230 பேர் காயமடைந்தனர். 14 பேர் விமான நிலையத் தாக்குதலிலும், 20 பேர் மெட்ரோ ரயில் நிலையத் தாக்குதலிலும் கொல்லப்பட்டனர். பிரசல்ஸ் தீயணைப்புத் துறை ஊடகப் பேச்சாளர் பியர் மெய்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.
ஒரு நிலையத்தில் நடந்தது தற்கொலைப்படைத் தாக்குதலாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.
விமான நிலையத்தில் தாக்குதல் நடந்த சில நிமிடங்களில், மெட்ரோ ரயில் நிலையத்திலும் குண்டு வெடித்தது. இந்த நிலையில் குறித்த கொடூரத் தாக்குதல் சம்பவத்துக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.
இதனிடையே, வெடிகுண்டுத்தாக்குதலின்எதிரொலியாக 3 நாள்கள் தேசிய துக்கம் அனுசரிக்கப்படும் என்று பெல்ஜியம் அரசு அறிவித்துள்ளது.
ஸவன்டெம் விமான நிலையத்தில் தாக்குதல் நடத்திய போராளிகளின் படங்கள் வெளியாகியுள்ளன. விமான நிலையக் கமராவில் பதிவாகியுள்ள படங்களில் 3 இளைஞர்கள் தள்ளு

> விமான நிலையத்தில் தாக்குதல் நடந்த சி
> மெட்ரோ ரயில் நிலையத்திலும் குண்டு
> நிலையில் குறித்த கொடூரத் தாக்குதல் சம்பவத்திற்
> வாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.
> இதனிடையே, வெடிகுண்டுத் தாக்குதலின் எதிரொ
> தேசிய துக்கம் அனுசரிக்கப்படும் என்று பெல்ஜிய
> துள்ளது.
> ஸவன்டெம் விமான நிலையத்தில் தாக்குதல் நட
> திய போராளிகளின் படங்கள் வெளியாகியுள்ளன.

வண்டியைத் தள்ளிக்கொண்டு விமான நிலையத்துக்குள் நுழைவது பதிவாகியுள்ளது.
படங்களில் வலது பக்கத்தில் இருப்பவன் தப்பி ஓடிவிட்டதாகவும், அவனைத் தேடும் பணிகள்

நடைபெற்று வரு
கள் செய்தி வெளி
ஸவன்டெம் நகர
தொடர்பில் தெரிவி
துக்கு ஒரு ரக்சியில்

தனித்தனியாகப்
இருந்த சூட்கேஸ்க
டிகளில் வைத்து வ
சென்றனர். கையு



உலகில் வாழும் இந்தியர்கள் அனைவரும் வண்ணமயமான கோலிப் பண்டிகையை அனுஷ்டித்தனர். விசேடமாக வட இ
பாதில் சில நாள்களுக்கு இது நடைபெறுவது வழமை. நாளை கோலிப் பண்டிகைக் கொண்டாட்டங்கள் நிறைவு பெறுகின்றன. ந
பர்கள், உறவினர், அயலவர்களுடன் இணைந்து வர்ணப் பொடிகளை அள்ளிவீசி இதனை மக்கள் கொண்டாடினர். (த-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதலுக்கு
# து ஐ.எஸ்.

## ல் ஒருவன்
## ப்பியோட்டம்



வருவதாகவும் சர்வதேச ஊடகங் வளியிட்டுள்ளன.

கர மேயர் வெடிப்புச் சம்பவம் ரிவிக்கையில், விமான நிலையத் யில் வந்த மூன்று தீவிரவாதிகள்

**5 சில நிமிடங்களில், டு வெடித்தது. இந்த த்திற்கு ஐ.எஸ். தீவிர**

**ராலியாக 3 நாள்கள் ழியம் அரசு அறிவித்**

**நடத் ன. ,,**

கப் பிரிந்து தங்கள் கையில் ஸ்களை வெவ்வேறு தள்ளுவண் து வரவேற்புக் கூடத்துக்கு தள்ளிச் கயுறை அணிந்திருந்த அவர்கள் தமது தோள்களில் மாட்டியிருந்த கைப்பைகளில் வெடிகுண்டுகள் இருந்துள்ளன. முதலில் மூன்று பேர்களில் இருவர் மட்டும் பைகளில் இருந்த குண்டுகளை வெடிக்க வைத்துள்ளனர். இன்னொருவன் பயந்து போய் குண்டை இயக்கி, வெடிக்க வைக்காமல் அங்கிருந்து ஓடியிருக்கக் கூடும் என அவர் தெரிவித்தார்.

தப்பிச் சென்ற மூன்றாவது நபரைத் தேடிப் பொலிசார் வலை வீசியுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார். அத்துடன் அவனது புகைப் படங்களையும் நிருபர்களிடம் காண்பித்தார். முகத்தில் கண்ணாடி அணிந்தபடி, வெள்ளைநிற மேல்கோட், கறுப்புத் தொப்பியுடன் காணப்படும் குறுந்தாடி நபர், ஒரு தள்ளுவண்டியில் தனது சூட்கேசை வைத்துத் தள்ளிச் செல்லும் காட்சிகள் அந்த போட்டோக்களில் இடம்பெற்றுள்ளன.

இந்தத் தாக்குதலுக்கு இந்தியா, இலங்கை, அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. தாக்குதலைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(து–ரி4)

# அமெ. பீரங்கித் தளம் மீது ஈராக்கில் ஐ.எஸ். தாக்குதல்



வொஷிங்டன்,மார்ச் 24

ஈராக்கில் உள்ள அமெரிக்கப் பீரங்கித் தாக்குதல் நடைபெறும் தளத்தின் மீது ஐ.எஸ். அமைப்பு தாக்குதல் நடத்தியுள்ளது. கடந்த 3 நாள்களில் 2 தடவைகள் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

வட ஈராக்கின் மஹ்முர் பகுதியில் அமைந்துள்ள பயர்பெல் எனப் படும் பீரங்கித் தளம் 10 ஐ.எஸ். போராளிகளால் தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் 2 ஐ.எஸ். அமைப்பினர் கொல்லப்பட்டதுடன், பல அமெரிக்க இராணுவத்தினர் காயமடைந்தனர் என இராணுவப் பேச்சாளர் ஸ்டீவ் வாரன் தெரிவித்தார்.

ஐ.எஸ். அமைப்பினர், ஈராக்கில் உள்ள அமெரிக்கப் பாதுகாப்பு வலயத்தினுள் எந்தளவு தொலைவில் இருந்து தாக்குதல் நடத்தினார்கள் என்பது குறித்து இராணுவப் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

ஆனால் சில நூறு மீற்றர் தொலைவில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை குறித்த பீரங்கித் தாக்குதல் தளம் மீது ஐ.எஸ். நடத்திய தாக்குதலில் ஒரு அமெரிக்கக் கடற்படை வீரர் உயிரிழந்ததுடன், 8 பேர் காயமடைந்தனர். ஈராக்கில் உள்ள அமெரிக்க பீரங்கித்தளம் ஐ.எஸ். அமைப்பின் இலக்குக்கு உள்ளாகியுள்ளது என ஸ்டீவ் வாரன் தெரிவித்தார்.

விமான மூலம் படையினர் கொண்டுவரப்படும் போது ஐ.எஸ். அமைப்பினரால் எளிதில் அவதானிக்க முடியும். தற்போது 200 கடற்படை வீரர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் என மேலும் அவர் தெரிவித்தார்.

(து–ரி4)



கென்யாவின் நைரோபிப் பிரதேசத்தில் யானைத் தந்தங்களைப் பாதுகாக்கும் களஞ்சிய அறையில் தந்தங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சட்டவிரோதமாகத் தந்தங்கள் கொள்வனவு செய்யப்படுதலும், வேட்டையாடுவதும் அதிகரித்துள்ளன. இதனால் 75 சதவீத ஆபிரிக்க யானைகள் வேட்டையாடப்பட்டுள்ளன. இந்த நிலை தொடருமாயின் 2025 ஆம் ஆண்டுக்கு முன்னரே ஆபிரிக்காவின் யானை இனம் முற்றாக அழியும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து–ரி4)




வட இந்தி
றன. நண்
ர். (து–ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

மருத்துவர் எஸ்.யூட்ரவி பச்சேக்,
பொது வைத்தியசாலை,
மன்னார்



> இது ஒரு ஆளைக் கொல்லுகின்ற ஆட்கொல்லி நோயாகும். உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினருக்கு தொற்றியுள்ள நோய். இத் தொற்றில்; 95 வீதமானோர் வளர்முக நாட்டவர் ஆவார். இதில் எமது நாடும் விதி விலக்கல்ல.

# காசநோய் ஒரு ஆட்கொல்லி

காச நோய் இல்லாத இலங்கையை, காச நோயற்ற வடமாகாணத்தை உருவாக்க ஒன்றுபடுமாறு உங்கள் அனைவரையும் இன்றைய காசநோய் தினத்தில் அன்புடன் அழைத்து நிற்கின்றேன். காச நோய் என்பது ஒரு தனிப்பட்ட பிரச்சினையல்ல, ஒரு பொதுப் பிரச்சினை, சமுதாயப் பிரச்சினை. எனவே சமூகத்தில் பற்றுள்ள நாம் அனைவரும் இணைந்து இதனைத் தடுக்கச் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது. துரித பொருளாதார அபிவிருத்தி இடம்பெற்றுவரும் எமது மாகாணத்துக்கு இந்த நோய் பற்றிய விழிப்புணர்வு இன்றியமையாத காலத்தின் கட்டாயமாக உள்ளது. இது மிகத் தொன்மையான எகிப்திய மம்மி காலத்துக்கு முற்பட்ட வரலாறு கொண்ட ஒரு கொடிய நோயாகும். இந்த நோய்க்கு எதிராக உலகம் பல நூற்றாண்டு காலமாக போராடிக் கொண்டே வருகின்றது.

இந்நோய்க்கு நாம் அளிக்க வேண்டிய முக்கியத்துவத்தை உலக தரவுகளின் அடிப்படையில் ஆராய்வது சாலச்சிறந்தது. இது ஒரு ஆளை கொல்லுகின்ற ஆட்கொல்லி நோயாகும். உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினருக்கு தொற்றியுள்ள நோய். இத்தொற்றில் 95 வீதமானோர் வளர்முக நாட்டவர் ஆவர். இதில் எமது நாடும் விதிவிலக்கல்ல. உலகில் ஒவ்வொரு செக்கனுக்கும் ஒருவர் தொற்றுக்குள்ளாவதும், இத்தொற்றுள்ளோரில் ஒருவர் ஒவ்வொரு நான்கு செக்கனும் நோயாளியாக மாறுவதும், மேலும், நோயாளியாக மாறியோரில் மூவர் ஒவ்வொரு நிமிடத்துக்கும் மரிப்பதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயுள்ளது. இவ்வாறாக ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 8 மில்லியன் பேர் நோயாளிகளாக மாறுவதும், இதில் 2 மில்லியன் பேர் இறப்பதும், ஒவ்வொரு வருடமும் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. மேலும், ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ ஒரு மில்லியன் குழந்தைகள் அனாவசியமாக இந்தநோய் அறியப்படாத நிலையில் இறக்கின்றனர். 15 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட உழைக்கும் வர்க்கத்தினரைத் தாக்கி அவர்களின் இறப்புக்கு காரணமான தொற்று நோயாகவும், HIV தொற்றுடையோரின் இறப்புக்கு காரணமான



தொற்றுநோயாகவும் முதல் இடம் வகிப்பது இந்தக் காசநோயே ஆகும். இது மட்டுமல்லாது தொற்றுநோயால் ஏற்படும் கர்ப்பவதிகளின் இறப்பில் முதலிடம் வகிப்பதும் இக்காசநோயே ஆகும். உலகில் ஏறத்தாழ 50 மில்லியன் பேர் பல்வகை மருந்தெதிர்ப்பு காசநோய்த் தொற்றுக்குள்ளாகி உள்ளனர். இந்தநோய்க்கானவிழிப்புணர்வு எமது வடமாகாணத்தை பொறுத்தளவில் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் எமது நாட்டை விட பலமடங்கு அதிக நோயாளிகளைக் கொண்ட தென் இந்தியாவுக்கு அண் மையில் எமது வடபகுதி உள்ளதும், எமது மக்களில் பலர் அகதிகளாக தஞ்சம் புகுந்து, பின் மீள்வதும், இரு நாடு களுக்கும் இடையில் சட்ட பூர்வமற்ற இரகசிய வணிகத் தொடர்புகள் நடைபெறுவதும் இந்நோயின் அதிக பாதிப்புக்கு காரணமாகும். மேலும் காலப் போக்கில் வலுப்பெற இருக்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் காரணமாகவும் தென்னிந்தியாவை ஒத்த நோயுள்ள நிலையில் எமது நாடும் மாறும் அபாயம் உள்ளது. எனவே இந்நோய்க்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது மிகமிக அவசியமாகியுள்ளது.

எனவே நாம் காசநோய் பற்றிய அறிவை பெற்றிருப்பதும், அதை மற்ற வர்களுடன் பகிர்ந்துகொள்வதும் கட் டாயமாகின்றது. இதற்காக நாம் காசநோய் என்றால் என்ன? இது எவ்வாறு பரவுகின்றது? எவ்வகையான இடங்களில் கூடுதலாக ஏற்படுகின்றது? எவருக்குக் கூடுதலாக உண்டாகின்றது? அவ்வாறு நோய் ஏற்பட்டவர்களில் காணப்படும் அறிகுறிகள் எவை? நோயாளியை இனம் காணல் மற்றும் அதற்கான சிகிச்சைகள் என்ன? தொற்று மற்றும் நோயாளிகளாக மாறாவண்ணம் நாம் எம்மை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது? போன்ற கேள்விகளுக்கு பதில் காண முற்படுவோமாக.....

காசநோய், 'மைக்கோபக்டீரியம் ரியூபகுளோசிஸ்' எனும் கோலுரு பக்டீரியாவினால் ஏற்படுகின்றது. இதில் பெரும்பாலும் 80வீதம் சுவாசப்பை காசநோய் ஆகும். 20வீதம் சுவாசப்பை தவிர்ந்த ஏனைய இடங்களில் ஏற்படும் காச நோயாக உள்ளது. இது முற்றாக குணமாக்க கூடிய நோயாகும். சிசிக்சை பெறத் தவறின் பெரும்பாலனோர் 5 வருடத்துக்குள் இறக்க நேரிடலாம்.

நுரையீரல் காச நோய்க்கு சிசிக்சை பெறாத அல்லது சிசிக்சையின் ஆரம்ப நிலையில் உள்ள ஒரு நோயாளி இருமும்போதும், தும்மும்போதும், அல்லது பலமாகச் சிரிக்கும்போதும் கிருமிகள் சளித்துணிக்கைகளுடன் சேர்ந்து வெளியேறும். இது காற்றினால் அடித்து செல்லப்பட்டு சுகதேகி ஒருவரின் சுவாசத்துடன் கலந்து, அவரின் சுவாசப்பையில் ஆழமான பகுதியில் குடிகொண்டு தொற்றை ஏற்படுத்தும். இவ்வாறாக ஒரு நோயாளி ஒரு வருடத்துக்குள் 10 தொடக்கம் 15 பேரானோருக்கு காசநோய் தொற்றை ஏற்படுத்துவார். இவ்வாறாக அறிந்தோ, அறியாமலோ எம்மில் பலர் தொற்று ஏற்பட்ட நிலையிலேயே உள்ளோம். பின்னர் எமது நிர்பீடனத்தன்மை அல்லது நோய் எதிர்ப்புசக்தி வலுவிழக்கும் வேளையில் இக்கிருமி பல்கிப் பெருகி நோயாக வெளிப்படும். இந்நிலையில் நோயாளி நோய்க்கான அறிகுறிகளை வெளிப்படுத்துவார். இவ்வாறாக நோயாக மாறும் சாத்தியம் தொற்றுள்ளோரின் 10 வீதம் மானோரிலேயே நிகழ்கின்றது, நோயாளியாகும். சந்தர்ப்பம் எவருக்கும் வாழ்க்கைக் காலத்தின் எந்நிலையிலும் ஏற்படலாம். எனவே நாம் அனைவரும் பின்னர் விவரிக்கப்படுகின்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை கைக்கொள்வது மிகமிக இன்றியமையாததாகும்.

இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கின்ற தொடர்ச்சியான இருமல், சளியுடன் இரத்தம் வெளியேறல், பசிக் குறைவு, நிறைக்குறைவு, இரவு நேரத்தில் வியர்த்தல், மாலை நேர இலேசான காய்ச்சல், இளைப்பு, நெஞ்சு நோ, படபடப்பு என்பவை சுவாசப்பை காச நோய்க்கான பொதுவான அறிகுறிகள் ஆகும். இவற்றில் ஒரு சில அறிகுறிகள் மட்டும் தென்படலாம். நுரையீரல் தவிர்ந்த ஏனைய இடங்களில் உண்டாகும் காசநோய்க்கு அந்த அந்த இடங்களுக்கு உரித்தான சில அறிகுறிகள் தென்படும். மேற்கூறப்பட்ட அறிகுறியுடையோர் அண்மையில் உள்ள மாவட்ட மார்பு நோய் சிசிக்சை நிலையத்துக்குச் சென்று தம்மைப் பரிசோதித்துக்கொள்ளல் வேண்டும். இங்கே மருத்துவர் நோயாளியை பரிசோதித்து காச நோயை நிர்ணயம் செய்ய சில பரிசோதனைகளை மேற்கொள்வார். இதற்காக சளிப்பரிசோதனை, எக்ஸ் கதிர் பரிசோதனை, மாண்டோ தோல் பரிசோதனை, சளிப்படலவளர்ப்பு பரிசோதனை, சில இரத்த பரிசோதனைகள், இழையப் பரிசோதனை, மரபு உயிரணு சம்பந்தப்பட்ட பரிசோதனைகள் போன்றவற்றில் சில மேற்கொள்ளப்படலாம். இவ்வாறு அடையாளம் காணப்படும் நோயாளிகளுக்கு முழுமையான ஆலோசனைகள் அளிக்கப்பட்டு பூரண சிசிக்சைகள் அளிக்கப்படும். பொதுவாக சிசிக்சை யின் கால எல்லை 06 மாதங்களாகும். இக்கால எல்லை நோயின் தன்மையைப் பொறுத்து வைத்தியரினால் தீர்மானிக்கப்படும். இந்தச் சிசிக்சைக்கான மாத்திரைகளை சரியான அளவில்சரியான காலத்துக்குதொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மறக்காமல் எடுத்தல் வேண்டும். இதற்காக குறுகிய கால நேரடி அவதானிப்பின் கீழான சிகிச்சை முறைகள் பரிந்துரைக்கப்பட்டு, நடைமுறைப்படுதப்பட்டு சிகிச்சையின் வெற்றி இலக்கு எட்டப்பட்டுள்ளது. தற்போது நாடு முழுவதிலும் பாவிக்கப்படுகின்ற நிரந்தர அளவு சேர்க்கை மருந்து இதற்கு வலுச்சேர்த்துள்ளது. இது சிறியவர்களுக்கு வேறாகவும் பெரியவர்களுக்கு வேறாகவும் சில வேறுபட்ட வடிவங்களுடன் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதனால்நோயாளி பழைய காலங்களைப் போல் அல்லாது மிக இலகுவாக வில்லைகளை விழுங்க முடியும். காசநோய் பற்றிய விழிப்புணர்வை நாமும் பெற்று அதை மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்வதோடு காச நோயற்ற நாட்டை உருவாக்கி விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காசநோயைத் தடுத்து களிப்புடன் வாழ்வோம்

பிரியா

இன்று உலக காசநோய் தினமாகும். ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் 24 ஆம் திகதி காசநோய் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நோய் ஓர் ஆட்கொல்லி நோயாகும். 1815 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாவுகளில் கிட்டத்தட்ட 25 சதவீத சாவுகள் இந்த நோயினாலேயே ஏற்பட்டன. கி.மு.5000 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே உலகத்தில் காசநோய் இருந்தமைக்கான சான்றுகள் உண்டு. இந்த நோய் பக்றீரியா நோய்க் கிருமியால் ஏற்படுகின்றது. 1882 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் திகதி விஞ்ஞானி றொபேட் குக்கினால் அது கண்டுபிடிக்கப்பட்டு மைக்கோ பக்றீரியா எனப் பெயரிடப்பட்டது. இதனாலேயே உலக காசநோய் தினம் இந்த நாளில் அனுஷ்டிக்கப் படுகிறது.

இந்தக் காசநோய்க்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட முன்னர் இந்த நோயாளிகள் சூரிய வெளிச்சம் நிறைந்ததும், காற்றோட்டமுள்ளதுமான வீட்டில் நிறைந்த ஓய்வும், போசாக்குள்ள உணவும் கொடுத்துப் பராமரிக்கப்படுவதே வழக்கமாக இருந்தது. 19 ஆம் நூற்றாண்டுக்கு முற்பகுதியில் இந்த நோய்க்கான BCG தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுப் பாவனைக்கு வந்திருப்பினும், இந்தத் தடுப்பு மருந்து காச நோய்க்கு 100 வீத பாதுகாப்பைக் கொடுக்கவில்லை. காசநோய்க்கிருமி கண்டுபிடிக்கப்பட்ட போதும் நோய்க்கான முதல் மருந்து Streptomycin 1994 ஆம் ஆண்டில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பினும் இந்த மருந்து பாவிக்கத் தொடங்கி இரண்டு வருடங்களிலேயே காசநோய்க்கிருமிகள் Streptomycin மருந்தை எதிர்த்துப் போராடக் கூடிய தன்மை கொண்ட கிருமிகளை உருவாக்கத் தொடங்கிவிட்டன. இதன் பின்னர் 1946 ஆம் ஆண்டில் Para amino salycilic aci- எனப்படும் மருந்தும், 1952 ஆம் ஆண்டில் Isoniazid, Rifampicin, Pyrazinamide ஆகிய மருந்துகளும் பின்னர் Ethambutol என்ற புதிய மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டன.

தனியாக ஒரு மருந்தைப் பாவிக்கும் போது காசநோய்க் கிருமிகள் அந்த மருந்தை எதிர்த்துப் போராடும் கிருமிகளை உருவாக்கியதால் 24 மருந்துகளைச் சேர்த்து நோய்க்குக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மேற்படி கலப்பு மருந்துகள் பாவனைக்கு வந்தபின்னர் காசநோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையத் தொடங்கியது. எனினும் 1980 ஆம் ஆண்டின் பின்னர் மீண்டும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. இதற்கு மூல காரணம் கிருமிகள் மருந்துகளை எதிர்த்துப் போராடக் கூடிய தன்மையைப் பெற்றதாகும். அத்துடன் HIV எனப்படும் நோய் எதிர்ப்புசக்தியை குறைவடையச் செய்யும் Virus கிருமி பரவத் தொடங்கியமையும் ஆகும். இத்தகைய காசநோயினால் உலகளாவிய ரீதியில் மக்கள் பின்வரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் எனலாம். அதாவது :

1. ஒரு வினாடிக்கு ஒருவர் என்ற கணக்கில் கிருமித் தொற்று ஏற்படுகின்றது.
2. ஒவ்வொரு பத்து வினாடிக்கும் ஒருவர்.காசநோயினால் சாவடைகின்றார்.
3. தற்போதைய உலக சனத்தொகையில் இரண்டு பில்லியன் பேர் கிருமித் தாக்கத்துக்குள்ளாகியிருக்கின்றனர்.
4. ஒவ்வொரு வருடமும் 8 மில்லியன் மக்கள் புதிதாக காச நோய்க்கு ஆளாகின்றார்கள்.
5. ஒவ்வொரு வருடமும் 3 மில்லியன் மக்கள் காசநோயால் சாவடைகின்றார்கள்.
6. ஒவ்வொரு வருடமும் புதிதாக அரை மில்லியன் மக்கள் சாதாரண மருந்துகளுக்குக் கட்டுப்படாத காச நோய்க் கிருமியால் ஏற்பட்ட நோய் உள்ளவர்களாக இனம் காணப்படுகின்றார்கள்.
7. ஒவ்வொரு சுவாசநோய் உள்ளவர்களும் 12 தொடக்கம் 15 வரையிலானவர்களுக்கு புதிதாக நோயைப் பரப்புகின்றார்கள்.

மேற்படி மோசமான இந்தக் காசநோயை விரட்டியடிப்பதற்கு மக்களாகிய நாம் எல்லோரும் இந்த நோய் பற்றி அறிய வேண்டியது அவசியமாகும்.




காசநோயானது காற்றின் மூலம் பரவும் மைக்கோ பக்ரீரியம் எனப்படும் பக்ரீரியா கிருமியின் தாக்கத்தால் ஏற்படுகின்றது. சுவாசப்பையில் காசநோய் உள்ள ஒருவர் இருமும் போதும் தும்மும் போதும் வெளிவரும் திரவத் துணிக்கைகள் இந்தப் பக்ரீரியாக்களைக் கொண்டிருக்கும். மேற்படி துணிக்கைகள் உட்சுவாசிக்கும் காற்றுடன் மற்றவர்களுக்குத் தொற்றுகின்றது.

காசநோய் உள்ளவர்கள் தும்மும் போதும் இருமும் போதும் வாயையும் மூக்கையும் துணியால் மூடிக்கொள்ள வேண்டும். காற்றில் இருக்கும் கிருமிகள் நல்ல காற்றோட்டமான இடத்தில் இருக்கும்போது ஐதாக்கப்படும். அதேவேளை நல்ல சூரிய வெளிச்சத்தில் இருபது நிமிடத்தில் அழிந்தும் போகும். ஆகவே காசநோயாளர்கள் நல்ல காற்றோட்டமானதும் சூரிய வெளிச்சம் படக்கூடியதுமான இடங்களில் பராமரிக்கப்படல் வேண்டும்.

இந்தக் கிருமி அனேகமாக சுவாசப்பை மூலம் உடலுக்குள் சென்றடைவதால் சுவாசப்பைக்குத் தான் பெரும்பாலும் பாதிப்பு ஏற்படுகின்றது. இருப்பினும் இந்தக் கிருமி இரத்தத்துடன் கலந்து எந்தப் பகுதிக்கும் பரவலாம். மேலும் இந்த நோய், நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களான நீரிழிவு, புற்றுநோய் மற்றும் HIV போன்ற நோய் உள்ளவர்களும், (Steroids) புற்று நோய்க்கான மருந்து பாவிப்பவர்களையும் கூடுதலாகத் தாக்குகின்றது.

இந்தக் காரணத்தால் இந்த நோய் உள்ள ஒவ்வொருவரும் மருந்துகளை சரியான முறையில் பாவிப்பது மிக முக்கியமாகின்றது.



காசநோய் ஏற் பட்டவர்களுக்கு காய்ச்சல், இருமல், சளியுடன் இரத்தம், நெஞ்சு நோ, பசியின்மை, உடல் மெலிவடைதல், களைப்பு ஆகிய நிலைகள் ஏற்படலாம்.

சுவாசப்பை காசநோய் சளிப் பரிசோதனை மூலம் கண்டறியப்படுகின்றது. அதேபோல நோயாளி குணமடைகின்றாரா என்பதும் இதன் மூலம் கண்டறியப்படுகின்றது. மருந்துகளைச் சரியாகப் பாவிப்பதன் மூலம் இந்த நோயை முற்றாகக் குணப்படுத்த முடியும். இந்த நோயைக் குணப்படுத்த 68 மாதங்கள் வரை மருந்து எடுக்க வேண்டும். எலும்பில் அல்லது மூளையில் மேற்படி நோய் ஏற்பட்டால் பல ஆண்டுகளுக்கு மருந்து எடுத்தல் வேண்டும். இரண்டாம் தடவை காசநோய் வந்தவர்களும், முதல் மருந்து எடுத்து அரைவாசியில் மருந்து எடுக்காமல் விட்டவர்களும் முதல் இரண்டு மாதங்களுக்கு ஊசி மருந்து போடுதல் வேண்டும்.

அனேகமாக முதல் 23 வாரங்கள் இந்த விடயம் சம்பந்தமாக விடுதியில் நின்று மருந்து எடுக்க வேண்டும். இதற்குக் காரணம் மருந்து உட்கொள்வதை உறுதி செய்வதற்கும், மேலும் மருந்தால் வரும் பக்கவிளைவுகள் உங்களுக்கு ஏற்படவில்லை என்பதை அறிவதற்கும் ஆகும். இந்த மருந்து பாவிக்கத் தொடங்கி 2 வாரங்களின் பின் காசநோய்க்கு ஆளானவரிடமிருந்து மற்றவர்களுக்கு இந்த நோய் தொற்றுதல் மிகமிக குறைவடையும். இதன் பின்னர் மருந்தை வேறு ஒருவரின் மேற்பார்வையில் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். இருமும்போது வரும் சளியை போத்தல் அல்லது பிளாஸ்ரிக் பாத்திரத்தில் வெளியகற்றி மூட வேண்டும்.

காசநோயாளர்களை காற்றோட்டமானதும் சூரிய வெளிச்சம் உள்ளதுமான இடத்தில் வைத்துப் பராமரிக்க வேண்டும்.

காச நோய்க்கான மருந்துதை காலை சாப்பாட்டின் முன் எடுத்தல் வேண்டும். கர்ப்பவதிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் இந்த மருந்தை எடுக்கலாம். மருந்து தொடங்கிய 2ஆம், 5 ஆம், 6 ஆம் மாதம் மூன்று சளிப் பரிசோதனைகள் செய்வதன் மூலம் நோய் குணமடைகின்றதா? என்பதை அறிய முடியும்.

சிறுநீர் சிவப்புநிறமாகவோ அல்லது உமிழ்நீர் இளம் சிவப்பு நிறமாகவோ மாறலாம். இது மருந்தின் தன்மை, இதற்குப் பயப்படத் தேவையில்லை. ஆனால் குமட்டல், சத்தி, கண் பார்வை மங்கல், தோல் சொறிவு, கால் விறைப்பு போன்ற தன்மைகள் இருப்பின் உடனடியாக மருத்துவரை நாட வேண்டும். மேற்படி பக்கவிளைவு சிலருக்கு ஏற்படலாம். இந்தப் பிரச்சினைக்கு இலகுவான தீர்வுகள் உண்டு.

நோயுள்ள காலத்தில் சத்துள்ள ஆகாரங்கள் சாப்பிட வேண்டும். கிரந்தித் தன்மை கொண்ட மீன், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி போன்ற உணவுகளை மேற்படி மருந்து எடுக்கும் காலத்தில் தவிர்க்கவும். அத்துடன் மது அருந்துதல், புகைப் பிடித்தல் போன்றவையும் தவிர்க்கப்பட வேண்டும். நோயாளியுடன் பழகுபவர்களில் 30 வீதமானவருக்கு கிருமித் தொற்று ஏற்படலாம். கிருமித்தொற்று ஏற்பட்டவர்களில் 10 வீதமானவருக்கே நோய் ஏற்படும். ஆகவே நோயாளியின் வீட்டில், விடுதியில் இருப்பவர்கள் சளி மற்றும் X - Ray பரிசோதனை முதல் இரு வாரங்களிலும், மேலும் 6, 12, 18 ஆம் மாதங்களிலும் செய்தல் வேண்டும். சாதாரண கண்ணுக்குப் புலப் படாத நுணுக்குக் காட்டிக்கு மட்டும் புலப்படும் இந்தக் கிருமி, இந்தப் பிரபஞ்சத்தில் தன்னை நிலை நிறுத்தப் போராடுகின்றது. நாம் எல்லோரும் ஒன்றுகூடி மேற்படி கிருமியை விரட்ட எம்மால் முடிந்த வரையில் போராடி வெற்றி பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மண்தான் எல்லாமும்



கீழ்த்திசையில் கதிரொளி தோன்றிய காலை நேரம். ஆறு மணியிலிருந்து பத்து மணி வரையிலான இது வைகறையை அடுத்த சிறுபொழுது. ஒரு திடலில் மேய்ந்து கொண்டிருந்த கௌதாரிப் பறவைகளுள் ஒன்று காட்டீட்டர்... காட்டீட்டர்... எனக் குரல் எழுப்பியது. அதைக் கேட்ட பசுமைப் பாடசாலைக் குழந்தைகள் ஆவலுடன் அதனருகே செல்ல, அனைத்துக் கௌதாரிகளுமே சற்றுத் தொலைவு ஓடிப் பிறகு விருட்டெனப் பறந்து விட்டன.

குழந்தைகள் சற்று ஏமாற்றத்துடன் நின்றபோது, திடீரென, பாம்பு, பாம்பு என்று அலறினாள் நேயா. தரையின் மேல் செந்நிறத்தில் ஊர்ந்துகொண்டிருந்தது ஒரு மண்ணுளிப் பாம்பு. அதைக் கண்ட குழந்தைகள் பயந்து ஒதுங்கினர்.

"பயப்பட வேண்டாம் குழந்தைகளே. உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன்" என்றது அந்தப் பாம்பு.

"நீ கடித்தால் தொழுநோய் வந்துவிடும் என்பார்களே?" அச்சம் விலகாமல் பதில் சொன்னாள் நேயா.

"அது முழுப் பொய். நான் நச்சுப் பாம்பும் இல்லை. ஒரு வகையில் என்னைப் பாம்பு என்று சொல்வதைவிட மண் புழுவின் அக்கா என்று சொல்லலாம். மனிதருக்கு எந்தத் தீங்கும் செய்யாமல் மண்ணுக்குள்ளேயே வசிக்கிறேன்."

குழந்தைகள் கொஞ்சம் தைரியத்துடன் அருகே வர, நிலம் பற்றிச் சொல்லத் தொடங்கியது மண்ணுளிப் பாம்பு.

"நிலம் என்றாலே மண்தானே? ஒரு கிராம் மண்ணில் ஆயிரக்கணக்கான வகைகளைச் சேர்ந்த கோடிக் கணக்கான நுண்ணுயிர்கள் வசிக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"அப்படியா! நம்பவே முடிய வில்லையே" என்று வியந்தனர் குழந்தைகள்.

"தாவரங்களுக்குத் தேவையான தழைச்சத்தை இந்த நுண்ணுயிர்களில் ஒருவகை பக்ரீரியாதான் கொடுக்கிறது. மேலும் சாம்பல் சத்து, மணிச் சத்து ஆகியவற்றையும் பயிர்கள் மண்ணிலிருந்துதான் பெறுகின்றன. மண் இல்லையென்றால் உயிரினங்கள் இல்லை, நீங்களும் இல்லை."

"எப்படி?" என்றாள் நேயா.

"மனிதர்களுக்கு அவசியமான பிற சத்துகளான தாதுக்கள் மண்ணிலிருந்துதானே உணவுப் பொருள்களின் வழியாகக் கிடைக்கின்றன. அது மட்டுமல்ல, உயிர் வாழ அவசியமான நீரையும் நிலம் தானே நிலத்தடி நீராகச் சேமித்து வைத்துத் தருகிறது?" உண்மை என்று ஒத்துக்கொண்டனர் குழந்தைகள்.

"நிலம் என்பது வெறும் மண் மட்டுமல்ல. அது கார்பன் சேமிக்கும் மிகப் பெரிய இடமும்கூட. புவி வெப்பமயமாதலுக்குக் காரணமான கார்பன், மீதேன் ஆகியவற்றைக் கரியாகவும், எரிவாயுவாகவும் அது தனக்குள்ளே பாதுகாப்பாக வைத்துள்ளது. ஆனால், அதையெல்லாம் தோண்டியெடுத்துத் தமக்குத்தாமே அழிவைத் தேடிக் கொள்கிறார்கள் மனிதர்கள்."

"வேதி உரங்களாலும் நிலத்தைக் கொன்று விட்டார்கள், இல்லையா?"

"மிகச் சரியாகச் சொன்னீர்கள் குழந்தைகளே! நீங்களாவது உங்கள் காலத்தில் நிலத்தைக் காப்பாற்ற முயலுங்கள்" என்ற மண்ணுளிப் பாம்பு, தொலைவில் சிலர் வருவதைப் பார்த்துவிட்டுச் சொன்னது.

"எவரோ வருவதுபோலத் தெரிகிறது. என்னைப் பிடித்து விற்றால் கோடி ரூபாய் கிடைக்கும் என்று பல மூடர்கள் என்னைத் தேடி அலைகிறார்கள். அதனால் நான் சென்று வருகிறேன் குழந்தைகளே!"

மீண்டும் நிலத்துக்குள் புகுந்துகொண்டது மண்ணுளிப் பாம்பு.

---

# வரலாற்றில் இன்றைய தினம்

1603 – முதலாம் எலிசபெத் மரணமானதையடுத்து ஸ்கொட்லாந்தின் ஆறாம் ஜேம்ஸ் இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து முதலாம் ஜேம்ஸ் மன்னரானார்.

1707 – யூனியன் 1707 சட்ட வரைவின் மூலம் ராச்சியங்கள் மற்றும் இங்கிலாந்து ஸ்கொட்லாந்து நாடாளுமன்றங்கள் இணைந்து பெரிய பிரித்தானிய இராச்சியம் -கிங்டம் ஒப் கிறேற் பிரிட்டன் -முறையாக உருவாக்கப்பட்டது.

1837 – ஆபிரிக்க கனேடியர்களுக்கும் வாக்கு உரிமையை கனடா வழங்கியது.

1854 – வெனிசுவெலாவில் அடிமைத்தனம் இல்லா தொழிக்கப்பட்டது.

1878 – பிரித்தானிய விரைவு போர்க்கப்பல் எச்.எம்.எஸ்.யூரிடைஸ் மூழ்கி 300 இற்கும் மேற்பட்டோர் சாவு.

1882 – றோபேட் கொச் இனால் காசநோய்க்குக் காரணமான நுண்பக்ரீரியா கண்டு பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

1896 – வரலாற்றில் முதன்முதலாக வானொலி சமிக்ஞை ஏ.எஸ்.போபோவால் அனுப்பப்பட்டது.

1934 – அமெரிக்க காங்கிரஸ் ரைடையிங் மக்டபி ஒப்பந்தத்தின் மூலம் சுயாட்சியுடைய பொதுநலவாயநாடாக பிலிப்பைன்ஸை அனுமதித்தது.

1944 – 335 இத்தாலியர்களை ஜேர்மன் துருப்புக்கள் றோமில் படுகொலைசெய்தனர்.

1946 – பிரிட்டிஷ் இந்தியாவிடம் அதிகாரத்தை மாற்றுவது பற்றி கலந்துரையாட லோர்ட் பெதிக் லோறன்ஸ், சேர் ஸ்ரபோர்ட் கிறிப்ஸ் மற்றும் ஏ.வி அலெக்ஸாண்டர் உட்பட்ட கபினட் அந்தஸ்துடைய பிரிட்டிஷார் இந்தியா வந்தடைந்தனர்.

1958 – 'றொக் என் றோல்' இளம் நாயகன் எல்விஸ் பிறெஸ்லி அமெரிக்கப் படையில் இணைக்கப்பட்டார்.

1965 – நாஸா விண் ஓடம் றேஞ்சர் 9 சாதாரண வீட்டு தொலைக்காட்சியில் காணக் கூடிய சமிக்ஞைகளை அனுப்பும் உபகரணங்கள் மூலம் சந்திரனின் தரைத்தோற்றங்களை தரையில் மோதுவதற்குமுன் அனுப்பியது.

1972 – வடஅயர்லாந்து ஆட்சியை ஐக்கிய இராச்சியம் நேரடியாகத் தன் கீழ் கொண்டுவந்தது.

1989 – அலஸ்காவில் கப்பலொன்று தரைதட்டியதில் 240,000 பரல் மசகு எண்ணெய் கடலில் கலந்தது.

2008 – பூட்டான் தனது முதலாவது பொதுத் தேர்தலுடன் ஜனநாயகக் குடியரசானது.

---

# திருக்குறள் மகிமை



"கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி, குறுகத் தறித்த குறள்" எனத் திருக்குறளைப் பற்றி இடைக்காடர் கூறுவர். அதாவது சிறிய அளவிலான கடுகினில் துளையிட்டு அதனுள் ஏழுகடல்களைப் புகுத்தினால் எப்படியிருக்கும்? அதுபோல ஒன்றரை வரியினுள் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்த பாடல்களே குறள்களாகும்.

அதனையே ஔவையாரும் அணுவைத் துளைத்தேழ். கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள் என வழி மொழிகின்றார்.

கடுகாயினும் கண்ணுக்குப் புலப்படும். ஆனால் அணு வெறுகண்களுக்குத் தெரியாது. அவ்வளவு நுண்ணியதான அணு பெரிய ஆற்றல் கொண்டது. அது போன்று திருக்குறளும் ஒன்றரை வரிகொண்டதாயினும் அதன் ஆற்றல் அளப்பரியதென்கிறார் ஔவை.

அது சிந்தனைக்கு இனிமை தரும்.கேட்கும் போது செவிக்கினிமை தரும். பாடும்போது வாய்க்கு இனிமை தரும். அல்லாமலும் நரம் எப்படி வாழவேண்டும் எனவும் அறிவுரை தருகின்றது. நீதியைப் பற்றிக் கூறுகின்றது. நியாயத்தைப் பற்றிக் கூறுகின்றது. குறளில் கூறப்படாதது எதுவுமே இல்லையென்று கூறுவர்.

எல்லாப் பொருளும் இதன்பால் உள்ளது என மதுரைத் தமிழ்நாகனார் என்பவர் கூறுகின்றார். இல்லாத எப்பொருளும் இதில் இல்லையென்றும் கூறுகின்றார்.

ஓத எளிதானது குறள். அதாவது படிப்பதற்கு இலகுவானது. அதனை நாம் விளங்கிக்கொண்டால் வேதப் பொருளை விளங்கியதற்குச் சமனாகும். அதன்படி நடந்தால் நாம் உலகம் போற்ற வாழலாம். தினையளவு சிறு அறிவுடையோரும், இதனைக் கற்றால் பனையளவு அறிவுடையவராக விளங்கிடுவர் என கபிலர் எனும் புலவர் புகல்கின்றார். வள்ளுவரின் குறளைக் கற்று, அதன் படி வாழ்வோரே உண்மையான மனிதர் ஆவர்.

கல்வி பற்றியும் ஒரு அதிகாரம் உள்ளது. 'கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என் பது அதன் முதலாவது குறள். குற்றங்கள் நீங்குவதற்கு கல்வி கற்றவேண்டும். அதற்கேற்ற நூல்களை தெரிந்து எடுத்துக் கற்க வேண்டும். கற்றபின் தகுந்தபடி நடக்க வேண்டும் என வள்ளுவர் கூறுகின்றார். கற்கும் மாணவர்களுக்கு இது மிக நல்ல வழிகாட்டியல்லவா?

'கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையவர் கல்லாதவர்" என கல்வியின் சிறப்பை மிக அற்புதமாக வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். அது எமக்கு ஒரு பாடமாகும். கற்கும் ஒவ்வொரு வேளையும் இக்குறளை நாம் சிந்தையில் கொள்ளவேண்டும். கல்லாதவர்களை பிறர் ஏளனம் செய்து அவமதிக்கலாம். நாம் அவமதிப்புப் பெறாதிருக்க கற்க வேண்டும் என வள்ளுவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே கூறிச் சென்றுள்ளார்.

தமிழின் அதி உன்னத படைப்பு திருக்குறள் என்றால் அது மிகையாகாது. இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னர் அது படைக்கப்பட்டது. அதனைத் தெய்வப் புலவர் வள்ளுவர் ஆக்கினார் என்பது நாம் அறிந்ததே. எந்தச் சமயங்களையும் குறிப்பாக அது உணர்த்தவில்லை. ஆயினும் பொது நீதியை அது கூறுகின்றது. அதனால் திருக்குறள் 'பொதுமறை' எனவும் போற்றப்படுகின்றது.

திருக்குறளுக்கான விளக்க உரையை பல அறிஞர்கள் எழுதியுள்ளனர். பத்துக்கு மேற்பட்டோர் அவ்வாறு உரை எழுதினர். இன்னம் புதுப்புது விளக்கங்கள் திருக்குறள் ஊடாக உணரப்படுகின்றது. அதனால் இப்போதும் பலர் உரை எழுதுகின்றனர். திருவள்ளுவர் பிறந்து ஆயிரத்து நாறூறு வருடங்களின் பின் பரிமேலழகரும் அதற்கு உரை எழுதினார். அது சிறந்த உரையாகக் கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு உரை எழுத மிகுந்த ஆராய்வு ஊக்கம் தேவை. அந்த உரைகளே எமக்கு திருக்குறள் பற்றி விளக்கத்தை விவரமாகத் தருகின்றது. அதனை விரும்பி படிக்க உதவுகின்றது.

திருக்குறள் 133 அதிகாரங்களைக்கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும் 10 குறள்களைக்கொண்டது. மொத்தம் 1330 குறள்களைக்கொண்டது. வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது குறளாகும். அதனை நாம் கற்றுத் தேர்ந்திட வேண்டும். அதன்வழி வாழவேண்டும்.

–செல்லத்தாத்தா

---



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணங்களுக்கு அதிகாரம் மைத்திரியால் சாத்தியமாகுமா?

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்குத் தயாராகவுள்ளதாக ஹிக்கடுவையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாகாண முதலமைச்சர்களின் 32 ஆவது மாநாட்டில் உரை நிகழ்த்துகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

1987 இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியாக மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. எனினும் ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டரீதியாக வழங்கப்பட்டிருக்க வேண்டிய பொலிஸ், காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின் மூலம் வடக்கு- கிழக்கு இணைப்பும் துண்டிக்கப்பட்டது. இதன்பின்பு வாழ்வின் எழுச்சி போன்றவையூடாக மாகாண சபைகளின் அதிகாரங்கள் சிறிது சிறிதாகப் பறிக்கப்பட்டு இன்று அதிகாரமற்றவையாக மாகாண சபைகள் உள்ளன. இப்படியான நிலையிலேயே மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது குறித்து ஜனாதிபதி ஹிக்கடுவையில் தெரிவித்துள்ளார். அதாவது அரசிடம் உள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது என்பதை ஜனாதிபதியின் கூற்று வெளிப்படுத்துகிறது. எப்படியான அதிகாரங்கள் வழங்கப்படப் போகின்றன என்பது புதிய அரசமைப்பிலேயே வரையறை செய்யப்படவுள்ளது.

மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து (13+) மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் கூட யோசனை தெரிவிக்கப்பட்டது. 2009 இல் போர் முடிவடைந்த பின்னர் இலங்கை வந்த ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ- மூனிடம் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று மகிந்த வாக்குறுதியளித்தார். இந்தியாவிடமும் இதேபோன்ற உறுதிமொழி வழங்கப்பட்டது. எனினும் போர் வெற்றியின் பின்னர் மமதையில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்யவும் மாகாண சபைகளை ஒழிக்கவுமே மகிந்த தரப்பினர் முயன்றனர். இந்தியாவின் தலையீடு காரணமாக இது கைகூடாமல் போகவே மாகாண சபைகளின் அதிகாரங்கள் பிடுங்கப்பட்டன. இப்படியாகவுள்ள மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்கப் போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.




உலக அரசியலில் எப்போதும் கல்விமான்கள், புத்திஜீவிகள் அரசமைப்பு நிபுணர்கள் அதிகாரத்தைக் குவிப்பதிலன்றி, அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பாகவே கவனம் செலுத்தி வருகின்றனர். இந்த எண்ணக் கருவானது எந்த வகையிலும் பலவீனமடையாது. அதற்கு எதிராக ஏதேனும் கருத்து முன்வைக்கப்படுமானால் அது அபிவிருத்தி அடையாத சமூகம் ஒன்றின் குணவியல்பாகவே கருத்தப்படும். இன்று உலகில் உயர்ந்தபட்ச அபிவிருத்தியை எய்தியுள்ள அனைத்து நாடுகளும் அதிகாரப் பகிர்வு மற்றும் பிரதேச அபிவிருத்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசமைப்பின் ஊடாகவே அதனை எய்தி உள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆகவே, மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார் என்பதை அவரது உரை புலப்படுத்துவதாக உள்ளது. ஆனால் எந்த ஓர் அதிகாரப் பகிர்வும் 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைவிடக் கூடுதலானதாக இருக்க வேண்டியது அவசியமாகும். 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீளவும் வழங்குவதும் இனப் பிரச்சினைக்குத் தீர்வாகாது. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் (13+) சென்று தமிழ் மக்கள் மற்றும் தமிழ்பேசும் மக்கள் ஏற்கக் கூடிய சமஷ்டிக்கு ஒப்பான தீர்வு ஒன்றைக் காண்பதே இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமைய முடியும்.

## செயற்பாட்டுத்திறன் மிக்க கொழும்புத்துறை
# துரையப்பா வித்தியாலயம்

அன்ரனி பீற்றர்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

யாழ்.நகரின் கிழக்குப் பகுதியிலே கொழும்புத் துறையில்அமைந்துள்ள துரையப்பா வித்தியாலயம்,பொன்விழாவைக் கடந்து 52 ஆண்டிலே கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் சிறிய பாடசாலையாகும். தரம் பதினொன்று வரையான வகுப்புக் களை உள்ளடக்கி அண்மைக் காலத்தில் அதிபரான நடேசு தயாளனின் தலைமையில், மிகவும் துரிதமான வளர்ச்சி கண்டு வருகிறது என்பது, பலர் அறியாத விடயமாக இருக்கலாம். அண்மையிலே கல்வி அமைச்சாலே (மத்திய கல்வி அமைச்சு) 2015ஆம் ஆண்டிலே, கட்டமைப்புக் கொண்ட, செயற்பாட்டுத் திறன்மிக்க பாட சாலைகளைத் தெரிவு செய்யும் கல்வி அமைச்சின் தரம் பேணும் மேற்பார்வையின் மூலமாக, வட பகுதியிலே தெரிவு செய்யப் பட்ட பாடசாலையாக இந்தச் சிறிய பாட சாலை விளங்குவது எமக்கும் சிறப்புத் தரும் ஒரு செய்தியாகும்.

**அதிபரின் ஆளுமை:**

ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் பலருடைய பங்குபற்றுதலின் ஊடாக, மாற்றம் ஏற்படுகின்றது என்பது, ஏற்றுக் கொள்ளப் படும் ஒரு விடயமாகும். ஆனாலும் தலைமை நிர்வாகியாகிய பாடசாலை முதல்வரின் சோர்வில்லாத, முன்மாதிரியான, புதிய நுட்பங்களுடான முகாமைத்துவம் முதன்மையானதாகக் கொள்ளப்படுகின்றது. இந்த வகையில் மேற்சொன்ன முகாமைத்துவப் பண்புகளுடன் உயர்நிலைக் கல்வித் தரத்தையும் உடைய, மொழிப் புலமையுடன் கூடிய ஆளுமை கொண்டவராக, கொழும்புத் துறை துரையப்பா வித்தியாலய அதிபர் நடேசு தயாளன் விளங்குகின்றார் என்பதைக் கல்வி அமைச்சே வெளிப்படுத்தியும் உள்ளது.

**கற்றல் இலக்கு:**

கற்றல், கற்பித்தல் இலக்கை நோக்கிய, பயணத்திலே திட்டமிடல், ஒழுங்கமைத் தல், மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல், தவறுகளைத் திருத்திக் கொள்ளுதல், கற்றல் இலக்கை அடைவதற்கு முகாமைத்துவக் குழுமூலமாகச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் என்பவை மிகவும் முக்கியமான செயற்றிறன் மிக்க சிறந்த முகாமைக்கு வெற்றி தருவ தாகும்.

குறைந்த மாணவர்களைக் கொண்ட (வறிய மாணவர்கள்) பாடசாலையாக. துரையப்பா வித்தியாலயம் விளங்குகின்றபோதிலும் அண்மைக்கால வளர்ச்சி அபரிமிதமானதென்றே கூறவேண்டும்.

**பங்குகொள் முகாமைத்துவம்:**

கல்வி நிர்வாகச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து, பொறுப்புக்களைப் பகிர்ந்து கொடுத்து ஆலோசனைகளை, வழிகாட்டல்களை மேற்கொண்டு பகுப்பாய்வு, மதிப்பீடுகளை மேற்கொண்டு, ஆய்வு அறிக்கைகளை பேணி, தரவுகளின் அடிப்படையில் முன் னேற்ற ஏற்பாடுகளை செய்கின்றபோது, இலக்கு நோக்கிய அடைவை அதிகரிக்கச் செய்யலாம் என்பதற்கு உதாரணமாக, துரையப்பா வித்தியாலயத்தின் பங்கு கொள் முகாமைத்துவ வெற்றியைக் குறிப்பிடலாம்.

**வசதிப்படுத்தலும், சூழமைவை ஏற்படுத்தலும்**

கற்றல், கற்பித்தல், நிர்வகித்தலை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு, வசதிப்படுத்தலும் சூழமைவும் முக்கிய பங்கை வகிக்கின்றன. சூழமைவின் தரத்துக்கேற் பவே கற்றல், கற்பித்தல், செயற்பாடுகள் வெற்றியளிக்கும். மாணவர், ஆசிரியர், பெற்றோர்களை ஈர்க் கின்ற வகையில் அமைந்து, மகிழ்ச்சியான உடற்பயிற்சி, காலை வழிபாடு, வகுப்பறைகளின் நிலை, ஆசிரியர் மாணவர் வகிபாக மகிழ்வான மனோநிலை, உபகரண வளப் பயன்பாடு ஆசிரியர்களின் உண்மையான, மனச் சாட்சியுள்ள பங்களிப்பு ஏற்படுத்தப்பட்டு, அமைகின்ற போது இலக்கு நோக்கிய பயணம் பயன் மிக்கதாக இருக்கும். இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் பழைய மாணவர், பெற்றோர்கள், நலன் விரும்பிகளின் பங்களிப்பு மிகவும் வேண்டப்படுவது ஆகும்.

**மாற்றங்கள் மூலமான வளர்ச்சிநிலை**

52 வருட கல்விச் சேவை செய்யும் கலையகமாக கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், தற்போதைய முதல்வர் நடேசு தயாளன் தலைமையில் பெரிய பாடசாலைகளுக்கு ஈடாக, அதேவேளை பெரிய பாடசாலைகளிலே காணப்படாத புத்தாக்க, புத்தூக்க செயற்பாடுகளையும், கற்றல் கற்பித் தலுக்குமான வளங்களையும் கொண்டுள்ளதை பாராட் டாமல் இருக்க முடியாது. முதல்வரின் ஆளுமை வழிகாட்டலும், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒன்றிப்பான ஈடுபடுதலும் பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்பும், பாடசாலையின் வளர்ச்சிச் சான்று களை காட்சிப்படுத்தி நிற்கின்றன. உதாரணத்துக்கு பாடசாலையின் நுழைவாயில் வடிவமைப்பு, சிமெந்துத்தரை சரஸ்வதி சிலை, முதல்வரின் அலுவலகமும் அமைப்பும், கணினி அறை, காட்சிப் பலகை, மண்டபமும் மேடையும், விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், ஆரம்ப வகுப்பறைகள், ஏனைய வகுப்பறைகளில் மின் விசிறி வசதி, மலசல கூட வசதி, மரங்கள் சூழ்ந்த சிறுவர் பூங்கா, பாடசாலைக்கான இணையத் தளம், நேரசூசிகை அடிப்படையிலான, தானியங்கி மின்மணி இவைகளைக் குறிப்பிடலாம். இவையெல்லாம் தானாக வந்து சேர்ந்தவையல்ல, முதல்வரின் முழுமூச்சான, முன்மாதிரிகையான, பங்கு கொள்ளுதலுடனான முகாமைத்திறனின் வெளிப்பாடு என்பது வெள்ளிடைமலையாகும்.

## சீடத்துவ அர்ப்பணிப்பு மனிதத்தின் உற்பவிப்பு

இறைமகன் இயேசு அன்புக்கும் தாழ்ச்சிக்கும் சீடத்துவத்துக்கும் புதிய வரைவிலக்கணம் வகுத்தது. அதை வாழ அழைப்பு விடுத்ததோடு, தமது உடனிருப்பை இறைபிரசன்னத்தை உறுதிப்படுத்தும் திவ்விய நற்கருணையை தமது தசையும் குருதியுமாக எமக்குத்தந்த மேன்மைமிக்க புனித வியாழன் இன்றாகும்.

இயேசு தாம் இந்த உலகைவிட்டுப் செல்லப்போவதை அறிந்தவராய் தமது சீடர்கள் வழியாக எமக்குப் புதிய பாடத்தை கற்றுக் கொடுக்க விளைகின்றார். எஜமானின் கால்களை அடிமை கழுவும் நடைமுறைக்கு மாறாக குருவும் போதகருமாகிய இயேசு என்னும் எஜமான் பணியாளர்களின் கால்களைக் கழுவுகின்றார். பட்டம், பதவி, தலைமை, அனைத்தும் சீடத்துவப்பணியின் முன்னால் துச்சமானது என உணர்கின்றார்.

அத்தோடு நின்றுவிடாது ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் கால்களைக் கழுவினேன். நீங்களும் ஒருவர் மற்றவருடைய கால்களைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன். (யோவா 13:1415) என அழைப்பு விடுக்கின்றார். இன்று நாம் பிறரின் கால்களைக் கழுவ ஆயத்தமாகி இருக்கிறோமா? அடுத்திருப்பவனின் துன்ப, துயரம், சுமைகள், வறுமை, தனிமை, கண்ணீர் கவலைகளைப் போக்குவது, மனிதத்திற் கெதிரான அநீதி, வன்முறை, கலாசார பிறழ்வுகள் துஷ்பிரயோகங்கள், போதைப் பாவனைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பது போன்ற இரக்கச் செயல்களே இயேசு குறிப்பிட்ட கால்கள் ஆகும். அதனை நிறைவேற்றும்போது நாமும் சமுதாயமும் தூய்மையாக வழி பிறக்கும். எமது விடுதலைக்காக தம்மையே அர்ப்பணித்த இறுதி இராப்போசன விருந்தில் இயேசு அப்பத்தையும் இரசத்தையும் தமது உடலாகவும், ஊனாகவும் எமக்குக் கொடுத்து இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்று கூறி நற்கருணையை ஏற்படுத்தி பணிக்குக் குருத்துவத்தையும் ஆரம்பித்து வைத்தார். உலகம் முடியும் வரை நான் உங்களோடு இருப்பேன் என்றவாறு நற்கருணைப் பிரசன்னத்தால் எம்மை வழிநடத்தி வருகிறார்.




இயேசுவின் தியாக வேள்விக்கு கைமாறாக கோதுமை மணி தன்னை உடைத்து பயன் தருவது போன்று, எம்மை உடைத்து உருமாற்றி, நல்லுள்ளச் செயற்பாடுகளில் ஈடுபடுவோம். ஒருமைப்பாட்டை வளர்த்து சமாதானத்தின் கருவிகளாக இறையரசுக்குச் சான்று பகர்வோம்.

எஸ்.ஜேசுதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** திட்டமிட்ட பணிகள், ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில் வளர்ச்சியால், வருமானம் உயரும். நண்பர், முன்பு கேட்ட உதவியைச் செய்வீர்கள். பெண்கள், ஆடை, ஆபரணங்களை வாங்குவர்.

**இடபம்:** சுயகௌரவத்தைப் பாதுகாக்க முயல்வீர்கள். தொழிலில், பொறுப்பு அதிகரிக்கும். வருமானமும் உயரும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். பிள்ளைகளை வழிநடத்துவதில் இதமான அணுகுமுறை தேவை.

**மிதுனம்:** காலத்தின் அருமை உணர்ந்து பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், விடாமுயற்சியால் சலுகை பெறுவர். ஒவ்வாத உணவு வகைகளை உண்ண வேண்டாம்.

**கடகம்:** நல்லவர் மனதில் இடம் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி பெருகும். தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** தெய்வ நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணம், கொடுக்கல் வாங்கலில் கவனம் அவசியம். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**கன்னி:** மனதில் தைரியம் உருவாகும். தொழில் வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளால் சந்தோசங்களைக் காண்பர். பெற்றோர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** வெளிப்படையாகப் பேசுவதில் தயக்கம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். புதிய இனங்களில் செலவு ஏற்படலாம். விஷ ஜந்துக்களிடமிருந்து விலகியிருப்பது நல்லது.

**விருச்சிகம்:** யதார்த்த பேச்சு பிறர் மனதைச் சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். நம்பகமானவரிடம், பணக்கடன் வாங்குவது நல்லது. வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

**தனுசு:** உங்களை, மற்றவர் விமர்சிக்க நேரிடும். தொழில், வியாபாரத்தில், புதிய மாற்றத்தை மேற்கொள்வீர்கள். இலாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மகரம்:** பணிகளைத் தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், இலாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள், செலவில் சிக்கனமாக இருப்பர். வாகனப் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கும்பம்:** எவரிடமும் சொந்த விடயம் பேசக்கூடாது. தொழில், வியாபாரத்தில், இலக்கு நிறைவேறத் தாமதமாகலாம். நிர்ப்பந்தத்தின் பேரில், கடன் வாங்க வேண்டாம். தெய்வ வழிபாடு நிம்மதியைத் தரும்.

**மீனம்:** மனதில் நல்ல சிந்தனை அதிகரிக்கும். தொழிலில், வருமானம் திருப்திகரமாக இருக்கும். சுப விடயத்தில், நல்ல முடிவு கிடைக்கும். பெண்களுக்கு, சகோதரர் வழியில் உதவி உண்டு.



# இந்தியாவில் ஜாக்கிசான்



தற்போது ஸ்டான்லி டோங் இயக்கத்தில் ஜாக்கிசான் நடித்துவரும் பிரம்மாண்டமான படம் 'குங்பூ யோகா'. இந்தியா மற்றும் சீனா கூட்டுத் தயாரிப்பில் உருவாகி வரும் இந்தப்படத்தில், இந்திய மற்றும் சீன நடிகர்கள் இணைந்து நடித்துள்ளனர். இவர்களுடன் 'அனேகன்' படத்தில் தனுஷுடன் நாயகியாக நடித்த அமைரா தஸ்தூர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். மேலும் வில்லனாக, தமிழ்ப் படங்கள் பலதில் பாகிஸ்தான் தீவிரவாதியாக நடித்த ஹிந்தி நடிகர் சோனு, சூட்டும் இந்தப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஆரிப் ரகுமான் போன்ற இந்திய நடிகர்களுடன், சீன நடிகர்களான ஜாங் யிஜிங், மிங் ஹு உட்பட பலரும் நடித்து வருகின்றனர். உலகின் பல்வேறு நாடுகளில் இடம்பெற்று வரும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு, தற்போது இந்தியாவில் ஜெய்ப்பூரில் இடம்பெற்று வருகிறது. இதில் கலந்துகொள்வதற்காக ஜாக்கிசான் நேற்று முன்தினம் இந்தியா வந்துள்ளார். 15 நாள்கள் இந்தியாவில் தங்கியிருந்து படப்பிடிப்பில் கலந்துகொள்ள உள்ளார். இந்தியாவில் படப்பிடிப்பு முடிந்ததும், சீனாவில் சில காட்சிகளைப் படம் பிடிக்க இருக்கின்றார். இந்தப்படம் ஹிந்தி, தமிழ், ஆங்கில மொழிகளில் உருவாக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.







## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 9 | 3 | 1 | 4 | 8 | 6 | 2 |
| 6 | 4 | 3 | 8 | 9 | 2 | 1 | 5 | 7 |
| 1 | 2 | 8 | 6 | 7 | 5 | 4 | 9 | 3 |
| 4 | 1 | 5 | 2 | 6 | 7 | 9 | 3 | 8 |
| 3 | 6 | 2 | 5 | 8 | 9 | 7 | 1 | 4 |
| 8 | 9 | 7 | 4 | 3 | 1 | 6 | 2 | 5 |
| 7 | 3 | 4 | 1 | 2 | 6 | 5 | 8 | 9 |
| 2 | 5 | 6 | 9 | 4 | 8 | 3 | 7 | 1 |
| 9 | 8 | 1 | 7 | 5 | 3 | 2 | 4 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிக்ள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நான் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன்.
என்னிடம் வந்தாள். 'ஐயா இந்தப் போனிலை எப்படிப் பேசுறது? சொல்லித்தறியா? கையில் புதிய போனுடன்...'
நான் சொன்னேன்: "அம்மா பச்சை பட்டனை அமுக்கினால் பேசலாம்..... சிவப்பு பட்டனை அமுக்கினால் கட் பண்றது" என்று சொன்னேன்....
அதற்கு அந்த அம்மா: "இது என்னோட பையன் வாங்கிக் கொடுத்தது.."
எவ்வளவு பெருமிதம்!! அந்த அம்மா முகத்தில்... என்னோட பையன் வெளிநாட்டில இருக்கிறான்... இரண்டு மாசம் ஆச்சு? கதைக்கவே இல்லை.. அவன் எப்பையாவது போன் பண்ணி இருக்கிறானா பாருப்பா ...?" என்றாள்...
நான் பார்த்தேன்.. அவன் போன் பண்ணவே இல்லை...... நான் சொன்னேன் ஒரு தடவை போன் பண்ணி இருக்கிறாங்க.... நீங்க தான் பார்க்கல பச்சை என்று நினைச்சு சிவப்பு அமுக்கிட்டிங்க போல என்று பொய் சொன்னேன்...
அம்மாக்கு அவ்வளவு சந்தோசம்.. வெளி நாட்டில் இருக்கும் வெளி ஊரில் இருக்கும் சகோதர, சகோதரிகளே உங்கள் தாயிடம் பேசுங்கள்....
"அம்மா" என்ற சொல்லுக்காக ஏங்குபவள்..
அவளுக்கு என்றும் நீங்கள் குழந்தை தான்.






**-- மழையின் காதலன் --**
பெண்களை அசிங்கமா பேசுறவங்களுக்கு ஒரு விடயம் எப்பவும் புரியிறதே இல்ல. அந்த அசிங்கம் பெண்களுக்கு இல்லை, பேசுறவர்களுக்குத் தான் என்று......



**மாடர்ன் தமிழன்** @gowtwits
வீட்டை விட்டு வெளியே புறப்படும் போது நம்மால மறக்கவே முடியாத ஒரு விடயம், செல்போனை எடுத்து விட்டோமா எனச் செக் செய்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 80 | 40 | 40 | 40 | 40 | 25 | 25 |
| கத்தரி | 100 | 40 | 100 | 100 | 100 | 100 | 70 | 80 |
| கரட் | 90 | 100 | 100 | 100 | – | 160 | 80 | 80 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 80 | 100 | 60 | 100 | 140 | 60 | 70 | 50 |
| பாகல் | 100 | 100 | 150 | 120 | 160 | 120 | 90 | 110 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 80 | – | 80 | 120 | 50 | 20 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 75 | 80 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50 | 60 | 60 | 90 | 65 | 65 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 40 | 60 | 35 | 35 |
| தக்காளி | 40 | 40 | 30 | 40 | 30 | 40 | 25 | 25 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கீரை | 30 | 50 | 40 | 20 | 40 | 30 | 20 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 20 | 30 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 120 | 130 | 140 | 120 | 100 | 200 | 100 | 120 |
| புடோல் | 50 | 60 | 50 | 50 | 60 | 60 | 35 | 50 |
| கோவா | 50 | 60 | 60 | 50 | 60 | | 35 | |
| வெண்டி | 50 | 60 | 40–80 | 60 | 80 | 80 | 60 | 60 |
| போஞ்சி | 140 | 120 | 100 | 140 | 140 | 120 | 60 | 70 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 120 | 120 | 160 | 70 | 70 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 50 | 40 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 70 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 100 | 160 | 40 | 110 | 110 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 120 | 160 | 120 | 80 | 80 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 140 | 160 | 140 | – | 110 |
| முருங்கைக்காய் | 700 | 350 | 400 | 350 | 350 | 400 | 350 | 400 |
| பனங்கிழங்கு | 05 | 05 | 04 | 03 | 07 | – | – | – |

# நாகரிகக் கவுண்கள்...






கவுண்கள் அறிமுக மாகியுள்ளன. சில்க் துணியில் மேற்கத்தைய நாகரிகக் கவுண்கள் அறிமுக மாகியுள்ளன. இவை இடுப்புப் பட்டியுடன், கை இன்றி அரைக் கவுணான வடி வமைக்கப்பட்டுள் ளன. இவற்றின் விலை 800 ரூபாவிலிருந்து 1,600 ரூபா ஆகும்.

## எளிதான குறிப்புகள்

எளிதில் வேகவேண்டும் என்பதற்காகப் பலர் சோடா உப்பைப் பயன்படுத்து கிறார்கள். இதனால் உணவுச் சத்துக்கள் அழிந்து விடும்.

சில காய்கள் கசப்பு ருசியுள்ளவை. அவற்றை நறுக்கி அரிசி களைந்த நீரில் சற்று நேரம் போட்டு வைத்தால் கசப்பு நீங்கிவிடும்.

சமையலறையில் வைத்திருக்கும் உப்பில் குளிர்காலத்தில் ஈரக் கசிவு ஏற்படும். அப்படி ஆகாமல் இருக்க, சிறிது அரிசியைக் கலந்து வைக்கவும்.

ஈக்களை விரட்ட சிறிதளவு வசம்பை அரைத்து அல்லது சமையலுக்கு உப யோகிக்கும் உப்பைத் தண்ணீரில் கரைத்து வீடு முழுவதும் தெளித்தால் அந்த இடத்தில் ஈக்கள் தலைகாட்டாது.

**நாளை**
**பங்குனி -12**
**வெள்ளிக்கிழமை**
**25.03.2016**
**திதி: துதியை**
**மு.இ.09.41 வரை**
**நட்சத்திரம்:**
**சித்திரை பி.இ.12.13 வரை**
**ராகுகாலம்:**
**10.45-12.15 வரை**
**சுபநேரம்:**
**06.15-07.45 வரை**
**பெரிய வெள்ளி**

## வெண்டைக்காய் சூப்

**தேவையானவை**

வெண்டைக்காய் - கால் கிலோ
தக்காளி - 1
பெரிய வெங்காயம் - 1
மிளகுத் தூள் - 1 தேக்கரண்டி
பச்சை மிளகாய் - 1
மஞ்சள் தூள் - சிறிது
உப்பு - தேவையான அளவு
வெண்ணெய் - தேவையான அளவு
துவரம் பருப்பு அல்லது பாசிப் பயறு - 50 கிராம்



**செய்யும் முறை**

பச்சை மிளகாயைக் கீறி வைக்கவும். வெங்காயத்தை பொடியாகவும், வெண்டைக்காயை நீள வாக்கிலும் நறுக்கிக் கொள்ளவும்.
சட்டியில் எண்ணெய் ஊற்றி பச்சை மிளகாய், பெரிய வெங்காயம் சேர்த்து லேசாக வதக்கவும்.
பிறகு நறுக்கிவைத்த வெண்டைக்காயைப் போட்டு வதக்கவும்.
வதங்கியதும் மூன்று ரம்ளர் தண்ணீர் சேர்த்து வேக விடவும்.
மஞ்சள் தூள், தக்காளி, உப்புச் சேர்த்து கலவையை நன்றாகக் கொதிக்க விடவும்.
வெண்டைக்காய் வெந்ததும், வேக வைத்து மசித்த பருப்பை இந்தக்கலவையுடன் சேர்த்து நன்றாகக் கொதிக்க விட்டு இறக்கவும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 750 | 600 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 600 | 500 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | 700 | – | – |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 400 | 400 | 300 |
| விளை | 600 | 500 | 400 | 500 | 400 | 300 | 350 |
| முரல் | 300 | 300 | 350 | 450 | 250 | 300 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | – | 250 |
| கிளாக்கன் | 500 | 200 | – | – | 400 | – | – |
| ஓரா | 400 | 350 | – | – | 300 | 400 | – |
| திரளி | 250 | 200 | 200 | 200 | 250 | 200 | – |
| நகரை | 200 | 200 | – | – | 300 | – | 250 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 250 | 200 | 150 | – | 200 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | – | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 350 | 250 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 130 | 100 | – |
| பாலை | 350 | 200 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 350 | – | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்



## அறிமுகமாகின்றது ஸ்மார்ட் குடை

பல தொழில்நுட்பங்களுடன் கூடிய தொடு திரைக் கைபேசியுடன் இணைக்கக் கூடிய (ஸ்மார்ட்) குடையொன்றை பிரான்ஸ் நிறுவனமொன்று வடிவமைத்துள்ளது.

கைபேசியில் இந்தக் குடையின் செயலியை இணைத்துக் கொண்டால் வெப்பநிலை, ஈரப்பதன் போன்ற தகவல்களை அறிந்து கொள்ள முடியும். அதுமட்டுமின்றி குடையை எங்காவது விட்டுச் சென்றால் அது குறித்த அறிவிப்பும் வெளியிடப்படும். இந்த செயலியின் ஊடாக அடுத்த 15 நிமிடங்களில் மழை பெய்யுமா, இல்லையா என்பது குறித்தும் அறிவிப்பு விடுக்கப்படும். அத்துடன் இந்த ஸ்மார்ட் குடையின் மேல் பொருத்தப்பட்டுள்ள கமராவின் உதவியுடன் வானிலைத் தரவுகளையும் பதிவு செய்து கொள்ளலாம்.

## அப்பிளின் புதிய வெளியீடுகள்




கைத்தொலைபேசி தயாரிப்பில் முன் னணியில் உள்ள அப்பிள் நிறுவனம், தனது புதிய தயாரிப்புகளான ஐபாட் புரோ மற்றும் ஐபோன் எஸ்.ஈ. கைபேசி ஆகியவற்றை வெளியிட்டுள்ளது. அப்பிள் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நடந்த விழாவிலேயே இந்த புதிய இரண்டு தயாரிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

9.7 அங்குல அளவையும், 12 மெகா பிக்சல் கமரா, 4 ஜி.பி ரம், 64–பிட் ஏ9எக்ஸ் செயலி, ட்ரு டோன் டீஸ்பிளே, ஐஎஸ்ஓ 9.3இன் நைட் ஷிப்ட் வசதி, நான்கு ஸ்டீரியோ ஸ்பீக்கர்கள், அப்பிள் பென்சில், 5 மெகா பிக்சல் முன்புற கெமரா போன்ற முக்கிய அம்சங்கள் இந்த ஐபாட் புரோவில் அடங்கியுள்ளன. அதே போன்று, 32 GB, 126 GB மற்றும் 256 GB என மூன்று வகைகளில் ஐபாட் புரோ வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, ஐபோன் எஸ்.ஈயின் முக்கிய அம்சங்களாக, 64–பிட் அப்பிள் ஏ9 செயலி, 4 அங்குல திரையுடன் 4கே வீடியோ ரெக்கோர்டிங், 1 ஜி.பி. ரேம், 12 மெகா பிக்சல் கமரா, லைவ் போட்டோ, 16 ஜி.பி. மற்றும் 32 ஜி.பி. சேமிப்பு ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளன. அத்துடன் புளூருத் (4.2), மேம்படுத்தப்பட்ட வை–பை, புதிய மைக்ரோ போன், பிங்கர் பிரிண்ட் சென்ஸாருடன் கூடிய அப்பிள் பே ஆகிய முக்கிய அம்சங்கள் உள்ளன. ஐபோன் எஸ்.இ. கைபேசியானது ஐபோன் 5எஸ் போனை முன்மாதிரியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய வெளியீடுகளைப் பெறுவதற்காக முன்பதிவுகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படுகிறது. அதேபோன்று, 31ஆம் திகதி முதல் இது விநியோகம் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குருதி அழுத்த மீற்றர்களை லிட்ரோ காஸ் தேசிய வைத்தியசாலைக்கு வழங்கியது




**வணிகம்**

இலங்கையில் திரவப் பெற்றோலிய வாயு இறக்குமதியில் ஈடுபடும் மாபெரும் நிறுவனமான லிட்ரோ காஸ், லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா நிறுவனத்துடன் இணைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு குருதி அழுத்த அளவீட்டுக்கருவிகளை அன்பளிப்புச் செய்திருந்தது. சமூகத்துக்கான தனது சமூக பொறுப்புணர்வு செயற் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தது.

குடும்ப சுகாதார செயலகத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம், 100 இலங்கையர்களில் இருபது பேர் உயர் குருதி அழுத்தத்தினால் அவதியுறுவது கண்டறியப்பட்டிருந்ததுடன், இதற்குப் பிரதான காரணங்களாக கிருமிநாசினிகள் பயன்படுத்தப்பட்ட உணவு வகைகள் மற்றும் தவறான உணவுப் பழக்க வழக்க முறைகள் போன்றன கண்டறியப்பட்டிருந்தன. இதன் மூலமாக பொது மக்களுக்கு ஆலோசனைகளை பெறுவது, பரிசோதனைகளை மேற்கொள்வது மற் றும் தொற்றா நோய்களை கட்டுப்படுத்திக் கொள்வது என்பது எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது உறுதியாகியுள்ளது.

வைத்தியசாலைக்கும் நோயாளர்களுக்கும் அனுகூலமளிக்கும் வகையில் 40 குருதி அழுத்த சோதனைக் கருவிகள் பெருமளவு உதவியாக அமைந்திருக்கும். லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட் தலைவர் லில மூனசிங்க, லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிட்டெட் பணிப்பாளர் நோபர்ட் பெர்னாண்டோ, லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிட்டெட் முகாமைத்துவ பணிப்பாளர் ஹேமலால் பெரேரா, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜயசிங்க, தேசிய வைத்தியசாலைகள் கழகத்தின் தலைவர் வைத்தியர் ரிஸ்வி ஃபரூக், ஆகியோருடன், லிட்ரோ காஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட ஊழியர்கள் மற்றும் தேசிய வைத்தியசாலையின் அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கருவிகளை பரிசோதித்திருந்தனர்.

இலங்கையில் திரவ பெற்றோலிய வாயு விற்பனையிலும் சந்தைப் படுத்தலிலும் சந்தை முன்னோடி யாக லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட் செயற்படுகிறது. இணை நிறுவனமான லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிட்டெட் உடன் இணைந்து தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. லிட்ரோ காஸ் வர்த்தக நாமத்தின் உரிமையாண்மையை நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த தனது 5000 விற்பனை மையங்களின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கி வருகிறது. பாதுகாப்பு நியமங் களைக் கடுமையாக பேணுவதற்காக லிட்ரோ காஸ் நன்மதிப்பைக் கொண்டுள்ளது. நிறுவனத்தின் கொள்கையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாகக் கருதப்படுகிறது. (த)

# ஹுவாவி சர்வதேச வர்த்தக நாமத்தின் தூதுவராக லயனல் மெஸ்ஸி நியமனம்

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் மற்றும் தொலைதொடர்பாடல்கள் தீர்வுகளை வழங்குவதில் உலகில் முன்னிலை வகித்து வருகின்ற நிறுவனமான ஹுவாவி, நிறுவனத்தின் புதிய சர்வதேச வர்த்தகநாம தூதுவராக லயனல் மெஸ்ஸியை நியமித்துள்ளமை தொடர்பில் இன்று அறிவித்துள்ளது. மகத்துவத்தை இணைத்து, பகிரப்பட்ட பெறுமதியை நோக்கிய பயணத்தில் மக்கள் மற்றும் வர்த்தகநாமங்களுடன் ஒன்றிணைந்துள்ளதை லயனல் மெஸ்ஸியுடனான பங்குடைமை புலப்படுத்துகின்றது.




எம்முன் எழுகின்ற சவால்கள் நாம் வேண்டுபவையையும், விரும்புவனவற்றையும் சாதிப்பதற்கு எம்மைத் தூண்டுகின்றன. மகத்துவத்துடன் இணைந்து கொள்வதற்கு, வளர்ச்சி, கற்றல், அனுபவங்கள் மற்றும் கஷ்டங்கள் என நாம் இன்று இந்த அளவுக்குச் சிறப்பான ஸ்தானத்தில் திகழுவதற்கு ஏதுவான எமது பயணத்தின் பக்கங்களை நாம் பெரிதும் மதிக்கின்றோம். இதனை சிறப்பாகப் புரிந்து கொண்டுள்ளவர்கள், மேன்மேலும் சிறப்பதற்கு வெற்றியை மட்டும் எப்போதும் பின்தொடர்வதை விடுத்து, சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் தயாராகவே உள்ளனர். இந்தத் தனித்துவமான பண்பே ஹுவாவி மற்றும் லயனல் மெஸ்ஸி இடையிலான நேர்த்தியான தனிச்சிறப்பாக அமைந்துள்ளது.

குறிப்பாக ஹுவாவி பெரிதாக ஈடுபாடுகளைக் கொண்டுள்ள ஐரோப்பா, ஆசியா மற்றும் இலத்தீன் அமெரிக்கா பிராந்தியங்களில் மகத்துவத்தை இணைப்பதற்கு, எமது வர்த்தகநாமத்தின் மீது மக்கள் கவனம் செலுத்தி, விடா முயற்சியுடன், திருப்புமுனையொன்றை ஏற்படுத்துவதை எமது வர்த்தகநாமம் ஊக்குவிப்பதற்கு லயனல் மெஸ்ஸி எமக்கு உதவுவார். அவரும், நாமும் கடந்து வந்துள்ள பாதையை பெரிதும் மதிப்பதுடன், எழுகின்ற ஒவ்வொரு புதிய சவாலுடனும், வெற்றிக்கான பயணத்தைக் கண்டறிவதில் புதுப்பிக்கப்பட்ட வழிமுறைகளுடன், எமது அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டின் மூலமாகவும் இன்று இத்தகைய ஒரு ஸ்தானத்தில் திகழ்கின்றோம் என்று ஹுவாவி நுகர்வோர் வர்த்தகத்துறைக் குழுமத்தின் கைத்தொலைபேசி வியாபாரத்துக்கான தலைமை அதிகாரியான கெவின் ஹோ குறிப்பிட்டார்.

மகத்துவத்துடன் இணைப்பதால், நாம் எமது தீவிர உணர்வை எமது வாடிக்கையாளர்களுக்கு வெளிப்படுத்துகின்றோம். இந்த எண்ணக்கரு லயனல் அவர்களின் வாழ்க்கையையும், அவரது உதைபந்தாட்ட வரலாற்றையும் அச்சொட்டாகப் பிரதிபலிக்கின்றது. லயனல் அவர்களின் வாழ்க்கையில் தொழில் ரீதியான உதைபந்தாட்டத்தில் ஆட வேண்டும் என்ற அவரது அபிலாசைகளையும், கனவு களையும் நிறைவேற்றுவதற்கு அவர் தாய் நாட்டை விட்டுச் சென்றமை அடங்கலாக அவரது முயற்சிகளுக்கு அவரது குடும்பமும் எப்போதும் உறுதுணையாக உள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# மாணவியைக் கடத்திய இருவருக்கும் பிணை

யாழ்ப்பாணம். மார்ச் 24
தனியார் கல்வி நிலையத்திற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவியை பலவந்தமாக மோட்டார் சைக்கிளில் கடத்திச் செல்ல முற்பட்ட குற்றச் சாட்டில் கைதான இருவரும் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணைகளில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.
மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ. யூட்சன் முன்னிலையில், சந்தேகநபர்கள் இருவரும் நேற்று முற்படுத்தப்பட்டனர். இதன்போதே குறித்த இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அத்துடன், அவர்கள் மீதான குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு ஏதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
மானிப்பாய், நவாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குறித்த இரு இளைஞர்கள் தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்றுவிட்டு திரும்பிய சிறுமியை நேற்றுமுன்தினம் சித்தங்கேணி சந்திப்பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் கடத்திச்செல்ல முற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இவ்வாறு கடத்தலில் ஈடுபட்ட போதே, அதனை அவதானித்த அந்தப் பகுதியில் நின்ற இளைஞர்கள் கடத்தல்காரர்களைத் துரத்தி மடக்கிப் பிடித்து நையப்புடைத்த பின்னர், வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.
அத்துடன் குறித்த மாணவி பொலிஸ் பாதுகாப்புடன் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். வழக்குப்பதிவு செய்தவட்டுக்கோட்டைப்பொலிஸார், சந்தேக நபர்கள் இருவரையும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவர்கள்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முற்பட்டு, கையொப்பம் இடுமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
(4,107)

# பிடிபட்டான் சைக்கிள் திருடன்


யாழ்ப்பாணம். மார்ச் 24
யாழ். நகரப்பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்களைத் தொடர்ச்சியாகத் திருடிவந்த குற்றச் சாட்டில் தேடப்பட்டுவந்த நபர், யாழ். இந்துக் கல்லூரியை அண்மித்த பகுதியில் வைத்து நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.
குருநகர் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
கைதான சந்தேக நபரிடம் இருந்து ஆண், பெண் இருபாலரும் பாவிக்கும் துவிச்சக்கரவண்டிகள் இரண்டினையும் பொலிஸார் மீட்டுள்ளனர். குற்றத் தடுப்பு இரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், குறித்த திருட்டுச் சந்தேக நபர் கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.
(வ-4,107)

# இந்திய மீனவர் மூவர் கைது

யாழ்ப்பாணம். மார்ச் 24
நெடுந்தீவுக் கடலில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 3 பேரைக் காங்கேசன்துறைக் கடற்படையினர் கைது செய்துள்ளதாக, கடற்படைப் பிரிவு தெரிவித்தது.
தமிழகம், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த குறித்த மீனவர்கள் விசைப்படகு ஒன்றில் இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடித்துக்கொண்டிருந்துள்ளனர். இரவு சுற்றுக்காவலில் ஈடுபட்ட கடற்படையினர் குறித்த மீனவர்களைக் கைது செய்ததுடன், வலைகள், சான்றுப்பொருள்கள் என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.
காங்கேசன்துறைக் கடற்படைமுகாமில் தடுத்து வைத்துள்ள மீனவர்களை யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் இன்று ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் குறிப்பிட்டனர். (வ-4,107)

## மரண அறிவித்தல்கள்

### றெஜிமஸ் றஜனிகாந்த்



பிறப்பு 1971 . 05 . 07

இறப்பு 2016 . 03 . 22

யாழ்ப்பாணம் 40/2, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் கொண்ட றெஜிமஸ் றஜனிகாந்த் 22.03.2016 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.
அன்னார் ஜோ.மனுவற்பிள்ளை - எலிசபேத் ராணி தம்பதிகளின் புதல்வனும் ஜீவரெட்ணம், நவரெட்ணம், றதி, துரைரெட்ணம் காலஞ்சென்ற பூபதி மற்றும் மலர், யோகராஜா, பாபு, பவளம் ஆகியோரின் அன்பு மருமகனும் பிரதீபன், பிரபாலினி, அகிலன், இமயகாந்தன், றஜீவன், துஷாரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரது பூதவுடல் இன்று (24.03.2016) வியாழக்கிழமை பி.ப 4.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**40/2, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**021 492 1191**

### பலாலி

இது தொடர்பில் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
கடந்த 17 ஆம் திகதி, இந்திய அதிகாரிகள் ஐவர் அடங்கிய குழு, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பலாலி விமான நிலையத்தைப் பார்வையிட்டிருந்தது. இந்தக் குழுவினர் ஓடுபாதையை விரிவாக்கம் செய்யாமலேயே, பலாலி விமானத் தளத்தை, பிராந்திய விமான நிலையமாக தரம் உயர்த்த முடியும் என்று தெரிவித்திருந்தனர்.
வழக்கமாக, விமான நிலையங்கள் கட்டப்படும் போது, எதிர்கால போக்குவரத்து, மற்றும் பெரிய விமானங்கள் என்பன கருத்தில் கொள்ளப்படும். ஆனால், காணி சுவீகரிப்பு தொடர்பான சர்ச்சைகளில் சிக்கிக் கொள்ளாமல், யாழ்ப்பாணத்தில் துரிதமாக விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமாக இருந்தால், ஓடுபாதையை விரிவாக்காமலேயே, அங்குள்ள வசதிகளை தரமுயர்த்துவது மட்டும் தான் சிறந்த தெரிவு என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
தரமுயர்த்தப்பட்ட பலாலி விமான நிலையம், இன்னும் ஒரு ஆண்டில் செயற்படத் தொடங்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
பலாலி விமானத்தளம் தற்போது, 2.3 கிலோ மீற்றர் நீளமான ஓடுபாதையைக் கொண்டுள்ளது. 100 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய போயிங் 717 போன்ற ஒடுங்கிய உடலமைப்பைக் கொண்ட பயணிகள் விமானங்களை இங்கிருந்து இயக்க முடியும் என அதில் கூறப்பட்டுள்ளது. (த-வ-5)

### பாலம்

பெறவில்லை எனவும், அத்தகைய ஒரு பேச்சு இடம்பெறுமாயின் நாடாளுமன்றத்துக்கு தெரியப்படுத்தப்படும் என்று பிரதமர் நாடாளுமன்றத்தில் கூறினார். ஆனால், இந்தப் பயணத்தின்போது இலங்கைப் பிரதமர், இந்தப் பாலம் குறித்து இந்தியப் பிரதமருடன் பேச்சில் ஈடுபட்டார் என்று இந்திய வீதிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்காரி இந்திய நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.
ஆகவே, மேற்படி பாலம் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான கூற்றை விடுத்திருப்பவர் இலங்கையின் பிரதமரா அல்லது இந்திய அமைச்சரா? என்று வினா எழுப்பியிருந்தார்.
இதற்குப் பதிலளித்த பிரதமர், இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் பாலம் தொடர்பில் இந்தியாவுடன் எந்தப் பேச்சும் நடத்தப்படவில்லை - என்றார். (த-வ-5)

### கூகுள்

முடி யாதுள்ளது.
கூகுள் வீதிப் படங்கள் எடுப்பதற்காக, கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தின் அனைத்து வீதிகளிலும் கூகுள் நிறுவனத்தின் கார் ஒன்று பயணம் செய்தது. ஆனால், அந்தக் கார் வலிகாமம் வடக்கின் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் செல்லவில்லை என்பது நேற்று வெளியிடப்பட்ட கூகுள் வீதிப்படங்களின் மூலம் தெரிய வந்துள்ளது.
மேலும், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தைத் தாண்டி, வீதிப் படங்கள் கூகுளில் இல்லை. அதேபோல், எங்கெல்லாம் உயர்பாதுகாப்பு வலய எல்லைகள் தொடங்குகின்றதோ அங்கிருந்து உயர்பாதுகாப்பு வலய எல்லைக்குட்பட்ட இடங்களுக்கான படங்கள் இல்லை.
வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து தற்காலிக இடங்களில் வசிக்கும் மக்கள், கூகுள் நிறுவனம் அறிமுகப்படுத்திய இந்த முறையின் ஊடாக கூட, தமது சொந்த இடங்களைப் பார்வையிட முடியவில்லை என்று கவலை வெளியிட்டுள்ளனர்.
(த-வ-சி)

### சம்பூர்

நுரைச்சோலை அனல்மின்நிலையம் திடீரெனச் செயற்படாமல் நின்று போனதும், மின்சார நெருக்கடிக்கு ஒரு காரணமாகும். இது போன்ற பிரச்சினைகள் தவிர்க்க முடியாதவை - என்றார்
இதேவேளை, எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இதுபோன்ற பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கான சில பரிந்துரைகளையும், திட்டங்களையும் மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
(த-வ)

### சீனாவிடம்

யாவின் மத்திய வங்கியிடம் இருந்து 700 மில்லியன் டொலர் நாணயக் கைமாற்றை வாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (த-வ)

### ஏப்ரல்

பிரதேசங்களிலும் சடுதியாக வெப்பநிலை அதிகரித்துள்ளது. அதிக வெப்பமான கால நிலை காரணமாக பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.
இதற்குரிய காரணம் தொடர்பில் கேட்ட போது, இலங்கை மத்திய கோட்டுக்கு அண்மையில் அமைந்திருக்கின்றது. சூரியன் நேற்று முன்தினத்திலிருந்து மத்திய கோட்டுக்கு உச்சம் கொடுக்கத் தொடங்கியுள்ளது. இதனால் இலங்கையில் வெப்பமான காலநிலை நிலவும்.
சூரியனை நீள்வட்டப் பாதையில் பூமி வலம் வரும். இதன்போது, பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரம் மார்ச் – ஏப்ரல் மாதங்களில் குறையும். இதனால் வெப்பநிலை அதிகரிக்கும். எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இந்த வெப்பமான கால நிலை நீடிப்பதுடன், எதிர்வரும் நாள்களில் இது அதிகரிக்கக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
(த-வ-5-ரி4)

## மரண அறிவித்தல்

### வேலன் கந்தையா

**பிறப்பு- 1942.07.16**　**இறப்பு- 2016.03.23**




நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கந்தையா நேற்று (23.03.2016) புதன் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - பழுத்தலி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயன் பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற சுபத்தி ரையின் அன்புக் கணவரும் சிறீரஞ்சன், சாந்தினி, சிறீராகவன், சிறீமோகன், சிறீதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகலோஜினி, குணசிங்கம், கவிதா, பாமினி, சுமதி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற ஜதுர்ஷன் மற்றும் ரிகாஷன், நிதுஷா, டிலானி, கவிசனா, மகீசன், ரிசானி, சுசில்டா, திபில்சன், துகில்சன், துவிசன், பியந் ஆகியோரின் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

### ஆறுமுகம் அருணாசலம்

(ஓய்வு பெற்ற அதிபர்)



கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அருணாசலம் நேற்று முன்தினம் (22.03.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கமலநாயகி மற்றும் கதிர்காமநாதன்(பப்பா), திலகநாயகி, யோகநாயகி, சவுந்தரநாயகி, பாரதி, உதயச்சந்திரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கம், யோகரத்தினம், சச்சிதானந்தம், சிவதாஸ், லோகரஞ்சினி, பிருந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரபாலினி, சுபர்னன்(கனடா), சஜீபன், சுகந்தினி(ஜேர்மனி), பிரதீபன்(அமெரிக்கா), நித்தியா(சுவிஸ்), சத்தியா(ஜேர்மனி), காண்டீபன்(லண்டன்), சுகந்தன், ராகவன் (லண்டன்), பகீரதி(கொலன்ட்), நிர்மலன், சுஜீபன், கஜரூபன், சுரேக்கா, சுலோஜா, குமுதினி, பவானி, தாராணி, யாதவன், மாதங்கி(ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் கைதடி நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.**

**தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

**077 494 8583**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விபத்தில் 30 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம்,மார்ச் 24

யாழ்ப்பாணம் - பண்ணாகத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டம் நாச்சிக்குடாப் பகுதியில் இடம்பெற்ற திருமண நிகழ்வுக்குச் சென்றுதிரும்பியவர்களின் வாகனச் சக்கரம் வெடித்து விபத்துக் குள்ளானதில், சிறுவர்கள், பெண்கள் உட்பட 30 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற குறித்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம் - பண்ணாகம் பகுதியில் இருந்து கிளிநொச்சி - நாச்சிக்குடாப் பகுதியில் உள்ள உறவினர் வீட்டுத் திருமண நிகழ்வுக்கு தனியார் வாகனம் ஒன்றில் சென்று, பின் யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பியவர்களின் வாகனச் சக்கரம் வெடித்ததில் வாகனம் விபத்துக் குள்ளானது.

குறித்த வாகணம் முழங்காவில் பகுதியில் பயணித்த வேளையிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றது. இதன் போது, சிறுவர்கள், பெண்கள் உட்பட 30 பேர் படுகாயமடைந்த நிலையில், முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டனர்.

இவர்களில் கடும் காயமடைந்த ஆறு பேர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டனர். மேலும் குறித்த விபத்து தொடர்பில் முழங்காவில் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-101)


## WANTED

A leading Construction company is seeking highly motivated and skilled individuals for a Project team

1. **Project Manager**
   *Required Qualifications:* Bachelors in Civil Engineering-with minimum two years experience in contract management. Strong technical back ground would be a big plus, Leadership and Interpersonal skills, who can work independently with little supervision and assistance and willing to travel as required.
2. **Site Engineer / Assistant Engineer**
   *Required Qualifications:* Bachelors in Civil Engineering or NDT Civil Engineering with minimum two years experience who has the ability to work in a project.
3. **Technical Officer**
   *Required Qualifications:* NCT Civil Engineering or etc - with minimum five years experience in road construction.
4. **Quantity Surveyor**
   *Required Qualifications:* HND Quantity surveying with three years experience or Bachelors in Quantity surveying. Experience in Contract claim management is essential.
5. **Administrative Assistant / Accounts Assistant**
   Suitable candidate can apply under 30 years of age.

Interested applicants may drop in their applications along with resume by post to :

**Advertiser, 154, 1st Cross Street, Jaffna.**

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் எமது நிறுவனத்துக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.
- விற்பனையாளர்
- சிட்டை எழுதுநர் (ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் சரளமாக உரையாடக் கூடியவர்கள் விரும்பத்தக்கது)

எதிர்வரும் 26.03.2016 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

**Jaffna Electricals**
No.94(06), Stanley Road, Jaffna.
T.P. 021 2222 353 Fax: 021 222 4302


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி இராசரத்தினம்



நவிண்டில் சக்கலாவத் தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசரத்தினம் நேற்று (23.03.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான அப்பையா - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் கலாநிதி சிவகுமார் (பொறியியலாளர்- UK), நந்தினி (UK), உதயகுமார் (ஜேர்மனி), திருக்குமார், சிவாஜினி ஆகியோரின் அன்புத்தாயும் லோகநாதன் (UK), சசிகலா (UK), கார்த்திகா (ஜேர்மனி), குகன் (தேர்தல் அலுவ லகம் - முல்லைத்தீவு) ஆகியோரின் மாமியாரும் காலஞ் சென்ற தில்லைநாயகம், பரராஜசிங்கம், பூமலர், இராசமலர், தவராஜசிங்கம் (பொது முகாமையாளர் - பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் - உடுப்பிட்டி), குலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் புஸ்பராணி, காலஞ்சென்ற உமாக்குமாரி, இராமநாதன், விமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஹர்சிகா, ஹேசிகா, ரூபிதா, வினிதா, சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளம்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சக்கலாவத்தை,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.
021 226 2440
தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி அபிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. குருநாதபிள்ளை ரஜீபன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி ராசலட்சுமி குருநாதபிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்
நல்லூர் பிரதேச செயலகம்.

(C/22222)
(10.17)

## அஞ்சலிக்கின்றோம்

### இ.தெய்வேந்திரன்

மலர்வு-26.01.1939
மறைவு-23.03.2016



யாழ் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வளர்ச் சிக்காக தனது இறுதிமூச்சு வரை அயராது பாடுபட்டவரும் அந் நிறுவனத்தின் ஆலோசனை குழு உறுப்பினர்களில் ஒருவரும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கௌரவ பெருளாளரின் அன்புக் கணவருமாகிய டாக்டர் இ.தெய்வேந்திரன் அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொன்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின் றோம்.

முகாமைத்துவக் குழுவினரும்
பணியாளர்களும்

## வைத்திய கலாநிதி இராஜசிங்கம் தெய்வேந்திரன்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் காட்டுக்கந்தோர் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வதிவிட மாகவும் கொண்ட வைத் திய கலாநிதி இராஜசிங்கம் தெய்வேந்திரன் நேற்று (23.03.2016) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம் - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராஜதுங்கம் - தையல்நாயகி தம்பதியினரின் அன்பு மருமகனும் வைத்திய கலாநிதி செங்கமலம் (ஓய்வுபெற்ற மயக்க மருந்து வைத்திய நிபுணர் - யாழ் போதனா வைத்தியசாலை, பொருளாளர் யாழ் ஜெய்ப்பூர் நிலையம்) அவர்களின் அன்புக்கணவரும் துஷ்யந்தி (அதிபர் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தமயந்தி (திட்ட இணைப்பாளர் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பரி.யோவான் கல்லூரி), செந்தூரன் (மென் பொறியியலாளர் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துசீதரன் (உபஅதிபர் - யாழ் பரியோவான் கல்லூரி), மோளி லோரன்ஸ் (முகாமை யாளர் - ஹற்றன் நஷனல் வங்கி - சங்கானை), தர்ஷிதா (மென்பொறியியலாளர் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் திவ்யா, டெவின், டனிஷா, டிவேஷ், டிஷ்னா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இராஜ மனோகரன் மற்றும் நிந்தியானந்தன், அருள்மலர் ஆகியோ ரின் அன்புச்சகோதரனும் நகுலேசதேவி, கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

**0777 283616, 0777 316487**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
21
04
1956



மறைவு
25
02
2016

**அமரர் கிருஷ்ணர் குணரட்ணம்**

கடந்த 25.02.2016 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் கிருஷ்ணர் குணரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.03.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 26.03.2016 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் நடைபெறும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(70202)(15.17)

077 8469 113
குடும்பத்தினர்.


## Vacancy

**Customer Care Executive**



Eligible candidates;
*Must have good proficiency in English (IELTS 4.5 preffred)
*Ability to work day or night basis
*Have good communication skills
*Manageable computer skills

Benefits;
*Attractive salary with OT
*Accommodation Provided
*Full time & Part Time

## நிரந்தர வேலை வாய்ப்பு

டயானா பிளாஸ்ரிக மீள் சுழற்சி

*பைவர் வேலை தெரிந்தவர்கள் (பெண்கள்)

*பிளாஸ்டிக் தரம் பிரித்தல் (பெண்கள்)

சம்பளம் ஒரு நாளைக்கு
ETF,EPF உட்பட-500

30/27 2ஆம் ஒழுங்கை
மூர்த்த விநாயகர் வீதி,நல்லூர்.

T.P 0775925088


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



20.03.2016 ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் 2014, 2015 ஆம் ஆண்டிற்கான பட்டம் அளிப்பு விழாவில் எமது ஆசிரிய நண்பன்

**அருளம்பலம் போல்கார்டிங் B.A**

அவர்கள்

**கலைமாணிப் பட்டம் (B.A)**

பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
26 ✦ 01 ✦ 1939



மறைவு
23 ✦ 03 ✦ 2016

வைத்திய கலாநிதி

## இராஜசிங்கம் தெய்வேந்திரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயரடையும்**


சிங்கம்ஸ் இல்லம்
கோண்டாவில்.

சிங்கம்ஸ் பார்மசி
கோண்டாவில்.

# மரண அறிவித்தல்

## நாகமுத்து சச்சிதானந்தம்

பிறப்பு
1933 . 04 . 14



இறப்பு
2016 . 03 . 22

வடதுன்னாலையைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடக்கு விராவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சச்சிதானந்தம் 22.03.2016 செவ்வாய்க் கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - அம்மன்குட்டி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிரவேல் - இரத்தினம் தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெயராஜ சிங்கத்தின் அன்புச் சகோதரனும் பிறை சூடி (ஆதாரவைத்திய சாலை, பருத்தித்துறை), பிரகதீஷ்வரி, பிரதிவிராஜ்(சுவிஸ்), பிரணவன்(பொருள், பிரதேசவைத்தியசாலை - ஊறணி வல்வெட்டித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரன் (வேலுக்குட்டி - பிரான்ஸ்), ரதி, சுகந்தி (சுவிஸ்), வசந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ் சென்றவர்களான சிவபாக்கியம், அம்பிகாபதி மற்றும் விவே கானந்தன், மனோகர் (சுவிஸ்), அருந்ததி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் தாமரகுமாரி, ஜெயக்குமாரி, சுபாகு ஆகியோரின் பெரிய தந்தையும் பிரியலக்ஷன், பிரியர்ச்சனா, பிரவீன், ஆரணி,தனுஷன், கேதுசன், விதுஷன், நிதுஷன், நிந்துஷா, சயூந்(சுவிஸ்), சுவேன்(சுவிஸ்), சருஜன், அபிஷா, மேனகா ஆகியோரின் அன்புப் பேரனும் பிரணாவ்வின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2016) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பாங்கு வேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விராவோடை,
அல்வாய்வடக்கு, அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 776 7802/ 077 501 7522

# மரண அறிவித்தல்

பிறப்பு
14 . 03 . 1930



இறப்பு
22 . 03 . 2016

## திருமதி கண்ணம்மா சரவணமுத்து

யாழ். புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணம்மா சரவணமுத்து 22.03.2016 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னதங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், செல்வராணி, காலஞ்சென்றவர்களான ஆனந்தநாதன், இந்திராணி மற்றும் சற்குணநாதன், குமரகுருநாதன், கேதீஸ் வரநாதன், ஜீவராணி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சீவரெத்தினம் அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் பாக்கியம், வாசுகி, இலங்கேஸ்வரி, சத்யலதா, பிறேமதாஸ், சிவானந்தி, சதானந்தி, சிவகாந்தன், சிவசுரதன், சிவதீபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இரத்தினசோதி காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தயாகரன், நவரூபன், நவநந்தினி, யதீசன், திலீபன், சூர்யா, ஆதிசன், ஆர்த்திகா, சந்தோஸ், சதூன், சௌமியா, வேதிகா, சாகித்யா, விமலருபன், டெனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சைந்தவி, டினகர், சவின், மேஷிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

958/2, கே.கே.எஸ் றோட்,
நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். (70205) (15,17)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி சிவக்கொழுந்து தங்கத்துரை

தெடுத்தனை, கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து தங்கத்துரை நேற்று (23.03.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா தங்கத்துரை(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) அவர்களின் அன்பு மனைவியும் யசோதா (ஆசிரியை - யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்), ஜனனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஸ்ணகுமாரன் (கணக்காய்வாளர் அலுவலகம், தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்), இரகுநேசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்மலிங்கம், செல்வரத்தினம், மீனாட்சி ஆகியோரின் அன்புச்சகோதரியும் கஜேந்திரன் (லண்டன்), சுபிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும் அனுஸ்தன், அஸ்வின், ஆத்விக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெடுத்தனை,
காவெட்டி கிழக்கு.

(c/22228) (15,17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை சம்பியனானது கரம் தொடரில்

மாங்குளம், மார்ச் 24
வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 19வயதுப் பெண்களுக்கான கரம் தொடரில் சுந்தரபுரம் அ.த.க. பாட சாலை கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.
சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் முதலாமிடத்தை சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை புதுக்குளம் மகா வித்தியாலய அணியும் பெற்றன. (ம-422)

## நொச்சிமோட்டை கனிஷ்ட பாடசாலை வவுனியா சதுரங்கத்தில் சாதித்தது

மாங்குளம், மார்ச் 24
வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 19வயது ஆண்களுக்கான சதுரங்கத்தில் நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தரப் பாடசாலை அணி சம்பியனானது.
சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இந்தத் தொடரில் முதலாமிடத்தை நொச்சி மோட்டை கனிஷ்ட உயர்தரப் பாடசாலை அணியும் இரண்டாமிடத்தை புதுக்குளம் மகா வித்தியா லய அணியும் மூன்றாமிடத்தை சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணியும் பெற்றன. (ம-422)

## தொண்டமானாறு அடுத்த சுற்றுக்குள்

கரணவாய், மார்ச் 24
இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 8 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப் பாட்டத் தொடரில் சுப்பர் ஓவர் வரை சென்ற பரபரப்பான ஆட்டத்தில் எதிரணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது தொண்டமானாறு விளையாட்டுக் கழகம்.
இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் தொடர் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் தொண்டமானாறு விளையாட்டுக் கழகமும் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தொண்டமானாறு அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சதீஸ் 10 ஓட்டங்களையும், சஞ்சி 7 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பானு 4 இலக்குகளையும், கயன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.
61ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு களமிறங்கிய வல்வை அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. அதிகபட்சமாக நிதி 17 ஓட்டங்களையும் சதீஸ் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கோகிலன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.
வெற்றியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெடியகாடு அணி 3 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. 4 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய தொண்டமானாறு அணி 4 ஆவது பந்தில் இலக்கை அடைந்தது. (ம-108)



# கிண்ணம் வென்றது ஹாட்லி வடமராட்சி வலய கால்பந்தில்

கரணவாய், மார்ச் 24
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 19வயது ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.
ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதியது. நீண்ட நேரப் போராட்டம் வெளிப்பட்டதுதான் மிச்சம் எந்த அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடியாமல் கோல் கணக்குகள் இன்றி முடிவுக்கு வந்தது முதல் பாதி. முதல் பாதியில் இருந்த போராட்டத்தன்மை இரண்டாம் பாதியில் நீடிக்கவில்லை. 4 ஆவது நிமிடத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியின் மதுசன் தனக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்த அந்த அணியின் ஆதிக்கம் ஆரம்பமானது. பதிலடி கொடுக்கும் முனைப்பில் ஹாட்லிக் கல்லூரியின் வீரர்கள் பாதாடபட்டனர். ஆட்டம் முடிவடைவதற்கு 2நிமிடம் இருக்கும்போது ஹாட்லிக் கல்லூரி அணிக்கு தண்டனை உதை கிடைத்தது. தேடிவந்த வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்திய நிதுசாந் ஹாட்லியின் ஆதிக்கத்தையும் ஆட்டத்தில் நிலைப்படுத்தினார். தற்பொழுது நிலைமை 1:1. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணம் தீர்மானமாகும் நிலைமை. இதில் ஹாட்லிக் கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-108-422)

## சம்பியனானது சோமஸ்கந்தா யாழ். வலய கரப்பந்தாட்டத்தில்

மாங்குளம், மார்ச் 24
யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 17வயது ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணி மோதியது. இதில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:21, 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் வென்று கிண்ணத்தை தனதாக்கியது. மூன்றாமிடத்தை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், மார்ச் 24
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கண்ணகி விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

## கிண்ணம் மானிப்பாய் இந்துவிடம்

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 17வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது. ஹென்றிஸ் கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றே அந்த அணி சம்பியன் ஆனது. (ம-422)

# இருதயராஜா, யுத் அணிகள் அடுத்த சுற்றுக்குள்; திக்கம் இளைஞர் வி. கழகத்தின் கால்பந்தாட்டத்தில்

கரணவாய், மார்ச் 24
திக்கம் இளைஞர் வி.கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் எதிரணிகளை வீழ்த்தி அடுத்த சுற்றுகளுக்கு முன்னேறின மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் மற்றும் வரணி யுத் விளையாட்டுக் கழகம்.

**யுத் - சென்.சேவியர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் குறித்த தொடர் திக்கம் இளைஞர் வி.கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வரணி யுத் விளையாட்டுக்கழகமும் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. கோல் கணக்கும் ஆரம்பிக்கப்படாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் முதல் பத்து நிமிடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் ஆட்டத்தின் முதல் கோலைப் பதிவு செய்து எதிரணிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தார் வரணி யுத் அணியின் ரூபன். நீண்டநேரப் போராட்டத்தின்பின் 41 ஆவது நிமிடத்தில் பதில் கோலைப் பதிவுசெய்து சமநிலைப் படுத்தினார் சென். சேவியரின் றொசான். 45 ஆவது நிமிடத்தில் இந்திரகுமார் யுத்தின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்திய போதிலும், இறுதி நிமிடத்தில் சேவியர் பதிலடி கொடுக்க ஆட்டம் சமநிலையானது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது வரணி யுத் விளையாட்டுக் கழகம்.



**இருதயராஜா-சிவகுரு பொற்பதி**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகமும் கொக்குவில் சிவகுரு பொற்பதி விளையாட்டுக்கழகமும் மோதின.
முதல்பாதியாட்டம் ஆரம்பமாகி 5ஆவது நிமிடத்தில் இருதயராஜா அணி சார்பாக பிரபாகரன் முதல் கோலைப் பதிவுசெய்தார். நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளாமல் 13 ஆவது நிமிடத்தில் பொற்பதியின் சார்பாக டெறன்ஸ் பதிலடி கொடுக்க சூடானது ஆட்டம். அடுத்த மூன்றே நிமிடத்தில் இருதயராஜா அணியின் கிளறன்ஸ் மற்றொரு கோலைப் போட, அந்த அணியின் ஆதிக்கத்துடன் 2:1 என்று முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 20 ஆவது நிமிடத்தில் ஜெயப்பிரதாஸ் மூலம் ஆட்டத்தை சமநிலைக்கு கொண்டுவந்தது பொற்பதி. தற்பொழுது நிலைமை 2:2. ஆட்டம் நிறைவடையும் நேரம் நெருங்கிய வேளை அருமையான கோல் ஒன்றைப் பதிவு செய்து, மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியை வெற்றிப்பாதைக்கு கொண்டு சென்றார் முன்கள வீரர் பிரபாகரன். (ம-108)

## புதுக்குளம் ம.வி. அசத்தல்

மாங்குளம், மார்ச் 24
வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 15வயது இருபாலருக்குமான சதுரங்கத் தொடர்களில் இரு பிரிவிலும் புதுக்குளம் மகா வித்தியாலய அணிகள் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளன. ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை தரணிக்குளம் கணேஸ் வித்தியாலய அணியும் மூன்றாமிடத்தை சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணியும் பெற்றன. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கலில் ரஷ்யா

ரஷ்யாவைச் சேர்ந்த 4 தடகள வீர,வீராங்கனைகள் ஊக்க மருந்துச்சோதனையில் பிடிபட்டுள்ளனர். நால்வரும் மெல்டோனியம் என்னும் ஊக்க மருந்தைப்பயன்படுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை செரபோவாவும் இதே ஊக்க மருந்தைப் பயன்படுத்தித்தான் சிக்கினார். இந்த ஆண்டின் ஆரம்பத்தில்தான் மெல் டோனியம் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துப் பட்டியலில் சேர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சுந்தரபுரம் அ.த.க. கிண்ணம் வென்றது

மாங்குளம், மார்ச் 24

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 19வயது பெண்களுக்கான சதுரங்கத் தொடரில் சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணி சம்பியனானது.

சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தச்சதுரங்கத் தொடரில் முதலாமிடத்தை சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணியும் இரண்டாமிடத்தை புதுக்குளம் மகா வித்தியாலய அணியும் மூன்றாமிடத்தை நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தரப் பாடசாலை அணியும் பெற்றன. (ம-422)

# தப்பிப் பிழைத்தது கிரிக்கெட்டின் தாயகம் ஆப்கானிஸ்தானின் அச்சுறுத்தலில் இருந்து



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 15 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் வின்ஸ். ஹம்சாவின் பந்துவீச்சில் ஐந்தே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் றோய். ஆறாவது பந்துப்பரிமாற்றத்தை வீசிய நபி, மூன்றாவது பந்தில் வின்சையும் நான்காவது பந்தில் மோர்கனையும் வெளியேற்றினார். இந்தப் பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தில் ரூட் ரண்அவுட் ஆகினார். பட்லரை வெளியேற்றினார் சென்வாரி. தற்பொழுது இங்கிலாந்து 50-5. ஸ்ரோக்ஸ், மொயின் அலி இணையாலும் நீடிக்க முடியவில்லை. ஏழே ஓட்டங்களுடன் ரசிட் கானின் பந்துவீச்சில் போல்ட் ஆனார் ஸ்ரோக்ஸ். இங்கிலாந்தின் இறுதி நம்பிக்கையாக களத்தில் மொயின் அலி. வில்லியும் தாக்குப்பிடிக்க இருவரும் இணைந்து இறுதி மூன்று பந்துப்பரிமாற்றங்களையும் பிரித்து மேய்ந்தனர். முடிவில் இங்கிலாந்து 142-7. அதிகபட்சமாக மொயின் அலி 41 ஓட்டங்களையும், வின்ஸ் 22 ஓட்டங்களையும், வில்லி ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் சார்பாக நபி, ரசிட் கான் இருவரும் தலா இரு இலக்குகளையும், சென்வாரி, ஹம்சா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது ஆப்கானிஸ்தான். செசாட் ஐந்து பந்துப்பரிமாற்றங்கள் நிலைத்துவிட்டால், ஆப்கானிஸ்தான் இங்கிலாந்துக்கு அதிர்ச்சி வைத்தியம் வழங்கினாலும் ஆச்சரியமில்லை. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே செசாட்டை வெளியேற்றினார் வில்லி. ஸ்ரானிக்ஸை ஒரு ஓட்டத்துடனும் நையிப் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழக்க ஆப்கானிஸ்தான் 13-3. சடான், ரசிட் கான் இருவரும் ஆட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முனைந்த போதிலும் இங்கிலாந்தின் சுழல் வீரர்கள் அனுமதிக்கவில்லை. சடானை வெளியேற்றினார் ரசிட். ரசிட் கானை வெளியேற்றினார் மொயின் அலி. இலக்குச் சரிவுகள் ஒருபுறம் இருக்க பந்துகளும் வீணடிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதுவும் ஓர் வகையில் பின்னடைவே. சபியுர்லா பின்வரிசையில் சிறிது அச்சுறுத்திய போதிலும் இங்கிலாந்தை தோற்கடிக்க இயலவில்லை. முடிவில் ஆப்கானிஸ்தான் 127-9. அதிகபட்சமாக சபியுர்லா 35 ஓட்டங்களையும், சென்வாரி 22 ஓட்டங்களையும், நூர் அலி சடான் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக வில்லி, ரசிட் இருவரும் தலா இரு இலக்குகளையும், ஜோர்தான், மொயின் அலி, ஸ்ரோக்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். மொயின் அலி ஆட்டநாயகனானார். (ம)

# கிண்ணம் வென்றது கொக்குவில் இந்து

## யாழ். கூடைப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

திருக்குடும்பக்கன்னியர் மட அணியை வீழ்த்திய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி யாழ் வலய மட்ட சம்பியனானது.

யாழ். கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது. கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 40:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. (ம-23)



# தலைமைத்துவத்தை இழக்கிறார் அப்ரிடி ஓய்வை அறிவிக்கவும் வாய்ப்புண்டு

நடைபெற்றுவரும் ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் பின்பு,பாகிஸ்தான் அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து அப்ரிடியை நீக்கத் திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவரான சகாரியர் கான் தெரிவித்துள்ளார்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியாவுடன் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர் அப்ரிடியின் தலைமைத்துவம் பறிபோகலாம் என்று கருத்துக்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே சகாரியர் கான் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

அப்ரிடி தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - ரி-20 உலகக்கிண்ணத் தொடருடன் தலைமைப் பதவியில் இருந்து அப்ரிடி விலகவேண்டும். இதை அவரும் புரிந்து கொண்டுள்ளார். அவர் பதவி விலகாத பட்சத்தில் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்படுவார். பாகிஸ்தான் கிண்ணத்தை வென்றாலும் கூட அதில் மாற்றம் இருக்காது. மேலும், அவர் ஒரு வீரராக மட்டும் அணியில் நீடிக்க



விரும்பினால், அவரைத் தேர்வு செய்வதா வேண்டாமா என்பது பற்றி பிறகு முடிவு செய்யப்படும் - என்றார். (ம)




# ரியோ ஒலிம்பிக் தொடருடன் விடைபெறவுள்ளார் போல்ட்

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் இந்த வருடம் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடருடன் ஓய்வு பெறத் திட்டமிட்டுள்ளதாக ஜமைக்காவின் ஓட்டப்பந்தய வீரரான உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

6 முறை ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற உசைன்போல்ட் முன்னதாக 2020ஆம் ஆண்டு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் தொடருடன் ஓய்வு பெறுவேன் என வெளிப்படுத்தியிருந்த நிலையில், தற்பொழுது அவர் தனது முடிவைமாற்றி இந்தவருடத்துடன் ஓய்வு பெறுவதாகத் தெரிவித்துள்ளார்.

தனது ஓய்வு தொடர்பாக போல்ட் வெளிப்படுத்துகையில் - ரியோ ஒலிம்பிக் தொடரே நிச்சயமாக நான் பங்கேற்கும் கடைசி ஒலிம்பிக் தொடராக இருக்கும். இன்னும் 4 ஆண்டுகளுக்கு இதே உத்வேகத்தைத் தக்கவைத்து அடுத்த தொடரில் பங்கேற்பது எனக்கு சாத்தியமற்றது. எனவே ஓய்வு பெறுவது என முடிவு செய்துள்ளேன். இந்த ஒலிம்பிக் தொடரில் மூன்று தங்கப் பதக்கங்களை வெல்ல வேண்டும் என்பதே எனது இலக்கு. 200 மீற்றர் தூரத்தை 19 வினாடிகளுக்கும் குறைவான நேரத்தில் ஓடிக் கடக்க வேண்டும். அந்த இலக்கை அடைவதை எதிர்நோக்கியுள்ளேன்- என்றார். (ம)

## கால்பந்தாட்ட அரையிறுதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 19வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. (ம-23)

# கபடியில் கலக்கியது பருத்தித்துறை மெதடிஸ்

கரணவாய், மார்ச் 24

வடமராட்சி வலய மட்டப் பெண்களுக்கான கபடித் தொடரில் 19 வயதுப் பிரிவில் நடப்பு வருடச் சம்பியனாகியது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இந்த இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் பலப்பரீட்சை நடத்தின. இதில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 31:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனாகியது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரசிகர்களை இருக்கை நுனிக்கே கொண்டு சென்ற ஆட்டத்தில்

# ஒரு ஓட்டத்தால் இந்தியா திரில் வெற்றி பலமாகப் போராடியது பங்களாதேஷ்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இந்தியா, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஒரு ஓட்டத்தால் இந்திய அணி வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. தவான் அணியில் வெளியேற்றப்படுவார் போன்ற கருத்துக்கள் வெளியாகிய போதிலும் எந்தவித மாற்றமும் இல்லாமல் அதே அணியே களமிறங்கியது. பவர் பிளேயின் இறுதிப்பந்துவரை இலக்குச் சரிவு ஏற்படவில்லை. ஆனால் ஓட்டங்கள் வேகமாகப் பெறப்படவில்லை. ஆறு பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இந்திய அணி 42-1. ரோகித் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார். தவான், கோக்லி இணை அதிகம் நிதானித்தது. தவானை எல்.பி. டபிள்யூ. ஆக்கினார் சகிப் அல் கசன். கோக்லியை 24 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் ஹொம். 24 ஓட்டங்களுக்காக கோக்லி 24 பந்துகளை எடுத்துக்கொண்டார். இதுவும் ஓர் வகையில் இந்தியாவுக்குப் பின்னடைவே. ஐந்தாம் நிலை வீரராக யுவராஜை அல்லாமல் பாண்டியாவை களமிறக்கினார் டோனி. சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் பாண்டியா. இருப்பினும் நீடிக்க அனுமதிக்கவில்லை. 12 பந்துகளை எதிர்கொண்ட போதிலும் டோனியால் முடிந்தது 13 ஓட்டங்களே. முடிவில் இந்தியா 146-7. அதிகபட்சமாக ரெய்னா 30 ஓட்டங்களையும், கோக்லி 24 ஓட்டங்களையும், தவான் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக அல் அமின் கொசைன், ரகுமான் இருவரும் தலா இரு இலக்குகளையும், ஹொம், சகிப் அல் கசன், முகமதுல்லா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது பங்களாதேஷ். ஆரம்ப வீரர் களாக தமீம் இக்பால், மிதுன். ஓர் ஓட்டத்துடன் முடியவேண்டிய முதல் பந்தை, களத்தடுப்பில் கோட்டை விட்டு பவுண்டரியாக்கிவிட் டார் பும்ரா. ஒரே ஓட்டத்துடன் மிதுனை வெளியேற்றினார் அஸ்வின். இக்பால், ரகுமான் இணைய மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது பங்களாதேஷ். இக்பாலின் வாய்ப்பை பும்ரா தவற விட பங்களாதேஷ்க்கான வாய்ப்பு இன்னும் அதிகமானது. மின்னல் வேக ஸ்டம்பிங் மூலம் இக்பாலை வெளியேற்றினார் டோனி. மிரட்டிய சகிப் அல் கசனை வெளியேற்றினார் அஸ்வின். வந்த வேகத்தில் சிக்சரை விளாசினார் மோர்ரசா. இந்த சிக்சர் ஒன்றே அவரால் பெறப்பட்ட ஒட்டுமொத்த ஓட்டங்களுமாகும். இறுதி ஏழு பந்துப்பரிமாற்றங்களில் இந்தியாவின் களத்தடுப்பு இரும்பு அரண் போல இருந்தது. புலிப்பாய்ச்சல்கள் அறம்புறமாக அரங்கேறின. இறுதி மூன்று பந்துப்பரிமாற்றங்களில் 24 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலைமை. நெக்ரா சிறிது ஓட்டங்களை அதிகமாக வழங்கினாலும் பும்ரா 5 ஓட்டங்களுடன் 19ஆவது பந்துப்பரிமாற்றத்தை நிறைவு செய்தார். இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 10 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலைமை. பந்து பாண்டியாவிடம் சென்றது. அடுத்தடுத்து இரு பவுண்டரிகளை விளாசினார் ரகிம். இறுதி மூன்று பந்துகளில் ஓர் ஓட்டத்தைப் பெற்றால் ஆட்டத்தை சமநிலையில் முடித்து விடலாம். இரண்டு ஓட்டங்களைப் பெற்றால் இந்தியாவை வீழ்த்தி விடலாம் என்ற நிலையில் தொடர்ச்சியாக மூன்று இலக்குகளையும் இழந்து ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது பங்களாதேஷ். அதிகபட்சமாக இக்பால் 35 ஓட்டங்களையும், ரகுமான் 26 ஓட்டங்களையும், சகிப் அல் கசன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக அஸ்வின், ஜடேயா, பாண்டியா மூவரும் தலா இரு இலக்குகளையும், நெக்ரா, ரெய்னா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். அஸ்வின் ஆட்டநாயகனானார். (ம)

## அயர்லாந்தை பந்தாடியது தென்னாபிரிக்கா பெண்கள் ரி-20 உலகக் கிண்ணத்தொடரில்



பெண்களுக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்கா, அயர் லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 67 ஓட்டங்களால் வெற்றி பெற்றது தென்னாபிரிக்கா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்பம் சொல்லிக் கொள்ளும்படியாக அமைய 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் தென்னாபிரிக்கா 5 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிட்டி 35 ஓட்டங்களையும், லீ 30 ஓட்டங்களையும், தேவ் நரைன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அயர்லாந்து சார்பாக கார்த் 2 இலக்குகளையும், மெட்கல்பி, ஜொய்ஸ், லூயிஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது அயர்லாந்து. ஆரம்ப வீராங்கனை சில்லிங்டன், அணித் தலைவி ஜொய்ஸ் இருவரைத் தவிர வேறு எவரும் இரட்டை ஓட்டங்களை எட்டவில்லை. 20 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் அயர்லாந்து 89-9. அதிகபட்சமாக சில்லிங்டன் 34 ஓட்டங்களையும், ஜொய்ஸ் 22 ஓட்டங்களையும் கனலி 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவிச்சில் தென்னாபிரிக்கா சார்பாக லூயிஸ் 5 இலக்குகளையும், டானியல். கப் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பரீட்சைகள்!
MCQ tutor
- வீட்டில் இருந்தபடியே தினமும் ஒரு பரீட்சை
- பரீட்சை முடிந்ததும் உடனடி பெறுபேறு
- ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடை
- தேவையானவற்றிற்கு விடைக்கான விளக்கம்
- தன்னியக்க நேரக் கணிப்பான்
- விரும்பிய நேரத்தில் பரீட்சை

ஒரு பரீட்சைக்கான கட்டணம் ரூபா 10/- மட்டுமே.
www.MCQTutor.com
பதிவுகள் மற்றும் மேலதிக விவரங்களுக்கு
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 04 77 33, 021 221 6222

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
மணிக்கூட்டுவீதி, யாழ்நகர்.
A/L 2018
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
26.03.2016
சனி 8.00 மணி
T.P: 077 469 6695

புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு
ஞானோதய அக்கடமி
(சங்கத்தானை, சாவகச்சேரி)
A/L 2018 கலை, வர்த்தகம், தொழில்நுட்பம், கணிதம், உயிரியல்
ஆரம்பம்: 26.03.2016 சனி: 8.00 மணி
- யாழ்மாவட்ட பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
- இம்முறை தொழில்நுட்ப பிரிவால் செயன்முறை வழிகாட்டல்களுடன் துறைசார் நிபுணத்துவமிக்க ஆசிரியர் குழாம்.
- A/L Day Class வகுப்புக்களும் சிறப்பாக நடைபெறுகின்றது.
- நிர்வாகம் -

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ் றோட், இணுவில்.
இரு இடத்திலும்
மீண்டும் புதிய பிரிவு ஆரம்பம்
சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
A/L 2018 கலை, வர்த்தகம், தொழிநுட்பப்பிரிவு
ஆரம்பம் 26.03.2016 சனி 8.00 a.m
Note:-
- எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணியிலும் இதே திகதியில் ஆரம்பமாகின்றன.
- நீங்கள் விரும்பிய இடங்களில் உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

வேலைவாய்ப்பு!
அலிசன் நிறுவனத்தின் கொக்குவில், இணுவில் மற்றும் கிளிநொச்சிக் கிளைகளில் பணிபுரிவதற்கு 18 - 30 வயதிற்குட்பட்ட பெண் பயிலுனர்கள் தேவை.
077 986 6409

A/L பொருளியல்
MCQ BOOK-1 ரூபா 90/=
ஐந்தாம் பதிப்பு
புதிய வினாத்தாள் அமைப்பில் மேலதிக மீட்டல் 224 வினாக்களுடன்
2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெறுவதற்கு வழிவகுத்த மற்றும் பொருளியல் நூல்கள்
ஆசிரியர் வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தக சாலை
அன்னை புத்தக சாலை

Jaffna's No 1 for Gr 6 to O/L
எடிசன் அக்கடமி
Intent + Effort + Grace = Success
யாழ்ப்பாணம், கலட்டி, நல்லூர், கொக்குவில், சுன்னாகம்
24 பேர் 9A
2015 O/L வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| 01.S.சுதசபா | 09.A.அன்புச்செல்வன் | 17.N.கிஷாந்திகா |
| 02.S.செந்தூர | 10.S.புகழோன் | 18.V.விமலினி |
| 03.N.சுஜீவன் | 11.K.வித்தகன் | 19.T.பிரியங்கா |
| 04.N.நிரஞ்சன் | 12.S.கோபிநாத் | 20.P.கோபிசாளினி |
| 05.R.அட்சயன் | 13.K.வைஸ்ணவி | 21.K.வர்த்தினி |
| 06.T.நீலலோகன் | 14.K.அபிராமி | 22.T.தமிழினி |
| 07.L.கிஷாந் | 15.K.சாங்கவி | 23.A.கேசவி |
| 08.E.ஜோய்விதுஷன் | 16.S.சங்கவி | 24.S.அபினயா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.